بسم الله الرحمن الرحيم

“

எந்த ஒரு
சமுதாயத்தவரும்,
தம் நிலையை
தாமே
மாற்றிக்கொள்ளாத
வரையில்
அல்லாஹ்
அவர்களை
நிச்சயமாக
மாற்றுவதில்லை.

- அல்குர்ஆன்- 13:11

”


வெள்ளையனே வெளியேறு இயக்கமும் சங்கப் பரிவாரமும்? - 6

சிறையில் ஒரு நீதிபதி - 12

தலீத் நீதிபதிக்கு நீதி கிடைக்குமா? - 18

12 ஆண்டுகளுக்குப் பின் 10 முஸ்லிம்கள் சிறையிலிருந்து விடுதலை - 20

பாபரி மஸ்ஜித் வழக்கு அரசின் இன்னொரு சதி - 22

அமெரிக்காவில் ஹிஜாப் - 25

விடுதலைப் போரில் இந்துக்களும் முஸ்லிம்களும் - 26

கற்காலம் ஒரு வரலாற்றுப் பொய் - 34

எது முதலில் ? - 38

வெடிக்கப்போகும் பலூன்..! - 41

அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கு ஆபத்து? - 48

சிரியாவில் நடப்பது உள்நாட்டு யுத்தமா? - 52

பொய்மையே வெல்லும் ? - 55

சமூக நலனில் பெண்கள் - 56

பீகார் மாநிலத்தில் நித்திஷ்குமாரின் துரோகம்? - 61

மோடி இந்தியாவின் பிரதமரா? அல்லது பி.ஜே.பிக்கு பிரதமரா? நீதிமன்றம் கேள்வி - 64



செப்டம்பர்-2017 துல்ஹஜ்-1438

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர்
மு. குலாம் முஹம்மது, M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

http:/www.facebook.com/vaigarivelicham

## தலையங்கம்

# சாதியம்! மதமாற்றமே தீர்வு!

கடந்த வாரம் சென்னையில் உள்ள செம்மஞ்சேரியில் கலைஞர் கருணாநிதி நகரில் வசிக்கும் நாகசாமி என்பவரும் அவரது குடும்பத்தினரும் பெரிய அளவில் பாதிப்புக்குள்ளாக்கி உள்ளனர்.

அதுவும் அங்குள்ள சில நபர்கள் துரத்தி துறத்தி அடித்துள்ளார்கள். நாகசாமியின் குடும்பத்தை. இவர்கள் இவ்வாறு அடிப் பட்டதற்குக் காரணமும், இவர்கள் செய்த தவறும் ஒன்றே ஒன்றுதான். "இந்து" மதத்தில் தாழ்த்தப்பட்ட சாதியாய்ப் பிறந்தது. ஆம் தாழ்த்தப்பட்டவர்களான நாகசாமி அவ்வூரில் ஒரு வீட்டை சொந்த மாக வாங்கியுள்ளார். இதுமட்டும்தான் இவர் செய்த தவறு. ஆதிக்கசாதியினர் வாழும் இடத்தில் ஒரு தாழ்த்தப்பட்டவன் வீடு வாங்கி வசித்தால் சும்மா விட்டு விடுமா இந்த இந்து ஆதிக்க சாதியினர் சமூகம்.

ஒவ்வொரு ஊர்களும் இரண்டு நாடாக பிரிந்துள்ளது. காரணம் இந்து மதத்தில் உள்ள வர்ணாசிரமம் - கிராமபுறங்களில் மட்டும்தான் இவ்வாறு நடக்கிறதென்றும், நகர்ப்புறங்களில் சிறிதளவும் சாதியக் கொடுமைகள் நடப்பதில்லை என்றும் கூறுவர் முற்போக்கு வாதிகள். அனைவரின் கன்னத்திலும் செருப்பை கழட்டி அடித்ததுபோல் உள்ளது சென்னை மாநகரத்தில் நடந்த இந்த சாதியக் கொடுமை சம்பவம்.

"அம்பேத்கரும் பெரியாரும் இந்த தாழ்த்தப்பட்டவர்களின் விடுதலைக்காக போராடிய போராட்டத்தையா இவர்கள் தற்பொழுது நடத்திக் கொண்டிருக்கிறார் கள்? இல்லை, ஏனென்றால் "அம்பேத் கரும் பெரியாரும் இந்து மதத்தை விட்டு வெறியேறினால்தான் இந்த சம்பவத்திற் கெல்லாம் முடிவு கட்ட முடியும் என்று கூறினார்கள். இன்னும் பெரியார் ஒருபடி மேலே சென்று தன் வாழ்நாளில் 300 தடவைக்கும் அதிகமாக நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்" அதுவே தீண்டாமையை ஒழிக்கின்ற மாமருந்து என்று கூறினார், அம்பேகத்கரும் இஸ்லாத்தை ஏற்பதாகத்தான் கூறினார்.

ஆனால் அவரை வழிமறித்துத்தான் புத்த மதத்திற்கு செல்ல வைத்தார்கள். (Source : அம்பேத்கரின் மதமாற்ற பின்னணி என்ன?)

இவற்றையெல்லாம் இன்று மறைத்து சாதிக் கொடுமைகள் நடந்தால் வீதிக்கு வந்து போராடினால், ஒன்றிணைந்து வாக்கு பெற்று சட்டசபைக்கு சென்றால், நமது உரிமைகளை மீட்டுவிடலாம் என்றெல் லாம் கூறி கனவில் மக்களை நீந்த வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்து மதத்தில் அடிமையாய் வைக்கப் பட்ட சகோதரர்களே உங்களுக்கு விடுதலை எங்கேயும் கிடைக்காது. படித்தால் நமக்கு மனித அந்தஸ்து கிடைத்துவிடும் என்று தவறான கணக்கு உங்கள் முன் வைக்கப்

படுகிறது. படித்து உயர்ந்த இடமான நீதிபதி பதவிக்கு வந்தவர்கள் விடப்பட்டார்களா? நீதிபர் கர்ணன் எப்படி பாதிக்கப் பட்டார் என்பது இப்படி கூறுகிறார்.

நான் நீதிபதியாய் இருந்தபொழுது மேடைகளின் சிறப்பு விருந்தினராய் அழைக்கப்பட்டிருக்கும் பொழுது என் பக்கத்தில் உள்ள ஆதிக்க சாதியினரான நீதிபதிகள் தன் கால்களை வேணுமென்றே என் மீது படுமாறு கால்மீது கால்போட்டு அமர்வார்கள்.

இது ஒரு உதாரணம் பல அவமானங்களை நீதிபதியாய் இருந்தபொழுது அவர் கண்டிருக்கிறார். (பார்க்க ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்) இவர் மட்டுந்தான் பாதிக்கப்பட்டாரா... கொல்கத்தாவின் உயர்நீதிமன்ற நீதிபதியான இவர் இன்று சிறையில் உள்ளார். நீதிபதியாய் இருந்த பொழுதே சிறைக்கு சென்ற ஒரே நபர் இவர்தான். இவர் தலித்தாக இருந்தது மட்டும்தான் இவர் செய்த தவறு!!

செல்வத்தில் உயர்ந்துவிட்டால் விடுதலை கிடைக்குமா?

செல்வத்தில் உயர்ந்தவிட்டால் நாம் இந்த சாதியக் கொடுமைகளிலிருந்து விடுபட்டு விடலாம் என்று என்னுகிறீர்களா? சற்று சிந்தியுங்கள். நாடார்களின் நிலையை. அவர்களிடம் செல்வத்திற்கு பஞ்சமில்லை. 1800-க்களில் அவர்கள் கோயிலுக்குள் நுழைய முற்பட்டபோது ஆதிக்க சாதியினரால் தாக்கப்பட்டனர்.

அது பெரிய கலவரமாகவும் மாறியது. இதுசம்பந்தமாக இங்கிலாந்தில் உள்ள பிரைவி கவுன்சில் என்ற மன்னர் மாமன்றத்தில் விவகாரம் நடந்து தீர்ப்பும் வந்தது. ஆதிக்க சாதியினருக்கு சாதகமாய் மனமொடிந்த நாடார்கள் தங்களது இழிவை நீக்க உறுதிமிக்க முடிவை எடுத்தார்கள்.

ஆம் அவர்கள் இந்துமதத்தை விட்டு வெளியேறினார்கள். விடுதலை பெற்று தரக்கூடிய மார்க்கமான "இஸ்லாத்தை" 3000 பேர் தேர்ந்தெடுத்தார்கள்.

இன்று அவர்கள் கடலில் விழுந்த மழைத்துளிபோல் கலந்துவிட்டர்கள். இவர்களை நீங்கள் அடையாளம் காட்ட முடியுமா? அவர்களக்கு கிடைத்தது நிரந்தரமான விடுதலை. (Souce நாடார் பெருங்குடியின் ஏன் மதம் மாறினார்கள்)

ஆக, காலங்கடத்தாமல் இஸ்லாத்தை ஏற்போம், இந்த இஸ்லாம் உலக சுகோதரத்துவத்தை ஒரு தெளிவான அடிப்படையின் கீழ் பிரகடனப்படுத்துகின்றது.

**மனிதர்களே!**
உங்களுடைய ரப்பை நீங்கள்
அஞ்சி நடந்து கொள்ளுங்கள்.
அவன் எத்தகையோனென்றால்,
ஒரே ஆத்மாவிலிருந்து உங்களை
அவன் படைத்தான் ; அதிலிருந்து
அதனுடைய ஜோடியைப் படைத்து,
அவ்விருவரிலிருந்து ஏராளமான
ஆண்களையும், பெண்களையும்
பரவச் செய்தான் ; (எனவே)
அல்லாஹ்வை அஞ்சி நடந்து
கொள்ளுங்கள் ; அவன்
எத்தகையோனென்றால்,
அவனைக் கொண்டே நீங்கள்
ஒருவருக்கொருவர்
(உங்களுக்கு வேண்டியவற்றைக்)
கேட்டுக் கொள்கிறீர்கள் ;
இன்னும் (இரத்தக் கலப்புடைய)
பந்துக்களையும் ;
(பேணி ஆதரியுங்கள்) -
நிச்சயமாக அல்லாஹ் உங்களின்
மீது கண்காணிப்பவனாக
இருக்கின்றான். (4:1)



# 75-ஆம் ஆண்டில் வெள்ளையனே வெளியேறு இயக்கமும் சங்கப் பரிவாரமும்?

ஆகஸ்ட், 8, 2017 வெள்ளையனே வெளியேறு என்ற இயக்கத்தின் 75 ஆம் ஆண்டு நிறைவு நாள்.

ஆகஸ்ட்,8-2017 அன்று வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகஸ்ட் 8, 1942-இல் பிரகடனப்படுத்தப்பட்டது. அன்று ஒப்புக்காக எதையாவது பேசியாக வேண்டும் என்பதற்காக மோடி கொஞ்சம் பீற்றிக் கொண்டார். நாம் மதவாதம், ஊழல், ஜாதியம் ஆகியவற்றிலிருந்து வெளியேறிட வேண்டும் என இதோ உபதேசம் செய்தார்.

மதவாதம், வகுப்புவாதம், வகுப்பு வெறி இவற்றால் வயிறு பிளைத்தவர்கள் இவர்கள். இவையெல்லாம் போதாது என்று தொடர் குண்டு வெடிப்புகளை நடத்தி பல ஆயிரம் இந்திய குடிமக்களின் உயிரைக் குடித்து அதைக் கொண்டே ஆட்சியைப் பிடித்தவர்கள். இவர்கள் செய்த சவப் பெட்டி ஊழலை நாடு இன்னும் மறந்து விடவில்லை. ஊழலையும், வகுப்புவாதத்தையும் பற்றிப் பேசுவதும் சாத்தான் வேதம் ஓதுவதும் ஒன்றுதான்.

இவர்கள் 1942-இல் என்ன செய்தார்கள் என்பதை வரலாறு தவறாமல் பதிவு செய்திருக்கின்றது. அது.

அப்போது சாவர்கரின் தலைமையில்தான் இந்து மகா சபா இயங்கிக் கொண்டிருந்தது. இந்த இந்து மகா சபா வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை எதிர்த்தது. அதுதன் தொண்டர்களை, இந்த வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைப் பற்றிக் கவலைப் படாமல் தங்களுக்கு இந்து மகாசபா ஒதுக்கிய வேலைகளைக் கவனிக்கும்படி சொன்னது. இந்த உத்தரவை சாவர்கர்தான் பிறப்பித்தார்.

அப்போது ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர் மாதவ் சதாசிவ் கோல்வால்கர் இவர் ஆங்கிலேயர்களை அல்லல்களுக்குள்ளாக்கும் எந்தப் பணியினையும் "ஷாகாஸ்" தொண்டர்கள் செய்யக் கூடாது, என அறிக்கை விடுத்திருந்தார். ஆங்கிலேயர்களின் சட்டத்திற்கு கீழ்ப்படியுங்கள் என அறிவுறுத்தி இருந்தார்.

மேற்கு வங்கத்தில் இந்து மகா சபையின் தலைவர் ஷியாம் பிரசாத் முகர்ஜி ஆங்கிலேயர்களிடம் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை தோல்வியடையச் செய்ய

தன்னால் இயன்றதையெல்லாம் செய்வதாக வாக்களித்தார்.

*1882*-களிலே இவர்கள் ஆங்கிலேயர்கள் நமக்கு எதிரி அல்ல. அவர்கள் நமது நண்பர்கள், முஸ்லிம்கள்தாம் நமது எதிரிகள், என்றொரு கொள்கையைப் பிரகடனப் படுத்தினார்கள். இந்தப் பின்னணியில் வகுப்பு வெறியை வளர்ப்பதற்காக எழுதப் பட்டதே "ஆனந்தமடம்" என்ற நாவல் என்பதை நாம் வைகறை வெளிச்சம் **2017** ஆகஸ்ட் இதழில் வெளியிட்டி ருந்தோம். (வாசகர்கள் அதைப் படிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்)

*1880* களிலே இவர்கள் இந்தியாவை இந்து ராஷ்டிராவாக மாற்றிட காங்கிரஸுக்குள்ளும் பெரிய அளவில் ஊடுருவி இருந்தார்கள். **1940**களில் விடுதலைப் போரில் தங்கள் உயிர்ப் பொருள் அனைத்தையும் தந்து இந்துக்களோடு இணைந்து நின்று ஆங்கிலேயர்களுடன் போர் செய்த முஸ்லிம்களை விரக்தியடையச் செய்திருந்தார்கள் எனப்து குறிப்பிடத்தக்கது.

ஆகஸ்ட் *8, 1942*-இல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் தொடங்கப்பெற்ற ஆறு மணிநேரத்திற்குள், காந்திஜி உட்பட அனைத் துத் தலைவர்களும், கைது செய்யப்பட்டு விட்டார்கள் அடுத்த நாள் காலையில் இந்த இயக்கத்தை அதாவது ஆகஸ்ட் *9, 1942*-இல் முதல் அருணா ஆசஃப் அலீ அவர்கள் தொடர்ந்து செய்த சூழ்ச்சிகளால் வெள்ளை யனே வெளியேறு இயக்கத்தை தலைமை யேற்று நடத்தினார்கள்.

இந்துத்துவ வாதிகள், நாடாள வந்து விட்டார்கள் அன்று ஆங்கிலேயர்களுடன் கைகோர்த்து நின்றார்கள். ஆனால், பிற்றை நாட்களில் நாங்களும் அந்த விடுதலைப் போரில் பங்காற்றினோம் எனப் பீற்றிக் கொள்ளத் தலைபட்டுவிட்டார்கள்.

**முன்னாள் பிரதமர் வாஜ்பேயி...**

ஆமாம், இப்படித்தான் அன்று வாஜ்பேயி பீற்றிக் கொண்டார். மட்டுமல்ல, தான் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்து கொண்டதாக, தனக்கென ஒரு வரலாற்றையும் எழுதிக் கொண்டார். ஆனால் அவர் அன்று



எத்துனை பெரிய துரோகத்தைச் செய்தார் என்பதை வரலாறு இப்படிச் சுட்டிக்காட்டுகின்றது.

*1942* இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் ஈடுபட்டவர்களைக் காட்டிக் கொடுத்தது முன்னாள் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர் வாஜ்பேயி.

அன்று ஆங்கிலேயர்களின் கைகளிலிருந்து நாட்டை மீட்க நாம் மேற்கொண்ட விடு தலைப் போராட்ட நாட்களில் ஒரு நிகழ்ச்சி.

*1942*-இல் "வெள்ளையனே வெளியேறு" என்ற முழக்கம் நாடெல்லாம் வீடெல்லாம் முழங்கிக் கொண்டிருந்தது. ஆங்கிலேயர்களுக் கெதிராக அனைவரும் போராடிக் கொண்டிருந் தார்கள். முன்னாள் பிரதமர் வாஜ்பேயின் ஊரைச் சார்ந்த பலரும் அந்தப் போராட்டத் தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள். அதில் தலையாய இடத்தைப் பெற்றவர் லீலாதர் பாஜ்பாய் எனபவராவார். இவர் "வெள்ளையனே வெளியேறு" என்ற இயக்கத் திற்காக தனது சொந்த கிராமத்தைச் சார்ந்த மக்களை திரட்டிப் போராடினார்.

பாஜ்பாயின் சொந்த கிராமம் பத்தேஸ்வர்

என்பதாகும். இது ஆக்ரா மாவட்டத்தில் உள்ளது. இந்தக் கிராமம்தான் அன்றைய பிரதமர் வாஜ்பேயும் பிறந்த கிராமம்.

இந்தக்கிராமத்தைச்சார்ந்த மக்கள் ஆகஸ்ட் 27, 1942-இல் ஊர்வலமாகச் சென்றார்கள். "வெள்ளையனே வெளியேறு" என்ற முழக்கத் துடன் அங்கிருந்த இரண்டு அரசு கட்டடங் களில் காங்கிரஸ் கொடியை ஏற்றினார்கள்.

இப்படிக் காங்கிரஸ் கொடியை ஏற்றிய அரசு அலுவலகங்களுள் ஒன்று வன இலா காவைச் சார்ந்தது.

ஊர்வலம் அமைதியாக நடந்தது. அது வெற்றிகரமாகவும் நடந்தது. அரசு அலுவ லகங்களில் காரங்கிரஸ் கொடியேற்றப் பட்டது. ஆனால் ஆங்கிலேயர்களுக்குப் பற்றிக்கொண்டு வந்தது. எப்படியேனும் ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்தவர்களை நிரந்தரமாகச் சிறையில் வைத்திட வேண்டும் என முடிவு செய்தார்கள்.

ஆனால் ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்த பாஜ்பாய் லீலாதரையோ அவருடன் சென்ற ஏனையவர்களையோ கைது செய்ய வழி தெரியாமல் திண்டாடிக் கொண்டிருந்தார்கள் ஆங்கிலேயர்கள். அவர்களுக்கு வாஜ்பேபியும் அவரது சகோதரர் பிரேம் பிஹாரி வாஜ் பேயியும் உதவி செய்தார்கள். கொடியேற்றிட சென்ற கட்டடத்தை லீலாதரும் ஏனையோரும் இடித்ததாக வாக்குமூலம் கொடுத்தார்கள்.

ஆமாம் ஆங்கிலேயர்கள் லீலாதர் பாஜ்பாய் இன்னும் அவரோடு நின்று "வெள்ளையனே வெளியேறு" போராட்டத்திற்கு ஏற்பாடு செய்த ஐந்து பேரையும் கைது செய்திட உதவி னார்கள். ஆங்கிலேயர்கள் உருவாக்கிய கட்டுக் கதைகளுக்கு சாட்சியங்களாக ஆனார்கள். வாஜ்பேயும் அவர் குடும்பத்தவரும் அன்று அவர்கள் இப்படியொரு வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள் ஆங்கிலேயர்களிடத்தில்

நான் எந்தச் சேதமும் விளைவிக்கவில்லை. அந்தக் கட்டடத்தை இடிப்பதற்கு நான் எந்த உதவியும் செய்யவில்லை லீலாதர் பாஜ்பேயும் மஹூவனும் பத்தேஸ்வர் கடை வீதியில் பேசினார்கள். அதன்மூலம் வனத்துறை சட்டங் களை (இவை ஆங்கிலேயர்களின் சட்டங்கள்) மக்கள் மீறும் படிச் செய்தார்கள். சுமார் 200 பேர் வனத்துறை அலுவலகத்திற்குள் போன போது நானும் எனது சகோதரனும் பின்தங்கி விட்டோம். மஹூவன் லீலாதர் பாஜ்பாய் ஆகியோர்தான் (ஊர்வலத்திற்கு) ஏற்பாடு செய்தார்கள். ஏனையயோருடைய பெயர்கள் எனக்குத் தெரியவில்லை. செங்கற்கள் உடை வதுபோல் தெரிந்தது. யார் சுவரை உடைத்துக் கொண்டிருந்தார்கள் என்பது எனக்குத் தெரிய வில்லை. ஆனால், நிச்சயமாக சுவரிலிருந்து செங்கற்கள் விழுந்து கொண்டிருந்தன. (லீலாதர் பாஜ்பாய் பேட்டி, தி இந்து 19.9.99)


1942 ஆகஸ்ட் 27-இல் இடிக்கப்பட்டதாக வாஜ்பேயி கூறிய வன இலாகாக் கட்டிடம் 1998லும் பவ்வியமாக இருக்கின்றது.

இத்தோடு அந்த வாக்குமூலத்தின் உண்மை நகலையும் வெளியிட்டார்கள். அன்றைய பிரதமர் வாஜ்பேயி அன்று 1942-இல் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள கொடுத்த இந்த வாக்குமூலம் முற்றிலும் பொய்யானது. அங்கு யாரும் சுவரை இடிக்க முயற்சி செய்ய வில்லை. எந்த செங்கற்களும் விழவுமில்லை.

உண்மையைச் சொன்னால் அலுவலகக் கட்டடத்தை உடைப்பது அங்கு யாருடைய இலட்சியமாகவும் இருக்கவில்லை. "வெள்ளை யனே வெளியேறு" என்ற போராட்டத்தை முன் வைத்த அந்த விடுதலைப் போர் வீரர் களின் நோக்கமெல்லாம் இந்தியா ஆங்கிலே யர்களின் அடிமைத் தனத்தை அணுவும் சகிக்கத் தயாராக இல்லை. ஆங்கிலேயர்கள்

வெளியேறிட வேண்டும். அவர்களது ஆதிக்கம் அழிந்து விடுதலைப் போரை பறை சாற்றும் அளவில் காங்கிரஸ் கொடியை ஆங்கிலேயர் களின் அரசு அலுவலகத்தில் ஏற்றுவதேயாகும்.

கொடியேற்றுவது என்பதை ஒரு கொடிய குற்றமாகக் காட்டிட இயலாது என்பதால் கட்டடத்தை இடித்து வன்முறையில் ஈடுபட் டார்கள் என்ற கோரமானதோர் வழக்கை ஜோடித்தார்கள் ஆங்கிலேயர்கள். அதற்கான சாட்சியம் வேண்டும். அதைத்தான் முன்னாள் பிரதமர் அன்று வழங்கினார்.

விளைவு ! லீலாதர் பாஜ்பாய், மஹூலன் ஆகியோருக்கு ஐந்து ஆண்டுகள் சிறைவாசம், வாஜ்பேயிக்கோ வழக்கில்லை. வெளியே வளமான வாழ்க்கை!

இந்தத் தகவல்களை மூடி மறைக்கத் தன்னை ஒரு விடுதலைப் போராட்ட வீரராகக் காட்டி வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளார் வாஜ்பேயி.

இந்தப் பிதற்றலையும், பொய்யையும் பொறுக்க முடியாத லீலாதர் பாஜ்பாய் 18.9.1999-யில் நடத்திய பத்திரிகையாளர்கள் சந்திப்பில் இதனைப் போட்டு உடைத்தார். அன்று அவர் இந்தச் செய்தியை உலகுக்கு அறிவித்தபோது அவருடைன் சிறை சென்ற மஹூவன் இறந்தும் விட்டார். விடுதலைப் போராட்ட வீரர்கள் நடத்தி வரும் அமைப்பின் பெயரிலேயே இதைச் சொன்னார். நாடு ஃபாசிசத்தின்பயங்கரபிடியில்சிக்கிக்கொண்ட நிலையில் நாங்கள் மீண்டும் ஒரு விடுதலைப் போரை நடத்துவதைத் தயங்க மாட்டோம் என்று குறிப்பிட்டார்.

விடுதலைப்போர் நாட்களில் ஆட்காட்டிய வர்கள் இன்று நாடாள வந்துவிட்டார்கள் என்பது வேதனையான உண்மை.

தனது துரோகத்தில் வாஜ்பேயி எத்தனையோ இரட்டை முகங்களைக் காட்டி வருகின்றார். ஆர்.எஸ்.எஸ். என்ற இயக்கத்தால் நடத்தப்பட்டு வரும் பத்திரிகை ஆர்கனைசர் என்பது. இது ஆங்கில மொழியில் வெளி வருகின்றது.

இந்தப் பத்திரிகை மே 7-ந் தேதி 1995-ஆம் ஆண்டு ஒரு சிறப்பிதழை வெளியிடுகின்றது. அதில் வாஜ்பேய் ஓர் கட்டுரையை வெளியிடு கின்றார். அதற்கு "ஆர்.எஸ்.எஸ்.என்னுடைய ஆத்மா" எனத் தலைப்பிடுகின்றார். அந்தக் கட்டுரையில் தன்னை ஒரு விடுதலைப் போர் வீரராய் காட்டிக் கொள்கின்றார்.

அதில் 1942-ல் நடந்த "வெள்ளையனே வெளியேறு" என்ற இயக்கத்தில் தான் கலந்து கொண்டது பற்றி பெருமை பேசுகின்றார்.

"நான் 1942-இல் "வெள்ளையனே வெளி யேறு" இயக்கத்தில் கலந்துகொண்டேன். சிறையிலடைத்தார்க்ள. அப்போது நான் என்னுடைய இடைநிலை தேர்வுக்காகப் படித்துக் கொண்டிருந்தேன். என்னை என்னு டைய சொந்த கிராமமான பத்தேஷ்வரில் (ஆக்ரா மாவட்டம்)வைத்துதான் கைது செய்தார்கள். எனக்கு வயது 16"

இப்படி 1995-இல் எழுதிய கட்டுரையில் வாஜ்பேயி பெருமையடித்தக் கொண்டபோது, இந்துப் பெருங்குடி மக்களிலுள்ள இன்றைய இளைஞர்கள் வாஜ்பேயை வாழும் ஒரு விடுதலைப் போர் வீரர் என்றுதான் எண்ணி இருப்பார்கள். ஆனால் 1999 செப்டம்பர் மாதம் லீலாதர் பாஜ்பாய் உண்மையை வெளி யிட்ட பின்னர்தான் வாஜ்பேயி உண்மை முகம் அதாவது துரோகம் உலகுக்குத் தெரிந்தது.

1942-க்கு முன்னரோ, பின்னரோ இவர் எந்த விடுதலைப் போராட்டத்திலும் கலந்து கொண்டதாகத் தெரியவில்லை. இவர் சார்ந்துள்ள இயக்கம் எப்போதும் விடுதலைப் போரில்கலந்துகொண்டதில்லைஎனமுள்ளால் எம்.பி.யும் விடுதலைப் போராட்ட வீரருமான ஷானி பூஷன் என்பவர் குறிப்பிடுகின்றார்.

- தி ஹிந்து 19.9.1999

## சங்கப்பரிவார வாஜ்பேயின் இன்னொரு முகம்

காட்டிக் கொடுத்த வரலாற்றை தியாகத் தின் வரலாறாக திரிக்க முயன்ற வாஜ்பேயி

வாழ்க்கையின் இன்னொரு பொய்முகம்.

1998ஆம் ஆண்டு வாஜ் பேயி பிரதமர் பதவிக்குப் போட்டி போடுகின்றார் என்பதைத் தெரிந்ததும் அவரது கீழறுப்பு வேலை களைத் தெரிந்தவர்கள் வீதிக்கு வந்தார்கள். அவரது உண்மை முகத்தை கிழித் துக் காட்டினார்கள். இந்த உண்மைகளை ஓர் ஆய் வாகவே மேற்கொண்டது ஆங்கில ஏடான பிரண்ட் லைன்.

பொத்துக்கொண்டு வந்தது வாஜ்பேயிக்கு. தனது வழக்கறிஞரைக் கொண்டு வக்கீல் நோட்டீஸ் ஒன்றை அனுப்பினார். பிரண்லைன் ஆசிரியர் என்.ராம் அவர்களுக்கு...

வக்கீல் நோட்டீஸ் பெற்றதும் தனது நிருபர்களைக் கொண்டு அழமானதொரு ஆய்வை, இன்னும் சொன்னால் புலனாய்வை மேற்கொண்டார் என்.ராம்

இனி உண்மையை இருட்டடிப்புச் செய்தால் இரட்டிப்பு வேகத்தில் பட்டி தொட்டிகளிலெல்லாம் தனது துரோகம் பரவிவிடப்போகின்றது என அஞ்சினார் "அஞ்சாநெஞ்சன்" வாஜ்பேயி. வக்கீல் நோட்டீசைத் திரும்பப் பெற்றார்.

பிரண்ட்லைன் மேற்கொண்ட ஆய்வில் இன்னும் பல தகவல்கள் தெரியவந்தன. அவற்றுள் ஒன்று வாஜ்பேயி எப்படி வெளியே வந்தார் என்பதுதான். 1942-இல் அவருடைய தந்தை ஆங்கிலேயர்களின் பள்ளிக் கூடத்தில் ஆசிரியர் பணியாற்றி வந்தார், அவரது உறவினர் ஆங்கில அமைச்சகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தார். இப்படி ஆங்கில அரசோடு இவர் குடும்பத்தினருக்கிருந்த நெருக்கத்தின் காரணமாகத்தான் வெளியே வந்தார். இவர்கள் வெளியே வரும்போது ஜாமீன் இல்லை,



**வாஜ்பேயின் வாக்குமூலத்தால் சிறை சென்ற விடுதலைப் போராட்ட வீரர் லீலாதர் பாஜ்பாய் உண்மையான ஆவணங்களைக் காட்டுகிறார்.**

வழக்கும் இல்லை. இப்படி ஆங்கிலேயர்களுக்கு நெருக் கமாக இருந்திருக்கின்றார் கள். விடுதலைப் போராட்ட வீரராகக் காட்டிக் கொண்டு இந்த நாட்டின் பிரதமர் பதவியையே அவரால் ஆக்கிரமிக்க முடிந்தது. இதில் இன்னொரு வேடிக்கை என்னவெனில் காட்டிக் கொடுத்துவிட்டு ஆங்கிலேயர்களிடமிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி வெளியே வந்துள்ளார்.

## இன்னொரு பொய்

அடுத்து காவல்துறை யினரிடம் பெயரைப் பதிக்கும்போது இவர் தனது தந்தையின் பெயரை கௌரி சங்கர் எனச் சொன்னார். ஆனால் இவரது அண்ணன் பிரேம் ஹீவாரி வாஜ்பேய் தந்தை பெயரை கிருஷ்ணன் பிஹாரி என்று பதிவு செய்தார். வாஜ்பேயி உண்மைப் பெயரை மறைத்தார். அவருடைய தந்தையின் பெயர் கிருஷ்ணன் பிஹாரி தான். அவரை குடும்பத்தில் கௌரி சங்கர் என அழைப்பதும் உண்டு. பிரண்ட்லைன் பத்தி ரிகை அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பிரதி தன்னிடம் இருப்பதாகக் கூறுகின்றது. ஏனெனில் பிரதமர் அடிக்கடி இந்த விஷயத்தில் "பல்டி" அடிக்கின்றார். இத்தனை ஆவணங்களும் சிக்கிடவே வேறு வழியின்றி உண்மையை ஒத்துக்கொண்டார். இது நடந்தது 1997/98களில்

இவர் உண்மையை ஒத்துக்கொண்ட பேட்டி பிரண்ட்லைன் பத்திரிகையில் பிப்.20, 1998-ல் வெளியிடப்பட்டது.

இவரது விடுதலைப் போராட்ட வரலாற் றுப் போராட்ட தகிடுதத்தம் 1999-ல் முற்றாக உடைந்தது. லீலாதர் பாஜ்பாயின் பேட்டிக் குப் பின் இவர் முழுமையாக வாயடைத்தப் போனார்.

வாஜ்பேயின் இந்த இரட்டை நிலைகளை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு ஆராய்ந்த மானினி சேட்டர்ஜி இப்படிக் குறிப்பிடு கின்றார். "இவர் குவாலியரில் ஆங்கிலேயர் களுக்கு எதிராகப் போராடினார் என்பதற்கு எந்த ஆதாரமுமில்லை. அப்படி அவர் ஆங்கி லேயர்களுக்கெதிராக போராடினார் என்று கூறினால் அவர் அதற்கான ஆதாரத்தைத் தர வேண்டும்" பிரண்ட்லைன் பிப்.20,1998, பிபி 122,123

இன்றைய நாட்களில் விடுதலைக்காப் போராடி, சிறை சென்றவர்களுக்கு சாதாரண வசதி கூட இல்லை. காட்டிக் கொடுத்தவருக்கு பிரதமர் பதவி, இதுதான் இன்றைய இந்தியா! லீலாதர் சிறை சென்றதோடு பத்தேஷ்வர் கிராமத்திற்கு ரூபாய் 10,000 அபராதம் விதிக்கப்பட்டது.

# வீரமங்கை

## அருணா ஆசஃப்அலீ

**( 16,ஜூலை 1909 - 29. ஜூலை 1996 )**

பாரதரத்னா : அருணா ஆசஃப்அலீ, ஒரு வங்காள பிராமன பெண். விடுதலைப் போரில் தான் சந்தித்த விடுதலைப் போர், வீரர் ஆசஃப் அலீயை மணந்தவர். ஆசஃப் அலீ இவரை விட 20 வயது முதியவர். இருவருக்கும் விடுதலைப்போர் சாகசங்களே இணைப்புப் பாலமாக இருந்தது.

ஒரு முஸ்லிமை திருமணம் செய்து கொண்டதால், அவரது குடும்பத்தார்கள் இவருக்குத் திருமணமான செப்டம்பர் 1928-இல் இவருடைய இறுதி சடங்குகளை நிறைவேற்றிவிட்டனர். அவர் இறந்துவிட்டதாகப் பாவித்தார்கள்.

1942 ஆகஸ்ட் 8-ஆம் நாள், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை காங்கிரஸ் கட்சி அறிவித்தவுடன் எல்லா காங்கிரஸ் தலைவர் களும் கைது செய்யப்பட்டார்கள். உடனே அருணா ஆசஃப் அலீ அவர்கள் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை தலைமையேற்று நடத்தினார்.

ஆகஸ்ட்,9-1942. அன்று முதல் அவரை வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை நடத்தினார். தைரியமாகச் சென்று பம்பாயில் உள்ள GOWALIA TANK MAIDAN என்ற கோவாவில் டேங்க் மைதானத்தில் காங்கிரஸ் கொடியை ஏற்றினார். ஆங்கிலேயர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். மயிரிழையில் உயிர் தப்பினார். பின்னர் அருணா ஆசஃப் அலீயைக் கைது செய்ய பிரவாரண்டை பிறப்பித்தார்கள். அவருடைய சொத்தக்களை பறிமுதல் செய்தார்கள். ஆனால் அருணா ஆசஃப் அலீ வெள்ளை யர்களின் பிடியில் சிக்கிடவில்லை. தலைமறைவாக இருந்து விடுதலைப் போரை நடத்தினார்கள்.



அருணா ஆசஃப் அலீயைப் பிடித்துத் தருபவர்களுக்கு, ரூபாய் 5000 சன்மானம் தருவதாக அறிவித்தார்கள். நெருக்கடிகள் அதிகமாயின. காட்டிக் கொடுக்கும் வாஜ்பேயி வகையறாக்களின் கைகளில் சிக்கிடாமல் விடுதலைப் போரை தொடர்ந்தார்.

மகாத்மா காந்தி அவர்களே ஒரு இரகசிய கடிதம் வழி அருணா ஆசஃப் அலீயை சரணடைந்திட சொன்னார்கள். அத்தோடு கிடைக்கும் 5000 ரூபாயைக்கொண்டு ஹரிஜன் என்ற பத்திரிகையை நடத்தலாம் என்றார்.

ஆனால் அருணா ஆசஃப் அலீ சரணடைந்திடவில்லை. வீரமும், வீரியமும் குன்றாமல் தொடர்ந்தார் விடுதலைப் போரை. 1946 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் பிடிவாரண்டை திரும்பப் பெற்ற பின்னரே வெளியே வந்தார். இப்படி வீரம் செறிந்த ஒரு விடுதலைப் போரை நடத்தினார் அருணா ஆசஃப் அலீ. **- எம்.ஜி.எம்.**



# சிறையில் ஒரு நீதிபதி!

அண்மைக் காலங்களில் நீதிபதி கர்ணன் அவர்கள் மிகவும் அதிகமாகப் பேசப் படுகின்றார். இனிமேலும் பேசப்படுவார்.

"நீதிபதி ஒருவர் தான் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர், என்பதால், சக நீதிபதிகளால் அவமானப்படுத்தப்படுகின்றார்" என்ற செய்தியே நீதிபதி கர்ணன் அவர்களைப் பற்றி ஊடகங்களில் வந்த முதல் செய்தி.

அப்போது அவர் தான் எவ்வாறெல்லாம் அவமானப்படுத்தப்படுகின்றார் என்பதை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அமைக்கப்பட் டுள்ள ஆணையத் (SC/ST - Commission) திற்கு அனுப்பி வைத்தார். ஆணையத்திடமிருந்து எந்த நிவாரணமும் கிடைக்கவில்லை என்ப தால் அவர் அதில் சில பகுதிகளை ஊடங்கள் வாயிலாக மக்கள் மன்றத்தில் வைத்தார்.

அவர் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அமைக் கப்பட்ட வாரியத்தின் முன் என்னென்ன அவமானங்களை வைத்தார், அதற்கு அந்த ஆணையம் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்தது என்பவை இன்னும் தெரியவில்லை.

ஆனால், அப்போது தமிழகத்தின் தலைமை நீதிபதியாக இருந்த இக்பால் அவர்கள் அவரை அழைத்துப் பேசினார். பிரச்சனை தீர்ந்தது என்றார். அதாவது சக நீதிபதிகளுக்கும் நீதிபதி கர்ணனுக்கும் இடை யேயுள்ள பிரச்சனைத் தீர்ந்தது என்றார்.

அதன்பின் கர்ணன் பிரச்சனை தீர்ந்தது என்றே நினைத்தோம்.

ஆனால் நீதித்துறையில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களை தாழ்வாக நடத்துகின்றார்கள். அங்கு ஜாதியம் இருக் கின்றது என்பதை மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் உறுதி செய்கின்றார். பிராண்ட் லைன் ஆங்கிலப் பத்திரிகைக்கு கொடுத்த பேட்டியில். (பார்க்க Front LIne June,9-2017)

இந்தப் பின்னணியில் உச்ச நீதிமன்றம் அண்மையில் நீதிபதி கர்ணன் அவர்கள்மேல் மேற்கொண்ட நடவடிக்கையைப் பார்தோ மேயானால் நாமும் அதே முடிவுக்குத்தான் வரவேண்டியதிருக்கும்.

நீதிபதி கர்ணன். தான் ஜாதியக் கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகின்றார் என்பதை மக்கள் மன்றத்தில் வைத்தபின் தான் பிரதமருக்கும் குடியரசு தலைவருக்கும் எழுதிய கடிதத்தின் வழி மீண்டும் பிரபல்யமாகின்றார். இந்த முறை அவர்கள் சக நீதிபதிகளின் மீது ஊழல் குற்றச் சாட்டுக்களைச் சொன்னார் என்பதற்காகத்தான் மீண்டும் பிரபல்யமாகின்றார்.

*33* நீதிபதிகள் ஊழல் செய்திருக்கின்றார்கள். அவர்களை குடியரசு தலைவர், பிரதம அமைச்சர் ஆகியோர் விசாரிக்க வேண்டும் என்றொரு கடிதத்தைப் பிரதம அமைச்சருக்கு அனுப்புகின்றார்.

இது அடாத செயல் என்றும், அவர் சமூக நீதிபதிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களைக் கூறுவதும், அவர்களின் உத்தரவுகளுக்கு எதிராக உத்தரவுகளைப் போடுவதும் முறையற்ற செயல் என அவரை கல்கத்தா உயர்நீதிமன்றத்திற்கு மாற்றினார்கள். உச்ச நீதிமன்ற நீதிபதிகள் விரக்திவயப்பட்டார். நீதிபதி கர்ணன் அவர்கள் தொடர்ந்து ஒரு தெருச் சண்டைபோல் கல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதி கர்ணன் அவர்களும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளும் சண்டைப்போட்டுக் கொண்டனர்.

இதில் நீதிபதி கர்ணனின் செயல்களை யாரும் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. ஆனால் ஒன்று மட்டும் உண்மை. அது, தான் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ஒருவர் என்பதால்தான் இத்தனை கெடுபிடிகளுக்கும் ஆளாக்கப்படுகின்றோம் என உறுதியாக நம்பினார் கர்ணன். அதனால் அவரது செயல்கள் ஒரு மீள முடியாத விரக்தியின் வெளிப்பாடாகவே தெரிந்தன.

நிகழ்வுகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கும் நமக்கு இதை பளிச்சென உணர முடிந்தது.

நீதிபதி கர்ணனின் செயல்பாடுகள் விரக்தியின் வெளிப்பாடாக இருந்தது என்றால் அதற்கு சற்றும் சளைக்காமல், இருந்தது உச்சநீதிமன்றத்தின் செயல்பாடுகள்.

ஒரு தனிப்பட்ட நீதிபதியின், அதுவும் உயர்நீதி மன்ற நீதிபதியின் செயல்களை அப்படியே உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பலர் பிரதிபலிக்கிறார்கள் என யாரும் எதிர்பார்க்கவில்லை. இதனால் ஒரு கட்டத்தில் கர்ணனின் செயல்களுக்கும், உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் செயல்களுக்கும் எந்த வேறுபாடும் இல்லை என்றாகிவிட்டது.

இதனை உண்மைப்படுத்தும் வகையில் தான், ஒரு மருத்துவ குழுவை அனுப்பி நீதிபதி கர்ணனை மருத்துவ சோதனை செய்து வர அனுப்பினார்கள் உச்ச நீதமன்ற நீதிபதிகள். அதனை பலவந்தமாகச் செயல்படுத்த காவல் துறையையும், அனுப்பி வைத்தார்கள்.

ஒரு உயர்நீதிமன்ற நீதிபதிக்கு உண்மையிலேயே புத்தி பேதலித்திருக்கின்றது என உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நம்பினால், அதற்கு மருத்துவக் குழுவை திடுதிப்பென அனுப்பாமல், அவருக்கு மருத்துவ விடுப்பைக் கொடுத்து பின்னர் மருத்துவர்களின் ஆலோசனைகளைப் பெற்றிருக்கலாம். ஒரு அக்கறையுடன் உச்ச நீதிமன்றம் நடந்திருந்தால், அதனை மக்கள் எளிதாய் புரிந்திருப்பார்கள்.

ஆனால், உச்சநீதிமன்றத்தின் நடவடிக்கை அதனைப் பிரதிபலிக்கவில்லை. மாறாக, அவை கல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவரான கர்ணனை அவமானப்படுத்திட வேண்டும். அவருக்கு புத்தி சரியில்லை என்று காட்டும் விதமாக அமைந்திருந்தது.

மருத்துவக் குழுவை மரியாதையுடன் வரவேற்ற கர்ணன் அவர்கள் திருப்பி அனுப்பி விட்டார். இதுவும் நீதிபதி கர்ணனின் விரக்தியை அதிகப்படுத்தியது. அதே அளவுக்கு தனது செயல்களிலும், உண்மையைச் சொன்னால், உச்ச நீதிமன்றத்திற்கு எதிரான முரட்டுச் சண்டையில் வேகத்தைக் காட்டினார்.

உச்ச நீதிமன்றமும் அதேபோல் விரக்தி வயப்பட்டது என்றே சொல்ல வேண்டும். நீதிபதி கர்ணனை எப்படியாவது தண்டித்து விட வேண்டும் என முடிவு செய்தது. அந்தத் தண்டனை அவரை மனதாலும், உடலாலும் வருந்திடும் விதமாக இருந்திட வேண்டும் என விரும்பியது. இந்தத் தண்டனையை

வழங்குவதிலும் அது தன் விரக்தியை வெளிப்படுத்தியதே தவிர, சாதாரண நீதி சொற்களைக் கூட கடைப்பிடிக்கவில்லை. இதை ஊடகங்கள் பளிச்சென வெளிச்சம் போட்டுக் காட்டின.

**உச்சநீதிமன்றம் காற்றிலே பறக்க விட்ட நெறிமுறைகள்**

நீதிபதி கர்ணன் அவர்களுக்கும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கும் இடையே நடந்த தெருச் சண்டையில், உச்ச நீதிமன்றம் கர்ணன் மீது Contempt of Court, நீதிமன்றத்தை அவமதித்ததாக நடவடிக்கை எடுக்க முடிவு செய்தது.

அது குறித்து அவரை மார்ச்சு 31,2017-இல் நேரில் வர பிணையில் விடக்கூடிய பிடி வாரண்ட் ஒன்றையும் பிறப்பித்தது. (Bailable Warrant) நீதிபதி கர்ணனை உச்ச நீதிமன்றத்தில் நிறுத்தும் பொறுப்பை மேற்கு வங்க தலைமை காவல்துறை இயக்குநரிடம் ஒப்படைத்தது. (DGP - West Bengal)

மார்ச்சு 31. 2017-இல் கர்ணன் நேரில் ஆஜரானார். அவரிடம் மார்ச்சு.25-2017 தேதி யிட்டு அவர் எழுதிய கடிதத்தை ஏற்கின்றாரா? மறுக்கின்றாரா? (இந்தக் கடிதத்தில்தான் அவர் நீதிபதிகள் லஞ்சம் வாங்குகின்றார்கள். அதனை விசாரிக்க வேண்டும் எனப் பிரதம ரையும், குடியரசுத் தலைவரையும் கோரி இருந்தார்) என்று கேட்டது. இதற்கு நீதிபதி கர்ணன் எந்த தெளிவான பதிலையும் சமர்ப் பித்தாரில்லை என உச்சநீதிமன்ற நீதிபதிகள் கூறினார்கள்.

ஆகவே எழுத்துப் பூர்வமாக அவர் பதிலை சமர்பிக்க வேண்டும். அப்படி சமர்ப்பிக்க வில்லை என்றால் அவர் சொல்வதற்கு எதுவு மில்லை என்று பொருள் என எடுத்துக் கொள் வோம். ஆகவே நீதிமன்ற அவமதிப்பு நடவடிக் கைகள் தொடரும் எனக் குறிப்பிட்டார்கள்.

மே-1. 2017-இல் உச்சநீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் அடங்கிய அமர்வு ஒன்று நீதிபதி கர்ணன் உச்ச நீதிமன்றத்தை அவமதிக்கும் அளவில் தொடர்ந்து நடந்து கொண்டிருப்ப தாகக் மீண்டும் குற்றம் சாட்டினார்கள்.

அதேநாளில்தான் உச்ச நீதிமன்றம் நீதிபதி கர்ணனின் புத்தி சுவாதினம் பற்றிய சந்தேகத்தையும் கிளப்பியது.

ஒரு நீதிபதிக்கு புத்திசுவாதினமில்லை என முடிவு செய்வதும், மருத்துவக் குழுவை காவல்துறையுடன் அனுப்புவதும் என்ன நியாயம்?

இந்த முன்மாதிரியை வைத்துக்கொண்டு ஒரு மாநிலத்தின் தலைமை நீதிபதி கீழே உள்ள நீதிபதிகள் அனைவரையுமோ அல்லது சிலரையோ அல்லது ஒருவரையோ கட்டாய மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த முனைந்தால் நீதித்துறையின் பரிபாலனம் ஆடிப்போகாதா?

எடுத்தேன் கவிழ்த்தேன் எனத் தான் விடுக் கும் ஆணைகளால் இத்துனை பாரதூரமான பின் விளைவுகள் ஏற்படும், ஏற்பட வாய்ப் புண்டு என்றெல்லாம் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கவனிக்காதது ஏன்?

உண்மை என்னவெனில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சிந்திப்பவர்கள்தாம், ஆனால், நீதிபதி கர்ணன் அவர்களைத் தண்டித்தே ஆக வேண்டும் என்ற அவசரத்தில், அவர்கள் தங்கள் ஆணைகளின் பின் விளைவுகளைக் கவனத்தில் கொள்ளவில்லை.

**நீதிபதி கர்ணனை தண்டிக்கத் தேர்ந்தெடுத்த நாள்**

மே 9. 2017 ஆம் நாள் உச்ச நீதிமன்றத்தின் கடைசி வேலை நாள். அதன்பின், உச்சநீதி மன்றம் கோடை விடுமுறைக்காக விடுப்பில் செல்லும். விடுப்பிற்குப் பின்தான் தண்டனை என்றால், தண்டனைத் தள்ளிப்போகும். மே 27-இல் உச்ச நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவர் ஓய்வு பெற்றுவிடுவார்.

நீதிபதிகளில் ஒருவர் ஓய்வு பெற்றுவிட்டால் மீண்டும் ஒரு நீதிபதிகள் குழுவை நியமிக்க வேண்டும். அதில் சில முறைகளை - சாங்கியங் களைக் கடைபிடிக்க வேண்டும். அதில் காலம் கடரும். இதனிடையே ஜூலை 12ஆம் நாள் நீதிபதி கர்ணன் ஓய்வு பெற்று விடுகின் றார். அதனால் அவரைத் தண்டிக்க வியலாத நிலையொன்று வந்துவிடும். அதனால்

அவரைத் தண்டிக்க மே 9, 2017-இல் தண்டித்துவிட்டே விடுப்பில் செல்வது என முடிவு செய்தார்கள்.

அத்தனை வேகம், ஆர்வம், ஆசை ஏன்?

ஆக மே 9, 2017 அன்றே குற்றவாளி என்றும் அறிவித்தார்கள். அதே நாளில் தண்டனையையும் அறிவித்து விட்டார்கள். அந்தத் தண்டனை மே மாத சிறை தண்டனை உடனேயே கைது நடவடிக்கைகள்.




இதில் மிகப்பெரிய அநீதி ஒன்று நடந்தது. அது ஒருவரை குற்றவாளி என அறிவிப்பதற்கும், அவருக்குத் தண்டனையை அறிவிப்பதற்கும் இடையே இடைவெளி ஒன்று விடப்பட வேண்டும். இந்த இடைவெளியில் குற்றவாளி என அறிவிக்கப்பட்டவர் தனது வழக்கறிஞர் மூலம், தனது வாதங்களை முன் வைக்கலாம். இந்த இருதரப்பு வாதங்களையும் செவி மடுத்தபின் தண்டனையை அறிவிப்பார்கள்.

சாதாரணமாக தண்டனையை சற்று இடைவெளிவிட்டே அறிவிப்பார்கள். ஆனால் உச்ச நீதிமன்றம், சாதாரண குற்றவாளிகளுக்கு வழங்கும் இந்த கால அவகாசத்தை ஒரு நீதிபதிக்கு கூட வழங்கிடவில்லை.

இது எதைக் காட்டுகின்றது. நீதிபதி கர்ணனை சிறையில் தள்ளித் தங்கள் கோபத்தை தங்கள் மேலாதிக்கத்தைக் காட்டிட வேண்டும் என்பதைத்தானே காட்டுகின்றது.

சமூக நீதிக்கான போர்க்களத்திலே நிற்பவர்கள், அவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர் என்பதால்தான் இப்படியா? என்றொரு வினாவை முன் வைத்தால், அதில் தவறென்ன இருக்க முடியும்?

இந்த கால அவகாசம், அதாவது குற்றவாளி என்ற அறிவிப்பிற்கும், தண்டனைக்கும் இடையே உள்ள கால அவகாசம் தரப்பட்டிருந்தால் ஒரு வேளை கர்ணன் மன்னிப்புக் கேட்டிருக்கலாம். அவர் அப்படி மன்னிப்பு கேட்டிருந்தால் மொத்த விவகாரமும் அங்கேயே முடிந்து போயிருக்கும்.

**அதேநாளில் அதே நீதிமன்றத்தில் இன்னொரு அறையில்...**

மே 9, 2017 அன்று நமது உச்ச நீதிமன்றத்தின் இன்னொரு அறையில் ஒரு வழக்கு. அது,

9000 கோடி ரூபாயுடன் ஓடிப் போன மல்லையா என்ற வங்கிக் கொள்ளைக்காரன் வழக்கு. இவர் நமது வங்கிகளிடம் 9000 கோடி ரூபாயைக் கடனாக வாங்கிக் கொண்டு நாட்டை விட்டு ஓடிவிட்டார்.

இவர் நாட்டை விட்டு ஓடிவிட்டார் என்பது கூட நியயமான சொற்களாக இருக்காது. இவரை நமது மோடி அரசாங்கம் பத்திரமாக வெளிநாடு அனுப்பி வைத்தது. 7 சூட்கேஸ்களுடன் அத்தனை பாதுகாப்பாக அனுப்பி வைத்துவிட்டு, இப்போது மல்லையாவை இந்தியாவிற்குள் கொண்டு வருவதற்கு முயற்சி செய்வதைப்போல் பாசாங்குக் காட்டி வருகின்றது.

இத்தோடு நிற்கவில்லை விஜய் மல்லையாவுக்குக் காட்டிய சலுகைகள். அவர் வெளிநாடுகளிலிருந்து கொண்டே, தனக்குச் சொந்தமான தன்னுடைய பிள்ளைகளுக்கு 40 மில்லியன் டாலர்களை, ரூபாய் சுமார் இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் கோடி ரூபாயை மாற்றினார். இதற்கும் அரசு உதவி செய்தது. ஆனால் பின்னால் அவர் பணத்தைச் சட்ட விரோதமாக மாற்றினார் எனக்கூறி அவர் மீது

வழக்குத் தொடர்ந்தது. நீதிமன்றங்கள் அவர் எந்தப் பணத்தையும் எங்கேயும் மாற்றிடக் கூடாது என ஆணைகள் பிறப்பித்தன. அவர் எந்த நீதிமன்ற ஆணையைப் பற்றியும் எந்த கவலையும் படவில்லை.

விஜய் மல்லையா எந்த நீதிமன்ற ஆணை யையும் கீழ்ப்படியவில்லை. நீதிமன்றங்களை தொடர்ந்து அவமானப்படுத்தி வந்தார்.

விஜய்மல்லையா மீது தொடுக்கப்பட்ட வழக்குகள், எல்லா எல்லைகளையும் கடந்து உச்ச நீதிமன்றம் வந்தது.

உச்ச நீதிமன்றம், அவர் சுவிச்சர்லாந்து வங்கியில், கள்ளப் பணம், கறுப்புப் பணம் வைத்திருக்கின்றார். அந்தக் கறுப்புப் பணத்தை பற்றிய எல்லாத் தகவல்களையும் அவர் தெரி விக்க வேண்டும் என்றும், அந்தப் பணங்களை



அவர் தன் குழந்தைகளுக்கோ, வேறு யாருக் குமோ மாற்றிடக் கூடாது என ஆணைப் பிறப்பித்தது. இந்த ஆணைகள் அனைத்தையும் அவர் காற்றிலே வீசினார். அவர் மீது - விஜய் மல்லையா மீதும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப்பட்டது.

வெளிநாட்டில் சொகுசாக வாழ்ந்து கொண்டிருக்கும் அவரை, உச்ச நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் நேரில் ஆஜராக வேண்டும் என ஆணைப்பிறப்பித்தது. அந்த ஆணையை அவர் மதிக்கவில்லை. உச்ச நீதி மன்றத்தில் நேரில் ஆஜராகவுமில்லை. இதையும் உச்சநீதிமன்றம் விஜய் மல்லையா தன்னை அவமதித்தாகவும் எடுத்துக் கொண்டது.

இந்த விஜய் மல்லையாவின் மீதான நீதி மன்ற அவமதிப்பு வழக்கும் மே 9, 2017 அன்று தான் விசாரணைக்கு வந்தது. இதை நீதிபதி கர்ணனின் வழக்கு நடந்து கொண்டிருந்த அதேநாளில், அதே நேரத்தில் இன்னொரு அறையில் விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

**- நீதிபதி கர்ணனை போல் விஜய்மல்லையா உச்ச நீதிமன்றத்தில் ஒருமுறை கூட ஆஜராக வில்லை.**

**- அதேபோல் எழுத்துப்பூர்வமாக எதையும் உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.**

ஆனால் உச்ச நீதிமன்றத்தின் அந்த அறையில் அமர்ந்திருந்த நீதிபதிகள் ஆதார்ஷ் குமார் கோயால், உதேசமேஷ் லலித் உடனேயே மல்லையாவை குற்றவாளி என்று அறிவிக்க வில்லை. அந்த கனமே தண்டனை யையும் அறிவிக்கவில்லை. மாறாக, அந்த நீதிபதிகள் இன்னொரு அவகாசத்தைக் கொடுத் தார்கள். மொத்த வழக்கையும் ஜூலை 20 ஆம் நாளுக்கு ஒத்திப் போட்டார்கள்.

ஊரை அடித்து உலையில் போடுவது போல், நமது வங்கிகளையெல்லாம் கொள்ளை யடித்து சுவிஸ் வங்கியில் வைத்துக்கொண்டு, வெளி நாட்டில் அழகிகளுடன் சல்லாபித் துக் கொண்டிருக்கும் ஒருவனுக்கு கொடுத்த அவகாசத்தை இன்னும் "Procedural Faciness" நீதிமன்ற முறைமைகளின் - சாங்கியங்களின் நியாயத்தைக் கூட கர்ணனுக்கு வழங்கிட வில்லை. ( Front Line June,9-2017)

இது எதைக் காட்டுகின்றது? அவர் தாழ்த் தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர் என்பதனா லேயே என மக்கள் கேட்பது நியாயந்தானே.

**நியாயமான ஆலோசனை**

உச்ச நீதிமன்றத்தில் கர்ணனுக்கு எதிராக வாதாடிய மத்திய அரசின் வழக்கறிஞர்

முகுல் ரோகாட்கி, (இவருடைய சேவையை உச்ச நீதிமன்றம் கேட்டுப் பெற்றது) - நீதிபதி களுக்கும் சாதாரண குடிமக்களுக்கும் இடையே எந்தப் பாகுபாட்டையும் உச்ச நீதிமன்றம் பார்க்காது என்பதைக் காட்ட கர்ணனை தண்டித்தே ஆக வேண்டும், என வாதிட்டார்.

ஆனால் சென்னை உயர்நீதி மன்றத்தின் சார்பில் வாதிட்ட வழக்கறிஞர். கே.கே. வேணு கோபால் இந்த விவாகரத்தைப் பெரிது படுத்தாமல் விட்டு விடலாம். நீதிபதி கர்ணன் ஜூன் 12-இல் ஓய்வு பெற்று விடுகின்றார். அதன்பின் அவர் தானாக ஓய்ந்து விடுவார். விவகாரமும் யாருக்கும் நெருடல் இல்லாமல் முடிந்துவிடும் எனக் கூறினார்.

மூத்த வழக்கறிஞர் கே.கே.வேணுகோபால் அவர்கள் சொல்வதைக் கேட்டிருந்தால், உச்ச நீதிமன்றம், இந்த அளவுக்கு ஊடகங்களின் விமர்சனத்திற்கு உள்ளாகி இருக்காது.

நீதிபதிகளின் தேர்வுமுறை வேண்டுமானால் விசாரணைக்கு உள்ளாகி இருக்கும். ஆனால் நமது உச்ச நீதிமன்றம் நீதிபதி கர்ணன் அவர்களைத் தண்டித்தாக வேண்டும் என்பதில் வேகத்தோடு இருந்ததே அல்லாமல், விவேகத்தைக் கடைப்பிடிக்கவில்லை.

**தீர்ப்பில்லாமல் தண்டனை**

உச்சநீதிமன்றத்தின் பட்டவர்த்தனமான வேகம் அவர் விஷயத்திலும் பளிச்சென தெரிந்தது. அது நீதிபதி கர்ணனுக்கு 6 மாத சிறைத்தண்டனை அறிவிக்கப்பட்டது. ஆனால் அதற்கான எழுத்துப்பூர்வமான தீர்ப்பு பின்னர் தான் வரும் என அறிவிக்கப்பட்டது.

அதாவது அன்றைய தினமா அல்லது அடுத்து வந்த நாளிலோ அவர் அந்தத் தீர்ப்பை எதிர்த்து எங்கேயாவது மேல்முறையீட்டுச் சென்றிட விரும்பினால் அது நடக்காது. இனி உச்ச நீதிமன்றத்தின் முழு அமர்வு ஒரு தீர்ப்பை கொடுத்துவிட்டால் அதற்குமேல் எந்த வழியு மில்லை. இப்படி நீதிபதி கர்ணன் பல்வேறு அநியாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

**நீதித்துறையில் ஜாதியா?**

இப்படி ஒரு கேள்வியை, மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு அவர்கள் இப்படிப்பதில் சொன்னார்கள்.

ஆமாம்! நீதித்துறையினுள் ஜாதியம் இருக்கின்றது. இந்த ஜாதியம், நாம் சமூகத் தளத்தின்மேல் மட்டத்தில் இருப்பதுபோலவே இருக்கின்றது. படித்தவர்கள் மட்டத்திலிருக் கும் ஜாதியத்தைப் போன்றது. இது நீதித்துறை யிலும் நடக்கின்றது. (Front Line June 9, 2017)

**கர்ணன் சொல்வதை எழுத தடை !**

நீதிபதி கர்ணன் விவகாரத்தில் நீதிமன்றம் இன்னொரு, அதிரடி முடிவையும் அறிவித்தது. அதில் இப்படிக் கூறியது. இனி பத்திரிகைகள், ஊடகங்கள் நீதிபதி கர்ணன் சொல்வதை வெளியிடக் கூடாது என்பதே அது. இதனை மொத்த ஊடகங்களும் எதிர்த்துள்ளது.

**தண்டனை வந்தது முன்னே, தீர்ப்பு வந்தது பின்னே.!**

இறுதியில் கர்ணனுக்கு சிறைபிடிவாசம் முன்னே மே 9-ல் தீர்ப்பு ஏறத்தாழ ஒரு மாதம் கழித்து ஜூலை நான்காம் நாள் வந்தது.

எல்லா நீதிபதிகளும் ஓய்வு பெற்றபின் ஏதாவது ஒரு பொம்மை பதவியைக் கொடுத்து சம்பளம்-படி-எனக் கொடுக்கின்றார்கள். நீதிபதி கர்ணன் சிறையில் இருக்கின்றார்.

**ஓர் உயர்நீதிமன்ற நீதிபதியை சிறைக்கு அனுப்பும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்கு உண்டா?**

இந்தக் கேள்விக்கு உயர்நீதிமன்ற நீதிபதி அப்கா திப்சேய் Abhay Thipsay அவர்கள் இப்படிப் பதில் சொல்லுகின்றார்கள்.

நிச்சயமாக உச்ச நீதிமன்றத்திற்கோ, இந்தியாவின் தலைமை நீதிபதிக்கோ அப்படி ஒரு அதிகாரம் நிச்சயமாக இல்லை. ஒரு உயர்நீதிமன்ற நீதிபதி மீது ஒழுங்கு நடவடிக் கையோ, நிர்வாக நடவடிக்கையோ எடுக்க வேண்டும் என்றால் அதற்கான ஒரே வழி நாடாளுமன்றத்தின் வழி "Impeachment" பதவி இழக்கச் செய்வதுதான்.

Frontline : June 9, 2017

# தலீத் நீதிபதிக்கு நீதி கிடைக்குமா?

ஆந்திரப் பிரதேச மாநிலம். அதில் கடப்பா மாவட்டம், இந்த மாவட்டத்தில், ராயச் சோட்டி என்றொரு முக்கிய நகரம்.

இந்த இடத்தைச் சார்ந்த நபர் ஒருவர் ஆந்திரப் பிரதேச உயர்நீதிமன்றத்தில், நீதிபதியாகி பணியாற்றி வருகின்றார். அவருடைய திருப்பெயர் C.V. நாகார்ஜூனா ரெட்டி.

நீதிபதி நாகார்ஜூனா ரெட்டிக்கு ஒரு தம்பி அவருடைய பெயர், பாவன்ரெட்டி. இவர் ஏலச்சோப்பி நகரில் பேட்டை ரவுடி மட்டுமல்ல, செம்மரக் கடத்தலில் சிங்கம். இவருடைய கடத்தல்கள் எப்படி நடக்கின்றன என்றால் நமது வன இலாகாவின், வாகனங்களைத் திருடி, அதில் செம்மரங்களை ஏற்றிச் சென்று கள்ளச் சந்தையில் விற்பனை செய்வார். இவரை யாரும் அசைக்க முடியாது. காரணம், இவருடைய சகோதரர் சி.வி.நாகார்ஜூனா ரெட்டி உயர்நீதிமன்ற நீதிபதி.

இவரை அதாவது செம்மரக் கடத்தல் மாவீரன் பாவன் ரெட்டியை இன்னொரு காரணத்திற்காகவும் யாரும் அசைக்க முடியாது. காரணம், இவர் ராயச்சோட்டி நகர நீதிமன்றத்தில் அரசாங்கத்தின் துணை வழக்கறிஞர் APP. Additional Public Prosecutor, இதுவும் சட்டத்திற்கு எதிரானதே. இதை பலமுறை பல அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன, பலனில்லை.

செம்மரத்தைக் கடத்தும் இவர் மீது வழக்கு தொடர முடியாது. காரணம், இவரே தான் அந்த வழக்கை ஜோடித்து நடத்திட வேண்டும்.

இத்தோடு நிற்கவில்லை. இவர்தான் அதாவது ஆந்திர மாநிலத்தின், உயர்நீதிமன்ற நீதிபதியின் தம்பிதான், ராயச்சோடி நீதிமன்றத்தின் தாதாவும்கூட. இந்த நீதிமன்றத்தில், பிணை கிடைக்க வேண்டும் என்றால், இவரைக் கவனிக்க வேண்டும். இவரைப் பிடித்தால் நீதிமன்ற ஆவணங்களையே காணாமலாக்கலாம். வழக்குகள் விசாரணைக்கு வராமல் பார்த்துக் கொள்ளலாம்.

இந்த தாதாவின் மேல் பல புகார்கள் இருக்கின்றன. ஆனால், யாரும் எதுவும் செய்திட இயலவில்லை. இந்த மமதையில் ஒரு கொலையையே செய்துவிட்டார் பாவன்ரெட்டி. அண்ணன் உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்திடும்போது, அவரை என்ன செய்திட இயலும்.

ஆமாம்! பாவன்ரெட்டி வழக்கம் போல், வன இலாகாவின், வாகனம் ஒன்றை திருடினார். செம்மரத்தை வன இலாகாவிலிருந்தே கடத்தினார். ஆனால் இந்த முறை வன இலாகா வழக்கத்திற்கு எதிராக அவர் மீது வாகன திருட்டுப் புகாரை பதிவு செய்தது. பாவன் ரெட்டி தன் கையாள ஒருவரிடம் நான் தான் திருடினேன் என ஒத்துக்கொள் என்றார். வீணாக ஏன் திருட்டுக் குற்றத்தை ஒத்துக் கொள்ள வேண்டும் என எண்ணிய அந்த கையாள் ஒத்துக் கொள்ளவே மாட்டேன் எனப் பிடிவாதமாக இருந்துவிட்டார். அவர் பெயர் இராமஜூலு,

இராமஜூலு வாகனத் திருட்டை ஒத்தக் கொள்ள மறுத்ததால், அவரை பாவன் ரெட்டி மண்ணெண்ணையை ஊற்றி எரித்துக் கொன்றுவிட்டார். ஆனால், இராமன்ஜூலு மரண வாக்குமூலத்தில் அழுத்தம் திருத்தமாக, பாவன் ரெட்டித்தான் தன்னை கொலை செய்தார் எனக் கூறிவிட்டார்.

மரண வாக்கு மூலத்தை வாங்கியவர் மாவட்ட நீதிபதி. அவர் ஒரு தலீத். பெயர் இராமகிருஷ்ணா. இராமன்ஜூலுவின் மரண வாக்குமூலம் மிகவும் பலமாக இருந்ததால் பாவன் ரெட்டி கொலை குற்றத்தில் மாட்டிக் கொள்வார் என்ற நிலை. அதனால் மரண வாக்கு மூலத்திலிருந்து தனது பெயரை எடுத்துவிட கூறினார். மாவட்ட நீதிபதியோ கேட்க

வில்லை. இதனால் பாவன்ரெட்டி தன் சகோதரன் உயர்நீதிமன்ற நீதிபதி சி.வி.நாகார்ஜூனா ரெட்டியை ஏவினார். நீதிபதி நாகார்ஜூனா ரெட்டி மாவட்ட நீதிபதியை நேரில் சந்தித்தார், விட்டார் ஒரு அறை. அந்த தலீத் நீதிபதியை ஜாதியைச் சொல்லியே திட்டினார். என்ன வார்த்தைகளைப் பயன்படுத்தினார் என்பதை நாம் குறிப்பிட விரும்பவில்லை.




**மாவட்ட நீதிபதி ராம்கிருஷ்ணனின் போர்**

மாவட்ட நீதிபதி. ராம்கிருஷ்ணனின், தனக்கு ஏற்பட்ட அவமானத்திற்கெதிராகவும், நீதியை நிலைநாட்டி பாவன் ரெட்டியைத் தண்டிக்கவும் வெகுண்டெழுந்தார். முதலில் உயர்நீதிமன்ற நாகார்ஜூனா ரெட்டியின்மேல் முறையான புகார் ஒன்றை தயார் செய்தார். அதில் நாகார்ஜூனா, கீழேயுள்ள நீதிமன்ற நடவடிக்கைகளில் குறுக்கிட்டது முதல் குற்றம், இதனை விசாரிக்க வேண்டும், தண்டனைத் தரப்பட வேண்டும்.

தன் சகோதரனின் பெயரை மரண வாக்கு மூலத்திலிருந்து விடச்சொல்லி கட்டாயப் படுத்தியது. அதில் தன் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியது. ஒரு நீதிபதியை அறைந்தது கிரிமினல் குற்றம். அவருக்கு தண்டனை தரப்பட வேண்டும்.

தன்னை ஜாதியின் பெயரைச் சொல்லி வைத்தது, இந்தப் புகார், உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு வந்தது. அவர் அதை விசாரித்து, உண்மைகளை அறிக்கைகளாகத் தயாரித்து உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பினார். மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க. ஆனால், இரண்டு முறை உயர் நீதிமன்றத்தில் இந்தப் பிரச்சனையைக் கிளப்பிய பின்னர், உச்ச நீதிமன்றம் தன்னளவில் ஒரு குழுவை அமைத்து விசாரணையை நடத்தியது. அதில் மாவட்ட நீதிபதி ராம்கிருஷ்ணன் கூறிய குற்றச் சாட்டுகள் எல்லாம் உண்மைதான் எனக் கண்டுபிடித்தது. ஆனால், நடவடிக்கை எடுக்கத் தயங்கியது. ராம்கிருஷ்ணன் ஒரு பிரஸ்மீட் - பத்திரிகையாளர்கள் சந்திப்பை நடத்தினார். நடவடிக்கை வந்தது. நாகார்ஜூனாவை பதவி நீக்கம் செய்ய Implacement by Parliament நாடாளுமன்றத்திற்குப் பரிந்தரைத்தது. நாகர்ஜூனா தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டார்.

நாடாளுமன்றத்தில் நாகார்ஜூனாவை பதவி நீக்கம் செய்ய போதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டார்கள். ஆனால் திடுதிப்பென 64 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் நிலையிலிருந்து பின் வாங்குவதாக அறிவித்துவிட்டார்கள். இதனால் பதவி நீக்கம் செய்யும் மனு நாடாளு மன்றத்தை எட்டியே பார்க்கவில்லை.

நீதிபதி நாகார்ஜூனா ரெட்டி மீண்டும் அடுத்த நாளே பதவியில் சேர்ந்தார். ஆனால் மாவட்ட நீதிபதி ராம்கிருஷ்ணாவைக் காண வில்லை.

அவரை பாவன்ரெட்டி தனது பாணியில் ஏதாவது செய்திருப்பாரோ என எல்லோரும் அஞ்சுகின்றார்கள்.

எப்படி இருக்கின்றது நீதியின் பயணம் நம் நாட்டில்...

நாகார்ஜூனா ரெட்டி அத்தனை கிரிமினல் குற்றங்களுக்கும் பின்னர் நீதிபதி பதவியில்....

நீதிக்காகப் போராடிய ராம்கிருஷ்ணா தலீத்-ஐ காணவில்லை.

நீதிபதி கர்ணனை தலீத் - சிறையில் இனி மின்னணு இயந்திரங்கள் வாக்களிக்கட்டும்.

பாசிசம் பதவியில் இந்த கொடுமை களிலிருந்து இந்தியாவைக் காப்பாற்றிட இன்றே எழுவோம். செய்தி ஆதாரம் Front Line June 9, 2017

**- எம்.ஜி.எம்.**



# 12 ஆண்டுகளுக்குப் பின்

# 10 முஸ்லிம்கள் சிறையிலிருந்து விடுதலை

**அக்டோபர் - 12, 2005 அன்று ஹைதராபாத், பேகம்பட் பகுதியிலுள்ள சிறப்புக் காவல்துறையின் அலுவலகம் Office of the Special Task Force அதனுள் இரண்டு இளைஞர்கள் நுழைகின்றார்கள்.**

அவ்களைச் சோதனை செய்கின்றார்கள் காவலர்கள். அவர்களின் உடம்பை சோதனையிட்டபின் அவர்களின் கைப் பைகளை சோதனை இடுகின்றார்கள். ஒருவரின் பையிலிருந்த (LED Explosive) என்ற வகை குண்டு வெடிக்கின்றது. சத்தியநாராயணன் என்பவரும் வெடி குண்டை கொண்டு வந்த தலீன் என்பவரும் இறந்து போகின்றார்கள். காவல்துறையின் அந்த அலுவலகம் பயங்கரமான பாதிப்புக்கு உள்ளாகின்றது. உடனேயே வழக்கமான பாணியில் முஸ்லிம் அமைப்புகளின் பெயர்கள் அறிவிக்கப்பட்டன.

இந்தியாவில் உள்ள அமைப்புகளை விட்டு, பங்களா தேஷ் அமைப்பின் பெயரை பெரியதாக மொழிந்தார்கள். "ஹூஜி" என்ற அமைப்பின் பெயரை உடனேயே ஊடகங்களில் சொன்னார்கள். வழக்கம்போல் 20 முஸ்லிம்களின் பெயர்களைச் சொல்லி அவர்களை கைது செய்திட தொடங்கினார்கள்.

தலீன் என்பவர் பங்களாதேஷிலிருந்து வந்த தற்கொலை படை எனக் கூறினார்கள். குண்டு வெடிப்பு உலக மக்களின் கவனத்தைப் பெரிதாக ஈர்த்தது. அதற்கு இரண்டு காரணங்கள்..

1. குண்டு வெடிப்பு சிறப்புகாவல் துறையின் அலுவலகத்தில் நடந்தது.

2. இதற்கு சில கட்டிடங்களுக்கு அப்பால் ஆந்திராவின் அப்போதைய முதுலமைச்சர் Y.S. இராஜசேகர் ரெட்டி, முகாமிட்டிருந்தார்.

(2005களிலேயே) அப்போதே இந்தக் குண்டு வெடிப்புகளை முஸ்லிம்கள் நடத்தியிருக்க வாய்ப்பில்லை என்பது தெளிவானது. காரணம், சீஸி என்று மக்களால் செல்லமாக அழைக்கப்படும் YSR இராஜசேகர ரெட்டி அவர்கள் முஸ்லிம்கள் மிகவும் பாசமாகவும், அக்கறையோடும் நடந்து கொண்டிருந்தவர்.

மட்டுமல்லாமல் முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீட்டை வழங்கியவர். அதனை பாசிச பரிவாரங்கள், எதிர்த்தபோதிலும், நீதிமன்றங்கள் முட்டுக்கட்டைகளைப் போட்டபோதும், அவர் அஞ்சவில்லை, பின் வாங்கிடவில்லை. உறுதியுடன் முஸ்லிம்களுக்கான இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்தினார் ஆந்திர மாநிலத்தில் பல குண்டு வெடிப்புகளிலும் கைது செய்யப்பட்டு சிறைகளிலும், சித்திரவதைக் கூடங்களிலும் சிதைந்துபோன முஸ்லிம்கள் ஏராளம்..! ஏராளம்..!

அவர்கள் எல்லாம் பல ஆண்டுகள் சிறை வாசத்திற்குப்பின் அப்பாவிகள் குற்றமற்றவர்கள் குருட்டுத் தனமாக காவல்துறையால் கைது செய்யப்பட்டவர்கள் என நீதிமன்றங்களால் விடுதலை செய்யப்பட்டபோது அவர்களுக்கு நிவாரணமும் வழங்கிய மாண்பாளர் Y.S. இராஜசேகர ரெட்டி. அரசு வேலைகளை வழங்கியவர். கவிழ்ந்து கொண்டிருந்த காங்கிரஸ்

கட்சியைத் தூக்கி நிறுத்தியவர். பா.ஜ.க.வை தோல்வியடையச் செய்தவர். அந்த மகானுக்கு எதிராக முஸ்லிம்கள் கற்பனையில் கூட கனைத்துக்காட்ட மாட்டார்கள். ஆனால் அவரையும் சேர்த்தே அழிக்க அக்டோபர் 12, 2005-இல் குண்டு வைத்தார்கள் எனப் பொய்களைக் கட்டவிழித்துவிட்டார்கள்.

அப்பாவி முஸ்லிம்கள் 20 பேர் மேல் பழியைப் போட்டு 10 முஸ்லிம்களை - இல்லை - முஸ்லிம் இளைஞர்களைக் கைது செய்தார்கள். இன்னும் பத்து பேரை தேடிக் கொண்டிருப்ப தாகக் கூறினார்கள். சிறப்பு புலனாய்வு குழு ஒன்று அமைத்தார்கள்.

இதனிடையே இந்த குண்டு வெடிப்பு வழக்கை விசாரித்த திவாகர் என்ற காவல்துறை அதிகாரி அமெரிக்கா சென்றுவிட்டார். அங்கி ருந்து புதிய திட்டங்களோடு வந்தார். இதனி டையே தேடப்பட்டுவந்த 10 முஸ்லிம் இளைஞர் களில் ஒருவரை, குலாம் யஷ்தானியை டெல்லி யில் வைத்துக் கொலை செய்தார்கள். என்கவுண் டர் எதிர் தாக்குதல் எனப் பெயர் வைத்தார்கள். இன்னொருவரை பாகிஸ்தானில் வைத்த அங்குள்ள உளவுத்துறை கொலை செய்ததாகப் புருடா விட்டார்கள். 8 பேர் தலைமறைவு என்றார்கள்.

SIT என்ற சிறப்புப் புலனாய்வுத் துறையினர் மொத்த தாக்குதலும் பெரிய "சதி" திட்டத்தின் கீழ் நடந்தது எனக் கதைகட்டினர். பத்திரிகைகள் முதல் பக்கத்தில் அதை வெளியிட்டன.

ஏன் இப்படியொரு தாக்குதலை முஸ்லிம் கள் செய்ய வேண்டும் என்பதற்கும் "ஷிமிஜி" சிறப்புப் புலனாய்வுத்துறை விளக்கம் சொன்னது. அது, 2004 ஆம் ஆண்டு, குஜராத் காவல்துறை யால் கொலை செய்யப்பட்ட முஹாஜித் ஷஹீத் என்பவரின் கொலைக்குப் பழிவாங்கவே எனக் கூறியது (SIT), ஆனால் வழக்கில் எதையுமே நிரூபிக்க இயலவில்லை.

ஆகஸ்ட் 10, 2017 -இல் தீர்ப்பு வழங்கிய ஹைதராபாத் நாம்பள்ளி சிறப்பு நீதிமன்ற நீதிபதி டி.எஸ்.சீரினிவாசராவ் "சதி" என்றொன்று நடக்கவே இல்லை என தன் தீர்ப்பில் அடித்துக் கூறினார்.

அப்பபவி முஸ்லிம்களின் சார்பில் வழக்கைச் செம்மையாக நடத்திய வழக்கறிஞர் அப்துல் அசீம், அவர்கள் குண்டு வெடிப்பு நடந்த இடத் தில் கிடந்த வெடி பொருள்களும், நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கட்ட வெடி பொருள்களுக்குமிடையே எந்த சம்மந்தமுமில்லை என் நிரூபித்தார்.

குண்டு வெடிப்பு நிகழ்ந்த இடத்தில் கிடைத்த வெடிபொருள் வேறு, நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வெடி பொருள்கள் வேறு. இதில் எழும் பெரிய கேள்வி என்னவெனில் குண்டு வெடிப்பு நடந்த இடத்தில் கிடைத் வெடி பொருள்களை, காவல்துறை கைப்பற்றியது என்பது உண்மை. அப்படி இருக்க காவல்துறை ஏன் வேறு வெடி பொருள்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

உண்மையான குற்றவாளிகள் சிக்கிக் கொள்ளக்கூடாது என்பதுதானே நோக்கம். அப்படியானால் உண்மையான குற்றவாளிகள் யார்?

தெஹல்கா பத்திரிகையின் அஜித்ஷாகி கூறுவதைப்போல் இந்துத்துவா தீவிரவாதிகளா? உளவுத்துறையினரா? என்று வினா எழுகின்றது.

இங்கு (ஷிமிஜி) என்ற சிறப்புப் புலனாய்வுத் துறையின் நோக்கம். அப்பாவி முஸ்லிம்கள் சிறைபடலாம். ஆனாலும், உண்மையான குற்றவாளிகள் சிக்கிவிடக்கூடாது என்பதே. ஆனால், அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் 10 முஸ்லிம்களும் - அப்பாவிகள் என விடுதலைச் செய்யப்பட்டுள்ளார்கள்.

ஆனால், அதற்குள் அவர்கள் 12 ஆண்டு காலம் சித்திரவதைக் கூடங்களிலும், சிறையிலும் தங்கள் பொன்னரிய இளமையைத் தொலைத் திட வேண்டியதாயிற்று.

இந்த 12 முஸ்லிம்களின் வாழ்க்கையைப் பாழாக்கிய காவல்துறையின்மேல் வழக்குப் பதிவு செய்வோம். அரசிடம் நிவாரணம் கேட்போம், தராவிட்டால் வழக்குத் தொடர்வோம் என இந்த அப்பாவி முஸ்லிம்களின் வழக்கறிஞர் அப்துல் அசீம் கூறியுள்ளார்.

இன்ஷா அல்லாஹ் அவர் வெற்றி பெற துஆ செய்வோம் - துணை நிற்போம்.

என் கவுண்டர் என்ற எதிர் தாக்குதலில் கொலை செய்யப்பட்ட - சிறைப்பட்டிருந்தது. இப்போது விடுதலையடைந்திருக்கும் முஸ்லிம் கள் கைது செய்யப்படும்போது இளைஞர்கள் 20, 25 என வயதை உடையவர்கள். இவர்களின் இளமையும், வாழ்க்கையும் இவர்கள் குடும்பத் தினரின் வாழ்க்கையும் சீரழிந்து போனது.

**அல்லாஹ்வே அவர்களுக்குக் கூலி தர போதுமானவன்!**

**- எம்.ஜி.எம்.**

# பாபரி மஸ்ஜித் வழக்கு அரசின் இன்னொரு சதி

பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் கோயில் கட்டிட எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது மோடி அரசு, அதில் ஒரு முயற்சியாக திடுதிப்பென "ஷியா" முஸ்லிம்களுக்கென அமைக்கப்பட்ட வக்ஃப் போர்டை வம்புக்கிழுத்தது. இந்த போர்டை மிரட்டி தன் கையில் வைத்துக்கொண்டது.

பின்னர் இந்த போர்டின் கைகளில் ஒரு மனுவை தயாரித்துக் கொடுத்து அந்த மனுவில் பாபரி மஸ்ஜித் - அது இருந்த இடம் இவை யெல்லாம் ஷியா முஸ்லிம்களுக்கே சொந்தம். அதை ஷியா முஸ்லிம்களின் சார்பில் நியமிக்கப் பட்டுள்ள "போர்டு" (குழுமம்) அரசுக்கு விட்டுத்தருகின்றது.

"அந்த இடத்தில் இராமருக்கு கோயில் கட்டிக்கொள்ளலாம், வசதியான ஓர் இடத்தில் அதாவது முஸ்லிம்கள் அதிகமாக வாழுமிடத்தில் மஸ்ஜித் ஒன்றைக் கட்டிக்கொள்ளலாம். ஒரே இடத்தில் பக்கத்துக்குப் பக்கம் கோயிலும், பள்ளிவாசலும் இருந்தால் அது பொது அமைதியைக் கெடுக்கும். ஏனெனில், இரு தரப்பாரும் ஒலி பெருக்கிகளைப் பயன்படுத்து வார்கள் என்றெல்லாம் உபதேசித்து 30 பக்கங் களைக் கொண்ட (அபிடவிட்) அறிக்கை ஒன்றை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

ஷியா மத்திய வக்ஃப் போர்டின் தலைவ ராக நியமிக்கப்பட்டுள்ள வசீம் ரிஸ்வி என்பவர் முழுமையாக சங்கப் பரிவாரத்திடம் விலை போய் விட்டார்.


வசீம் ரிஸ்வி

இவர்களை ஆட்டுவிப்பவர்கள் சங்கப் பாரிவாரத்தினர்தாம் இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால் மோடி அரசும், உத்திரப் பிரதேசத்தில் முதலமைச்சராக இருக்கும்யோகி ஆதியானந்த் என்பவரின் அரசும்தான் என்கிறார் கள் லக்னோவிலிருக்கும் இந்திய தேசிய லீக்-ன் தலைவர் முஹம்மத் சுலைமான்.









சேட் அவர்கள் (தொலைபேசியில் பேட்டி)

### கட்டப்பஞ்சாயத்து

இத்தோடு நில்லாமல் ஷியா வக்ஃப் போர்டைச் சார்ந்தவர்கள் அண்மையில், நமது உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சொன்ன அதே கட்டப்பஞ்சாயத்தையும் கோரியுள்ளார்கள். அந்தக் கட்டப்பஞ்சாயத்தில், பிரதம அமைச்சரின் அலுவலகத்திலிருந்து ஒருவரையும் குண்டு வைப்புப் புகழ் உத்திரபிரதேச முதல்வர் யோகி ஆதியானந்த் ஐயும் உறுப்பினர்களாக நியமிக்க வேண்டும் என்றும் அந்த அபிடவிட்-ல் கோரியுள்ளனர்.

ஆதாரம் : The New Indian Express, 09-08-2017

ஷியா வக்ஃப் போர்டின் இந்தப் பரிந்துரை இவர்கள் யாருடைய கைக்கூலி என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

ஷியா வக்ஃப் போர்டைச் சார்ந்தவர்களில் ஒரு கூட்டத்தார் **1945** முதலே இப்படியொரு கிளர்ச்சியை, பாபரி மஸ்ஜித் - விவகாரத்தில் செய்து வருகின்றார்கள். ஆனால் **1946** ஆம் ஆண்டில் உத்திரப் பிரதேச உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் அது சுன்னி வக்ஃப் போர்டுக்கே சொந்தம் என ஆணித்தரமாக தீர்ப்பு வழங்கியுள்ளது,

என்றாலும், மோடி, ஆதியானந்த் ஆகிய அரசுகளின் கெடுபிடிகளுக்குப் பயந்து அல்லது பெற வேண்டியதைப் பெற்றுக் கொண்டு, இந்த செஞ்சோற்றுக்கடனை ஆற்றியுள்ளார்கள் ஷியா வக்ஃப் போர்டைச் சார்ந்தவர்கள்.

### ஷியா மார்க்க அறிஞர்கள்

ஷியா வக்ஃப் போர்டு இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஷியா ஆலிம்களின் தலைமை ஆலிம் மௌலானா யாகூப் அப்பாசி, ஷியா வக்ஃப் போர்டின் கருத்துக்களை எதிர்த்துள்ளார்கள்.

தான் முஸ்லிம்களின் சார்பில் வழக்கை நடத்தும் முஸ்லிம் தனியார் சட்ட வாரியத்தின் நிலைப்பாட்டையே ஆதரிப்பதாகவும், பாபரி மஸ்ஜித் அது நின்று கொண்டிருந்த இடத்திலேயே கட்டப்பட வேண்டும் என்றும் கூறினார். (The New Indian Express 09.08.2017)

ஷியாக்களின் இமாமாகிய மௌலானா யாகூப் அப்பாசியுடைய கூற்றுக்களை எந்த ஷியா பிரிவினரும் மறுக்கவில்லை. இதிலிருந்து ஷியா வக்ஃப் போர்டின் கூற்றுகளுக்கு ஷியாக்களுக்குள் கூட ஆதரவு இல்லை என்பது தெளிவாகின்றது.

### ஜாஃபர்யாப் ஜீலானி

இந்த உண்மையை உறுதி செய்யும் அளவில், பாபரி மஸ்ஜித் வழக்குகளை அன்று முதலே கவனித்து வரும் ஜனாப் ஜாஃபர்யாப் ஜீலானி அவர்கள் இப்படிக் கூறியுள்ளார்கள்.

"ஷியா வக்ஃப் போர்டை சார்ந்தவர்கள் அலஹாபாத் உயர் நீதிமன்றத்தில் தங்கள் தரப்பு வாதங்களையெல்லாம் அவற்றை அறிக்கைகளாகவும் தாக்கல் செய்தார்கள். அப்போது அலஹாபாத் நீதிமன்றத்தில் எடுத்துக் கூறியவற்றிற்கும், பதிவு செய்த அபிடவிட்களுக்கும் எதிரானவை இப்போதைய கூற்று" எனக் கூறியுள்ளார்கள். (ஆதாரம் : The New Indian Express 09-08-2017)

ஆக இவர்கள் - அதாவது ஷியாக்கள் இப்போதைய மத்திய - மாநில அரசுகளின் கெடுபிடிகளுக்குப் பயந்துதான் தங்களையே பொய்ப்பிக்கும் அளவில் ஓர் அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்கள்.

இவர்கள் இந்த அறிக்கையை தாக்கல் செய்துள்ள நேரம், இவர்கள் அரசின் கெடுபிடிகளுக்கு அதிகமாகப் பயந்துள்ளார்கள் என்பதை

அடித்துக் கூறும்.

உச்ச நீதிமன்றம் பாபரி மஸ்ஜித் சம்பந்த மான அடிப்படை வழக்குகள் *11-08-2017* இல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படும் என அறிவித்திருக்கும்போது, இவர்கள் *08-08-2017* இல் இப்படியொரு பிரச்ச னையை கிளப்பியுள்ளார்கள். இது இவர்கள் யாருடைய கைப்பாவை என்பதை விளக்கும்



கபீல் சிபில்

**உச்ச நீதிமன்றம்**

நமது உச்ச நீதிமன்றத்திற்கு நீதியைத் தீர்ப்பாகத் தந்திட மனமில்லை. இதனை பாபரி மஸ்ஜித் - விவகாரத்தில், விடுதலை அடைந்த நாள் முதலே வெளிக்காட்டி வருகின்றது.

நடுவுநிலையான நீதிபதிகள் பலர் பாபரி மஸ்ஜித் வழக்கை இன்றளவும் கனன்று கொண்டி ருக்க வைத்துக் கொண்டிருப்பது, உச்ச நீதிமன் றமே எனச் சொல்லி வருகின்றார்கள். இதனை நாம் பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளோம்.

வாசகர்கள் அதனை வாங்கிப் படிப்பதுடன் சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கும் கொடுக்க வேண்டும் எனக் கோருகின்றோம். - வெளியீடு : வேர்கள்.

பாபரி மஸ்ஜித் - விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் செய்த சேவையில், நாட்டில் வகுப்பு வாதத் தீ எரிந்து கொண்டே இருக்கின்றது.

நாட்டு மக்களை இந்துக்கள் என்றும் முஸ்லிம்கள் என்றும் கூறுபோடுவதில் பாபரி மஸ்ஜித் விவகாரம் முக்கியப் பங்கை வகிக் கின்றது.

இந்தியாவின் ஒருமைப் பாட்டிற்கு வைக்கப் படும் இந்த வேட்டால் பாசிஸ்ட்டுகள் பயங்கர மாகப் பயனடைந்து வருகின்றார்கள். இந்தியா வின் எதிர்காலம் இருட்டுக்குள் அமிழ்ந்துக் கொண்டிருக்கின்றது. இப்போது உச்ச நீதி மன்றம் டிசம்பர் 5-ஆம் நாள்முதல் பாபரி மஸ்ஜித் வழக்கில் விசாரணை விரைந்து நடை பெறும் எனக் கூறியுள்ளது. *11.8.2017* விசாரணையை ஒத்திப்போட்டுவிட்டது.

**மொழிப்பெயர்ப்பு நாடகம்**

முன்னதாக பாபரி மஸ்ஜித் வழக்கு சம்பந்த மாக தாக்கல் செய்யப்பட்டுள்ள அத்தாட்சிகள் அனைத்தும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட வேண்டும் எனக் கூறியது. இது அந்த வழக்கை இழுத்தடிக்க எடுத்த முயற்சி என்பதே உண்மை.

காரணம் அலஹாபாத் உயர்நீதி மன்ற தீர்ப்பைத்தான் இப்போது சரியா? தவறா? எனக் கூறிடப் போகின்றது உச்ச நீதிமன்றம். அலஹா பாத் உயர்நீதி மன்றத்திற்குத் தெரிந்த மொழி உச்ச நீதிமன்றத்திற்குத் தெரியாதா? என்ன?

அப்படி தெரியாத மொழியில் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் அலஹாபாத் உயர் நீதிமன்றம் மொழிப்பெயர்க்கவில்லையா என்ன?

இருந்தாலும் இப்போது வழக்கை விரைந்து விசாரிக்கப்போவதாகவும் தேவையானஆவணங் களை அவ்வப்போது வழக்கு நடந்துக் கொண்டி ருக்கும் போதே மொழிப்பெயர்த்துக் கொள்ள லாம் என்றும் கூறியுள்ளது. (TH. 14-08-2017)

இதை முஸ்லிம்கள் சார்பில் வாதிக்க நியமிக் கப்பட்டுள்ள மூத்த வழக்கறிஞர் ராஜீவ்தாவன் வன்மையாகச் சாடினார். மொழிபெயர்ப்புகள் அனைத்தும் முதலிலேயே முடிக்கப்பட வேண் டும். தொடர்ந்து அவை சரிபார்க்கப்பட வேண் டும். அதுவும் முடிந்த பின்னே வழக்கை விசா ரணைக்கு எடுக்க வேண்டும் என வாதாடினார்.

காரணம், வழக்கு நடந்து கொண்டிருக்கும் போதே மொழிப்பெயர்ப்பு நடந்தால் வழக்கின் போக்கை அனுசரித்து மொழிப்பெயர்ப்பை மாற்றி தங்களுக்குச் சாதகமாக அமைப்பார்கள் என்றார்.

உச்ச நீதிமன்றம் இதற்குப் பதில் சொல்ல வில்லை. எது எப்படி இருந்தாலும் சிறுபான்மை யினருக்கு நீதி கிடைக்கும் சூழல் இப்போது இல்லை என்பதே உண்மை. **- எம்.ஜி.எம்.**




# அமெரிக்காவில் ஹிஜாப்?

**ஹிஜாப் அணிந்த பெண்மணிக்கு டாலர், 85,000 மான நஷ்ட ஈடாகந் தந்தது அமெரிக்க அரசு.**

அமெரிக்காவில், கிரிஸ்த்தி பாவல் என்றொரு முஸ்லிம் பெண்மணி. இவர் ஹிஜாப் (புர்கா) அணிந்துகொண்டு கார் ஒன்றை ஓட்டிக்கொண்டு வந்தார். அமெரிக்காவின் கலிபோர்னியா மாவட்டத்தின் பிரதானச் சாலையில்.

சாலை சோதனையில் ஈடுபட்ட போக்கு வரத்துத் துறை காவலர்கள், கிர்ஸ்தி பாவலின் காரை நிறுத்தினார்கள். அவரைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு அத்தோடு ஹிஜாப் அணிந்து கொண்டு காரை ஓட்டுவது குற்றம் என்றார்கள். அவருடைய ஹிஜாப் - புர்காவை அகற்றினார்கள். இரவு முழுவதும் அவரைக் காவல் நிலையத்தில் காவல் வைத்தார்கள். அவரை இத்தனை கெடுபிடிகளுக்கும் ஆளாக்கியதற்குக் காரணம் அவர் நிறத்தால் கறுப்பானவர் என்பதே.

ஆனால் அவர் முஸ்லிம். இந்த செய்தியை அறிந்த முஸ்லிம்கள் காவல் நிலையத்திற்கு விரைந்தார்கள். கிரிஸ்தி பாவலை காவல் நிலையத்திடமிருந்து மீட்டார்கள். அத்தோடு நிற்கவில்லை,

அமெரிக்காவில் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்துவரும் (Council on American Islamic Relations) அமெரிக்கா - இஸ்லாமிய உறவுகளுக்கான குழுமம் இந்த வழக்கை கையிலெடுத்தது.

கிரிஸ்தி பாவலுக்கு ஏற்பட்ட மன உளைச்சல், கஷ்டங்கள் இவற்றிற்கு அமெரிக்காவின் கலி போஃர்னியா அரசு இழப்பீடு தந்திட வேண்டும் எனக் கேட்டு வழக்கொன்றை தொடர்ந்தது.

காவல்துறையும் கலிபோஃர்னியா அரசும் சமாதானம் பேசியது. இந்த சமாதான பேச்சு வார்த்தையின் முடிவில் கிரிஸ்தி பாவலுக்கு (சுமார் ரூபாய் 60 லட்சம்) ஒத்துக்கொண்டு பணத்தையும் கொடுத்தது.

அமெரிக்காவில் கறுப்பர்களை கேள்விக் கணக்கின்றி அவமானப்படுத்துவதும், கொலை செய்வதும் சர்வ சாதாரணமாக நடந்து கொண்டிருக்கின்றது.

புதிய அதிபராக "டிரம்ப்" பதவி ஏற்றபின் இஃது இன்னும் அதிகமானது. ஆனால் அது முஸ்லிம் விவகாரத்தில் நடக்காது என்பதையே கிறிஸ்தி பாவல் விவகாரம் சுட்டிக் காட்டுகின்றது (ஜிபி : 12-08-2017)



பாகம் - 2

# விடுதலைப் போரில் இந்துக்களும் முஸ்லிம்களும்

அன்பார்ந்த வாசகர்களே !

வைகறை வெளிச்சம் ஆகஸ்ட் 2017 இதழில் விடுதலைப்பேரில் இந்துக்களும் முஸ்லிம்களும் என்றொரு தலைப்பில் அட்டைப்பட கட்டுரையை இடம்பெறச் செய்திருந்தோம்.

இந்தக் கட்டுரை வாசகர்களிடையே பரவலான வரவேற்பைப் பெற்றது. பலரும் தொலைபேசியில் தொடர்புகொண்டு பாராட்டி னர்கள். அல்ஹம்துலில்லாஹ். அவர்களிடம் இதுபோன்ற நிகழ்வுகள் இன்னும் ஏராளமாக இருக்கின்றன எனக் கூறினேன். அவற்றையும் இடம்பெறச் செய்யுங்கள் எதிர்கால தலை முறையினருக்குப் பயன்படும் எனப் பெரிய வார்த்தைகளால் கோரினார்கள்.

அவர்களின் கோரிக்கை ஏற்று இன்னும் பல தகவல்களை இங்கே இடம்பெறச் செய்கின்றோம்.

இன்றைய பாசிஸ்ட்டுகள், நம் நாட்டு மக்களை இந்துக்கள் என்றும் முஸ்லிம்கள் என்றும் எனப் பிரித்தே பதவிகளைப் பிடித் துக் கொண்டனர். நாட்டை சின்னா பின்னமாக்கி வருகின்றார்கள். ஆனால் அன்று ஆங்கிலே யனை எதிர்த்து நின்ற நாட்களில் முஸ்லிம்களும் இந்துக்களும் தோளோடு தோள் நின்று போராடினார்கள். அதனால்தான் அனைத்து பலத்தையும் கொண்ட ஆங்கிலேயனை வீழ்த்தி, விடுதலைப் பெற்றோம். இந்த வரலாற்றை முழுமையாக மறைத்தே விட்டார் கள் இன்றைய தலைமுறையினரிடம். இதனால் பாசிஸ்ட்டுகளால் பிரிவினையை முதலாகக் கொண்டு நாட்டை ஆள முடிந்தது. அவர்கள் வீழ்ந்திட இருக்கும் ஒரே வழி. அன்றைய இந்து முஸ்லிம் ஒற்றுமையை மீண்டும், கொண்டு வருவதே!

அதற்கான பிரச்சாரம் மிகவும் வேகமாக நடைபெற வேண்டும். இதனை இந்நாட்டின் எதிர்காலத்தில் நம்பிக்கைக் கொண்ட அனைவரும் செய்தி வேண்டும்.

அதற்கு அடிப்படையாக இந்த வரலாற்று உண்மைகளும் வைகறை வெளிச்சம் ஆகஸ்ட் 2017 இதழில் இடம்பெற்ற உண்மைகளும் பெரிய அளவில் உதவி செய்யும்.

- இன்ஷா அல்லாஹ்,

*இந்த மாதம், ஆனால் சரியாக 160 ஆண்டு களுக்கு முன் விடுதலைப்போரின் தீரர்கள் தங்கள், உயிர், பொருள் அனைத்தையும் தந்து ஆங்கிலயே ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்தார்கள். தங்களைப் பிணங்களாக ஆக்கிக் கொண்டிருந்தார்கள்.*

*அந்த நாட்களில் இந்துக்களும் முஸ்லிம் களும் ஒரே அணியில் நின்று ஆங்கிலப் பெரும் படைகளை எதிர்த்தார்கள். சில இடங்கள்*

இல்லை போர்க்களங்கள் வரலாற்றில் இன்னும் வரையிட்டக் காட்டப்படுகின்றன.

**அந்தப் போர்க்களங்கள்**

மீரட், முஸாபர் நகர், ஷாஹாரன்பூர், ஷாஜஹான் பூர்பேரல்வி அப்போது அதற்கு ரோஹில்காந்த் என்றும் பெயர்.

இந்த இடங்கள் தாம் இன்று இந்துத்துவ தீவிரவாதிகளின், வகுப்பு வெறி கொலைகள் இனவெறி கொலைகள் இவற்றை மிகையாகக் கண்டு வருகின்றனர்.

மே-11, 1857 ஆம் நாள் இந்தியாவில் ஓர் விடுதலை அரசு நியமிக்கப்பட்டது. (இதை ஆகஸ்ட் இதழ் கட்டுரையில் விரிவாகக் குறிப் பிட்டோம்) இந்த அரசின் தலைவராக பகதூர் ஷா ஜாஃபர் அவர்கள் நியமிக்கப்பட்டார்க்ள. அவர்கள் "மெகல்" முகலாய பேரரசின் தலைவராக அறிவிக்கப்பட்டார்கள்.

தான் பொறுப்பேற்றவுடன் பகதூர் ஷா ஜாஃபர்கான் அவர்கள் எட்டு நபர்களைக் கொண்ட ஆலோசனை குழு ஒன்றை நியமித் தார்கள். இந்த ஆலோசனைக் குழுவில் இந்துக் களும் முஸ்லிம்களும் இடம் பெற்றார்கள். இவர்கள் மொத்த இந்தியாவின் நிர்வாகத்தைக் கவனித்து கொள்ள வேண்டும்.

இதில் இன்னொரு பகதூர் ஷா என அழைக்கப்பட்ட அவர்களும் அவருக்கு (கான் பகதூர் ஷா கான்) உதவியாளராக, குர்ஷி ராம் என்பவரும் நியமிக்கப்பட்டார். (கான் பகதூர் கான் வேறு - பகதூர் ஷா ஜாஃபர் வேறு)

ஓராண்டு காலம் கான் பகதூர் கான் அவர்களும் குர்ஷி ராம் அவர் களும் ஆங்கிலேயர் களுக்கெதிராகப் படை நடத்தினார் கள். பலபோர்களில் ஆங்கிலேயர்களை வீழ்த்திக் காட்டினார்கள். பரங்கியருக்கு மாபெரும் இழப்புகளை ஏற்படுத்தினார்கள்.

டெல்லியைச் சுற்றி ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழிருந்த பல நிரப்பரப்புகள் கான் பகதூர் கான் அவர்களின் முயற்சியால் இந்தி யாவின் ஆட்சியின் கீழ் வந்தது. அதன்பின்னர் ரேபலேலியில் நடந்த ஒரு பெரும் போரில் ஆங்கிலேயர்களின் கைகள் ஓங்கின.

ஆனாலும் விடாமல் தங்கள் தாக்குதலை ஆங்கிலேயர்களின் மேல் தொடர்ந்தார்கள். ஆங்கிலேயர்களை சமாளித்திட வேண்டிய நிலை. அதிகப் படைகள் வேண்டி நேப்பாள் நாட்டின் பக்கம் திரும்பினார்கள். ஆனால் எதிர் பாராத விதமாக கான் பகதூர்கான் அவர்களை யும் குர்ஷி ராம் அவர்களையும் ரேபரேலிக்குக்க கொண்டு வந்தார்கள் ஆங்கிலேயர்கள்.

பழைய கோட்டவலி என்ற ஊருக்கு வெளியே ஆயிரக்கணக்கான அவர்களின் படை வீரர்களுக்கு முன்னால் மார்ச்-20, 1880 இல் தூக்கிலிட்டார்கள்.

முஸ்லிம்களும் இந்துக்களும் ஒன்றாய் நின்று நிகழ்த்திக் காட்டிய சாகசங்கள் இத்தோடு நின்றுவிட வில்லை. அதேபோல் மக்கள் தொகை யின் ஒரு பகுதியினரோ அல்லது அந்தஸ்தை சார்ந்தவர்களோ மட்டுமே இதில் கலந்து கொண்டார்கள் எனச் சொல்வதற்கில்லை.

எல்லா தரப்பு மக்களும், பணக்காரர்களும்,



அன்றாடக்காட்சிகளும், அணி பேர்ந்தார்கள். தங்கள் ஆருயிரைத் தந்தார்கள்.

**பெண்களும்**

சமுதாயத்தின் அனைத்து அங்கங்களும் எனச் சொல்லிடும்போது பெண்கள் தாமாகவே உள்ளே வந்து விடுகின்றார்கள்.

**உத்திரப்பிரதேசத்தில்**

தானா பவன் என்றொரு இடம். இது முஸாஃப்பர் நகருக்குப் பக்கத்திலுள்ள இடம். இப்போது இது உத்திரப்பிரதேசத்தின் மேற்குப் பகுதியில் இருக்கின்றது. இங்கே உள்ள பெண்கள் தங்களுக்குள் ஓர் அணியை அமைத்துக் கொண்டார்கள். இந்த அணி ஜாதி, மதம் ஆகியவற்றைக் கடந்ததாக இருந்தது.

ஆங்கிலேயர்களை எதிர்த்தார்கள். ஆயுதந் தாங்கித்தான் ஆங்கிலேயர்களை எதிர்த்தாக வேண்டும் என்ற நிலை வந்தபோது அதையும் தயங்காமல் செய்தார்கள். வாளேந்தி ஆங்கி லேயர்களுடன் போர் புரிந்தார்கள். இழப்பு களை ஏற்படுத்தினார்கள். அந்த இழப்புக்கள் அவர்களை நோக்கி வந்தபோது அதை எதிர் கொண்டார்கள், வென்றார்கள்.

ஆயுதந்தாங்கிய அந்த வீராங்கனைகளை எதிர்கொள்ள முடியாமல் சூழ்ச்சியில் இறங்கி னார்கள் ஆங்கிலேயர்கள். குறுநில மன்னர்களை விலைக்கு வாங்கி ஆட்காட்டி வேலையைச் செய்யச் செய்தார்கள். இறுதியில் அந்த ஆயுதந்தாங்கியப் போரை ஏற்பாடு செய்த 11 வீராங்கனைகளும் கைது செய்யப்பட்டார்கள். தூக்கிலிடப்பட்டார்கள்.

**வீராங்கனை அஷ்ஹரீ பேகம்**

45 வயது நிரம்பிய வீரமங்கை மிகவும் வசதியும் - வற்றாத வளமும் கொண்ட ஒரு செல்வக் குடும்பத்தைச் சார்ந்தவர். ஆங்கிலேயர் களிடம் அடிமைப்பட்டுக் கிடப்பதை அவ மானம் எனக் கருதியவர். முதல் விடுதலைப் போரில் வாளெடுத்துக் களம் கண்டவர். தனக் னெ ஒரு தனிப்படையை உருவாக்கியவர்.

ஆங்கிலேயர்களுக்கு அதிர்ச்சியைத் தருகின்ற பெயருக்குச் சொந்தக்காரர் ஆனவர். இவர் ஏற்படுத்திய இழப்புகள் ஆங்கிலேயர்களுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியது. போரின் ஒரு கட்டத்தில் இவரைக் கைது செய்த ஆங்கிலே யர்கள் இவருக்கு மரணத்தைத் தண்டனையா கத் தந்தார்கள். மணமுவந்து ஏற்றாள் அந்த வீரமங்கை. மரணம் இவரது மனதைப் புண் படுத்தாது. வேதனையைத் தராது என்பதால் உன்னை தூக்கிலும் போட மாட்டோம். சிரச் சேசமும் - தலையை வெட்டுதலையும் செய்ய மாட்டோம். உன் மார்க்கமாம் இஸ்லாம் சொல்லும் வழியிலும் உன்னை அடக்கம் செய்யவும் மாட்டோம் என நகையாடினார்கள்.

பின்னர் உன்னை நெருப்பிட்டுக் கொழுத்து வோம் என்றார்கள். அதுபோலவே நெருப் பிட்டே கொளுத்தினார்கள். இதைப் போன்ற வீர மங்கைகள் எப்படி மரணத்தின் மடியிலே தூக்கி வீசப்பட்டாலும் அவர்களுக்கு அல்லாஹ் மறுமை என்ற மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையில் சுவர்க்கத்தில் புகச் செய்வான். சுகமான வாழ்க்கையையே தருவான். அந்த வாழ்க்கை நிரந்தரமானது.

விடுதலைப்போரில் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போர் செய்து வீரமரணமடைந்த முஸ்லிம்களை எரிப்பதை ஆங்கிலேயே தாயத் களில் சிலர் ஒரு வழக்கமாகவே கொண்டிருந் தார்கள். ஏனெனில் முஸ்லிம்களை அடக்கம் செய்தால் சுவர்க்கம் செல்வார்கள் என்றும், எரித்தால் நரகம் செல்வார்கள் என்றும் ஆங்கிலே யர்கள் நம்பினார்கள். ஆனால் ஷஹீத்களுக்கு அதாவது வீரமரணமடைந்தவர்களுக்கு அடிமைத்தளைகளை உடைத்தெறிய போர்களம் புகுந்தவர்களுக்கு எரிக்கப்பட்டாலும் அடக்கம் செய்யப்பட்டாலும் சுவர்க்கம் நிச்சயம். அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொள்வான். அவர்களுக்குச் சுவர்க்கத்தையே வாக்களித்தான். அதையே நிறைவேற்றுவான்.

**ஆஷாதேவி**

ஒரு விடுதலைப் போர் வீராங்கனை. இவரும் ஆங்கிலேயர்களுக்கெதிராக ஆயுதந்தாங்கி ஆங்கிலேயர்களின் தலைகளைக் கொய்தவர். முடிந்த மட்டும் ஆங்கிலேயர்களுக்கு இழப்பு களை ஏற்படுத்தினார். ஆனால் இறுதியில் ஆங்கிலேயர்களின் சூழ்ச்சியில் சிக்கிக் கொண்டார். கைது செய்யப்பட்டார், தூக்கிலிடப்பட்டார்.




### பகவதி தேவி

அதேபோல், ஆங்கிலேயர்களுக்கெதிரான போரில் தடம்பதித்தவர் பகவதி தேவி. இவரும் வாளேந்தி போர் செய்தவர். ஆங்கிலப் படைகளுக்கு நடுவில் புகுந்து வாளை சுழற்றியவர். அதனால் வெற்றிகள் பலவற்றைக் குவித்தவர். விவசாய குடும்பமாகிய தையாகி என்ற குலத்தில் பிறந்தவர். அஞ்சாமல் உயிரைத் தந்தார் தன் உயிரை விடுதலைப்போரில்.

### ஹபீபா

இவரை வரலாறு முஸ்லிம் குஜ்ஜார் என்றே பதிவு செய்கின்றது. 24 அகவை நிரம்பிய ஆரணங்கு. தான் வாழ்ந்த பகுதியில் நிலை கொண்டிருந்த ஆங்கிலேயர்களின் ஆட்சியை அப்புறப்படுத்தினார். தனது பராக்கிரம யுத்த உத்தியில்.

அடுத்து அக்கம், பக்கத்தில் அநியாயங்களை கட்டவிழ்த்திட்டு இந்நாட்டு குடிகளை கறுப்பர்கள் என அழைத்து அடிமைகளாக நடத்திக்கொண்டிருந்த ஆங்கிலேயர்களின் ஆட்சியை ஆட்டம் காண வைத்தார். ஆங்கிலப்படைகளுடன் மோதிக் கொண்டே இருந்தார். இவர் ஆங்கிலேயர்களுக்கு எதிராக கலந்துகொண்ட போர்கள் எத்தனை என கணக்கு வைத்துக் கொள்ள இயலவில்லை என்றே வரலாறு கோருகின்றது.

சூழ்ச்சியில் ஆங்கிலேயர்கள், வீர ஹபீபாவைக் கைது செய்தார்கள். 1857-இல் தூக்கில் போட்டார்கள். ஆயிரமாயிரம் வீராங்கனைகளைப் போல் அவரும் வீர மரணத்தைத் தழுவினார். சுவர்க்கத்திற்குச் சொந்தக்காரரானார்.

### மாம்கவ்ர்

இவர் கோனார் குலத்துக் கோமேதகம், இந்தியா விடுதலைப் போர் வரலாற்றில் ஓர் அத்தியாயம். ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போர்க்களம் கண்ட ஒப்பற்ற மாமணி. 25 வயதே நிரம்பிய இவரையும் ஆங்கிலேயர்கள் தூக்கிலே போட்டார்கள்.

### உம்தா

இவர் ஜாட் குலத்திலிருந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட ஓர் குடும்பத்தில் பிறந்தவர். இளம் வயது முதலே இஸ்லாத்தை தன்னுடைய வாழ்க்கை நெறியாக ஆக்கிக் கொண்டவர்.

தொடக்க நாட்களில் ஷா இஸ்மாயில் என்ற மார்க்க அறிஞர், ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போர் புரிவதை, ஒரு மார்க்கக் கடமை, அது அல்லாஹ் கடமையாக்கிய ஜிஹாத் என அறிவித்தார்கள்.

இந்த அறிவிப்பின் பின்னணியில், இன்னும் சொன்னால் மார்க்க தீர்ப்பின் அடிப்படையில் பல மார்க்க அறிஞர்கள் வாளேந்திப் புறப்பட்டார்கள் ஆங்கிலேயர்களுக்கெதிராக. அத்தோடு பலப்பல முஸ்லிம் பெண்மணிகளும் களம் கண்டார்கள்.

இந்த வகையில் இன்றளவும் வரலாறு போற்றும் ஒரு பெண்மணியாக செரு முகங் கண்ட மாமணி உம்தாவை ஆங்கிலேயர்கள் மிகப்பெரிய எதிரியாக கருதினார்கள். நீண்ட நாள் சூழ்ச்சிக்குப் பின் அவளைக் கைது செய்

தார்கள். அவளையும் தூக்கிலேதான் போட்டார்கள். அப்போது இந்த நங்கை நள்ளாளின் வயது 26 மட்டுமே.

இந்த நங்கை நல்லாள் அனைவரும் ஆங்கிலப் படைகளை - அன்று மத்திய மண்டலம் என அறியப்பட்ட உத்திரப் பிரதேசத்திலேயே சுழன்று கொண்டிருக்கச் செய்தார்கள். ஆங்கிலேயர்கள் தங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை ஈடு செய்திட மிகப்பெரிய முயற்சிகளையும் செலவினங்களையும் செய்திட வேண்டியதாயிற்று. இதனால் அவர்கள் தங்கள் ஒரே இலட்சியமாகக் கொண்டிருந்த டெல்லியின் பக்கம் திரும்ப முடியாதவர்களாக இருந்தார்கள்.

கொலைக்கு மேல் கொலைகள், தூக்குத் தண்டனைக்குமேல் தூக்குத் தண்டனை என எல்லா விடுதலைப்போர் வீரர்களையும் கொலை செய்தார்கள்.

எல்லா தூக்குத் தண்டனைகளையும் மக்கள் மன்றத்திலேயே திறந்த வெளியில் வைத்துத்தான் நிறைவேற்றினார்கள். நோக்கம், அதனை பார்க்கின்ற குடிமக்கள் குலை நடுங்க வேண்டும். இனி ஆங்கிலேயர்களுக்கு எதிராக அணி சேர்ந்திட அச்சப்பட வேண்டும்.

அனைத்தையும் தாண்டி ஆங்கிலேயர்கள் டெல்லியை நோக்கி நகர்ந்தார்கள். அவர்களின் கணக்குப்படி டெல்லியைக் கைப்பற்றி விட்டால் மொத்த இந்தியாவும் கைக்கூடி விடும். ஏனெனில் மொத்தப் புரட்சியின் தலைமைப் பீடமாக டெல்லியே இருந்தது.

டெல்லியின் பக்கத்தில் வருவதற்கே பல்வேறு இழப்புகளை அவர்கள் சந்திக்க வேண்டியதாயிற்று. டெல்லியை அவர்கள் நெருங்குவதற்கு இன்னொரு பெண்மணி, பெரும் தடையாக இருந்தாள். அவளது பெயர்தான் ராஜ்கவ்ர். இவர் 1833-இல் தானாபவன் பகுதியில் பிறந்தவர். இவர் சீக்கிய சமுதாயத்தைச் சார்ந்த பெண்மணி. இவர் பல ஆண்களையும் அதேபோல் பல பெண்களையும் படையாகத் திரட்டி ஆங்கிலேயர்களுக்கெதிராகக் கொண்டு செல்வதில் வெற்றி பெற்றவர். இறுதியில் இவரும் தன் இன்னுயிரைத் தந்திட வேண்டியதாயிற்று.

**டெல்லியில்**

இப்போது ஆங்கிலேயர்கள் டெல்லியை நோக்கிப் படை நடத்தினார்க்ள. தங்களால் இயன்ற அளவு தயாரிப்புகளைச் செய்து கொண்டார்கள்.

அங்கே இந்திய புரட்சிப்படையை தலைமை ஏற்று நடத்திக் கொண்டிருந்தவர்கள் முஹம்மத் பக்த்கான், சிங்காரிலால் கவுஸ் முஹம்மத், ஹிராசிங், இதில் தலைமைத் தளபதியாக முஹம்மத் பக்த்கான் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்துக்களும் முஸ்லிம்களும் ஓரணியில் நின்று ஆங்கிலேயர்களுக்கு ஒரு பெரும் எதிர்ப்பைத் தந்தார்கள். ஆங்கிலேயர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் அவர்களை எல்லா யுத்திகள்



மீதும் நம்பிக்கை இழக்கச் செய்தது. இதற்காக விடுதலைப் போர் வீரர்களை இந்துக்கள் என்றும் முஸ்லிம்கள் என்றும் பிரித்து அவர்களை காட்டிய ஒற்றுமையையும், சகோதரத் துவத்தையும் பிளந்து போடத் திட்டம் போட்டார்கள்.

ஒருமுறை இதில் வெற்றிகண்டுவிட்டால் விடுதலைப் போரின் வீரியம் குறையும் படிப்படியாக ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிரான எதிர்ப்புச் சிதைந்து சின்னாபின்னமாக ஆகிவிடும் என உறுதியாக நம்பினார்கள்.

ஒன்றாய், ஓரணியாய் நின்ற விடுதலைப் போர் வீரர்கள், ஆங்கிலேயர்களின் சூழ்ச்சியில் சிக்கவில்லை. அதனால் சிதறவில்லை. ஆதலால் ஆங்கிலேய எதிர்ப்பு அப்படியே இருந்தது. அன்றைக்கு ஆங்கில ஏகாதிபத்தியம் வெற்றிபெற இயலாத சூழ்ச்சியில் இன்றைய பாசிஸ்ட்டுகள் வெற்றி பெற்றுவிட்டார்கள். மொத்த இந்தியாவையும் வகுப்புவாத மயமாக்கிவிட்டார்கள்.

இந்தியாவை இந்துக்கள் என்றும் முஸ்லிம்கள் என்றும் பிளந்துபோட ஆயிரமாயிரம் வகுப்பு கலவரங்களைத் திட்டமிட்டார்கள். நிறைவேற்றினார்கள். அன்றையிலிருந்து இன்று வரைக்கும் பலகோடி முஸ்லிம்களைக்கொலை செய்து விட்டார்கள். வகுப்புவாத வன்மத்தை வளர்க்க பல இந்துக்களையும் கொலை செய்தார்கள். பழியை முஸ்லிம்கள் மேல் போட்டார்கள். 150 ஆண்டுகள் ஆங்கிலேயன் விட்டதிலிருந்து தொடர்ந்தார்கள். இன்று ஆட்சியைப் பிடித்துவிட்டார்கள்.

இந்த பாசிஸ்ட்டுகளுக்கு இந்தப் பாதையைப் போட்டுத் தந்தவர்கள் நம் நாட்டை ஆண்டாண்டு காலமாக அடிமையாக வைத்திருந்த ஆங்கிலேயர்கள்தாம்.

அன்று அத்துணை ஒற்றுமையாகவும் வேகமாகவும் விடுதலைப்போரை முஸ்லிம்கள் இந்துக்கள் எடுத்துச் சென்றபோது ஆங்கிலேயர்களுக்கு ஆள்காட்டிக் கொண்டிருந்தார்கள் இன்றைய பாசிஸ்ட்டுகள்.

### ஷாஜகானின் பீரங்கி

ஆங்கிலேயர் எதிர்ப்பின் ஒருகட்டத்தில் கையில் கிடைத்தவையெல்லாம் எடுததப் போராடிட துணிந்தார்கள். அப்போது அவர்களின் கைகளில் கிடைத்தவற்றுள் ஒன்று ஷாஜஹானின் காலத்தில் பயன்படுத்தப்பட்டு, அப்படியே கைவிடப்பட்ட பீரங்கி. இந்தப் பீரங்கியைப் பயன்படுத்தி ஆங்கிலேயர்களுக்கு அதிகமான இழப்புகளை ஏற்படுத்தினார்கள்.

பீரங்கியிலிருந்து பீறிப்பாயும் முதல் குண்டை பகதூர்ஷா ஜாஃபர் அவர்களின் முன்னிலையில் பாய்ச்சுவது என முடிவு செய்தார்கள்.

உடனேயே சில இந்துச்சமய பூஜாரிகள் ஓடோடி வந்து பீரங்கிக்கு ஆரத்தி எடுத்து ஆல வட்டம் சுழற்றினார்கள். வேத மந்திரங்களையும் ஓதினார்கள் என வரலாறு பதிவு செய்கின்றது.

இப்படி ஒன்றாய் நின்ற இந்துக்களையும் முஸ்லிம்களையும் வெல்ல முடியாமல் திணறினார்கள் ஆங்கிலேயர்கள்.

ஆனால் சில குறுநில மன்னர்களும், நவாப்களும் ஆங்கிலேயர்களிடம் சோரம் போய் விட்டார்கள். அதனால் டெல்லி வீழ்ந்தது. ஆனால் ஆங்கிலேயர்கள் அன்றுவரை கண்டிராத இழப்புகளைச் சந்தித்தார்கள்.

அதிர்ந்துபோன ஆங்கில ஏகாதிபத்தியம் இன்னும் எத்தனைநாள் தங்கள் ஆதிக்கம் நிலைக்கும் என்பதைக் கண்டுவர பல பத்திரிகையாளர்களையும், உளவு பார்ப்பவர்களையும் இந்தியாவுக்கு அனுப்பினார்கள்.

### ஆங்கில பத்திரிகையாளர்கள் / உளவாளிகள் ..? தந்தசேதி

அன்றைக்கு உலகமெங்கும் அறியப்பட்ட ஓர் ஆங்கில பத்திரிகை "The Times" தி டைம்ஸ், இந்தப் பத்திரிகை ஆங்கில ஏகாதிபத்தியத்தின் தலைமையகமாம் லண்டனிலிருந்து வெளிவந்தது. இந்தப் பத்திரிகை வில்லியம் ரசல், என்றொரு கீர்த்திமிக்க எழுத்தாளனை அனுப்பி இந்திய விடுதலைப் போரில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை கண்டுவர அனுப்பியது. இவர், லண்டனுக்கு அனுப்பிய அறிக்கையில் இப்படி எழுதினார்.

அந்த விடுதலைப்படையில் 60,000 அறுபது ஆயிரம் படைவீரர்கள் நிரந்தரமாக இருந்தார்கள். 70,000 எழுபது ஆயிரம் பேர் அழைத்தவுடன் ஆயுதந்தாங்கிய போர் புரிய தயாராக இருந்தார்கள். இவர்கள் அத்துணை பேரும்

துப்பாக்கியால் சுடும் பயிற்சியும், பீரங்கிகளை இயக்கிடும் பயிற்சியையும் பெற்றிருந்தார்கள். "ஆவத்" பகுதியிலுள்ள எல்லா நாட்டாண்மை களும் இந்துக்களும் முஸ்லிம்களும் தங்கள் இளவரசர் பிரிஜில் குதார் (இவர் விடுதலைப் போர் வீராங்கனை பேகம் ஹஸரத் மகல் இன்மகன்)க்காக தங்கள் கடைசி மூச்சுவரைப் போர் செய்வோம் என உறுதி எடுத்திருந்தார்கள். அவர்களின் குதிரைப்படை மிகவும் பலமானது.

நகர் முழுவதும் மக்கள் கூட்டம். அவர்கள் சதா சர்வகாலமும் பயிற்சிகளை எடுத்துக் கொண்டே இருந்தார்கள். போர் வீரர்கள் தங்கள் உடல் பலத்தையும், படைகளின் (எண்ணிக்கை) பலத்தையும் அதிகப்படுத்திக் கொண்டே இருந்தார்கள். மொத்த "ஆவர்" பகுதியும் நமது எதிரி கைகளில் (இந்திய விடுதலைப்போர் வீரர்களின் கைகளில் இருந்தது) நமது கைகளில் இருந்ததெல்லாம் நமது பீரங்கிகளின் குண்டுகள் பாயும் தூரம் வரைதான் (The Times, March-2, 1853)

இன்னொரு ஆங்கிலேய அதிகாரி தாமஸ் லோவல் இப்படி எழுதினான்

"The cow killer and cow worshipper, the pig, heter and the pig cater joicuies of Allah is god and Mohammed iss ho prophet and .... of themys tenies of Brahma"

இந்த தாமஸ் லோவல் மத்திய இந்தியாவில் எதிர்கொண்டவன் தோற்றவன். அவன் இப்படி எழுதினான்.

குழந்தைகளையும் விட்டு வைக்காத ராஜபுத்திரர்கள் ஐதீக நம்பிக்கைகளைக் கொண்ட பிராமணர்கள், மூர்க்கத்தனமாகத் தாக்கும்முஸ்லிம்கள், ஆடம்பரங்களைவிரும்பும் மராட்டியர்கள் அனைவரும் இந்த லட்சியத்தில் ஒன்றாக இணைந்து கொண்டார்கள். மாட்டை கொல்லுபவர்கள், மாட்டை வணங்குபவர்கள், பன்றியை வெறுப்பவர்கள், பன்றியை திண்பவர் கள், அல்லாஹ்வே இறைவன், முஹம்மத் அவனு டைய திருத்தூதர் என்ற முழக்கத்தோடு வேதங்களை மந்திரிப்பவர்களின் ஒலியும், பிரம் மாவை துதிப்பவர்களின் ஓசையும் ஒன்றாய் எழ நம்மை ஒன்றாய் நின்று நம்மீது ஆங்கிலேயர்கள் மீது பாய்ந்தார்கள்.

**ஃபீரட் ரோபர்ட்** Fred Reoberts

இவர் ஆங்கிலேய தளபதிகளில் ஒருவர். இவர்தான் லக்னோவைப் பிடிப்பதில் முன்னே நின்றவர். பரங்கியர்களின் படையை வழி நடத் தியர். இவர் நவம்பர்-25, 1857-இல் ஆங்கில நாட்டு மகாராணிக்கு எழுதிய கடிதத்தில் இப்படிக் குறிப்பிட்டார்கள்.

குரூரமான மரணம் அவர்களை எதிர் கொண்டபோதிலும், இந்துக்களும் முஸ்லிம் களும் நம்பிக்கை இழக்கவில்லை. ஒன்றாய் இறுகப்பிணைந்து நின்றார்கள். நான் நம் படை களோடு சிங்கந்தர் பாக்கிற்குள் நுழைந்தபோது இந்திய விடுதலைப் போர் வீரர்களில் இரண்டா யிரம் பேர் பிணமாகக் கிடந்தார்கள். பிணமலை யாய் இருந்த இவர்களில் எல்லா மதத்தவர்களும் உண்டு.

பலர் பிணமாக ஆகிக்கொண்டிருந்தார்கள். இப்படி அத்தனைபேரும் ஒன்றாய் ஒரிடத்தில் நின்றுகொண்டிருந்தார்கள் என்பதை நாம் அறிந்திட முடியவில்லை. நான் முன்னே சொல் லும்போது இந்தப் பிணமலையின் மேல்தான் நடந்து சென்றோம், இவர்களின் ஒற்றுமையை என்னால் புரிந்துகொள்ள இயலவில்லை.

மடிந்து கொண்டிருக்கும் போதும் அவர்கள் ஒன்றாய் நின்றார்கள். மடிந்துகொண்டிருந்த சிலரை நான் கடந்து சென்றபோது அவர்கள் எழுந்து நிற்க முடிந்தால் இப்போதும் உங்க ளோடு போர் செய்வோம் என்றார்கள். என்னே மன உறுதி?

**இந்த இந்து முஸ்லிம் ஒற்றுமையைக் கலைத்தே ஆக வேண்டும் என முடிவு செய்தார்கள். திட்டங்களைத் தீட்டினார்கள். அந்த திட்டங்களை செயல்படுத்தினார்கள். பசுவையும் இந்த இந்து முஸ்லிம் பிளவுக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள். அதனை அப்படியே இன்றைய பாசிஸ்ட்டுகள் பற்றிப் பிடித்துக் கொண்டார்கள்.**

(Collected from British Archieves : Imput from Shamsul Islam, New Delhi.)

**- எம்.ஜி.எம்.**




# முஸ்லிம் சுதந்திர போராட்ட வீரர்கள்

The Immortals - ஆந்திராவை சேர்ந்த செய்யத் நசீர் அஹ்மத் அவர்களின் 15 ஆண்டு கால அயராத உழைப்பின் பயன். 1757 முதல் 1947 வரை இந்தியாவில் நடைபெற்ற சுதந்திர போரில் வீரமுடன் கலந்து கொண்ட 155 முஸ்லிம் போராளிகள் பற்றிய தொகுப்பு இப்புத்தகம்.

இந்தியா சுதந்திர போரில் முஸ்லிம்களின் பங்கு குறித்து இதுவரை 13 புத்தகங்களை நசீர் அஹ்மத் தெலுங்கில் எழுதியுள்ளார். தெலுங்கு மற்றும் ஆங்கிலம் என இரண்டு மொழிகளையும் உள்ளடக்கி The Immortal எனும் புத்தகம் (2014-இல்) வெளிவந்துள்ளது.

சுதந்திர போரில் முஸ்லிம்களின் பங்கை மறைப்பதற்கும் அதற்கு வேறு சாயங்கள் பூசுவதற்கும் பல முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வரும் வேளையில் இப்புத்தகம் பல வரலாற்று உண்மைகளை ஆதாரத்துடன் வெளிகொண்டு வந்துள்ளது. இந்த உண்மைகளை திரட்டுவதற்காக ஆசிரியர் நசீர் அஹமத் அவர்கள் பல பேருடன் கடிதத் தொடர்பு மேற்கொண்டுள்ளார், சுதந்திர போரில் பங்கேற்ற வீரர்களின் குடும்பங்கள், ஆராய்ச்சியாளர்கள், தற்போது நம்மோடு வாழும் சுதந்திர போராளிகள் ஆகியோருடன் உரையாடி இப்பணியை செய்துள்ளார். ஒவ்வொரு நூலகங்களிலும் இருக்கப்படவேண்டிய நூல்.

சுதந்திர போரை படிக்க விரும்பும் ஒவ்வொரு மாணவனும் வாசிக்க வேண்டிய நூல். 1917 -இல் காந்தியை கொலை செய்ய நடத்தபட்ட முயற்சியை முறியடித்து அவரின் உயிரை வெள்ளையர்களிடமிருந்து காப்பற்றியது பதக் மியா அன்சாரி என்று நம்மில் எத்தனை பேருக்கு தெரியும்.

தென் ஆப்ரிக்காவில் வளம் கொழிக்கும் குதிரை தொழிலை விட்டுவிட்டு இந்தியாவிற்கு வந்து சபர்மதி ஆசிரமத்தில் தங்கி அச்சு தொழிலை செய்தவர் இமாம் சாஹிப் அப்துல் காதிர் பா-வாசிர். ஜெய்ஹிந்த் என்ற முழக்கத்தை வழங்கியவர் அபித் ஹசன் ஸஃப்ரானி. வெள்ளையனே வெளியேறு, simon go back சைமன் திரும்பப் போ போன்ற முழக்கங்களை வழங்கியவர் யூசுப் மெஹ்ரலி.

இன்னும் பல தகவல்கள் அதாவது முஸ்லிம்கள் சுதந்திர இந்தியாவிற்காக செய்த பல தியாகங்களை புத்தகத்தில் பட்டியலிட்டுள்ளார்.

சுதந்திர போரில் ஈடுபட்ட முஸ்லிம் பெண்களின் பங்கு குறித்தும் ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார் ஆசிரியர் நசீர். இதில் 52 முஸ்லிம் பெண்களின் குறிப்புகளை தந்துள்ளார். வரலாற்றில் முஸ்லிம்களின் பெயர்கள் அவர்களின் தியாகங்கள் நிலைத்து நிற்க வேண்டும் என்ற அடிப்படையில் பணியாற்றிய ஆசிரியர் நசீர் அவர்களின் உழைப்பு அளப்பரியது.

முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் உள்ள இடைவெளியை குறைக்கவும் இந்தியாவில் வாழும் பல்வேறு சமுதாயங்களுக்கு இடையில் புரிந்துணர்வை வளர்க்கவும், வேற்றுமையில் ஒற்றுமையை வளர்த்தெடுக்கவும் இம்முயற்சியை எடுத்தேன் என்கிறார் ஆசிரியர் நசீர். ஆனால் சுதந்திர இந்தியாவிற்காக பல தியாகங்களை செய்த முஸ்லிம்களை தான் இன்று இந்தியாவிற்கு எதிரானவர்கள் முஸ்லிம்கள் என்ற பிம்பத்தை கட்டியெழுப்பி உண்மையை மறைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன மதவாத, சகிப்புத் தன்மையற்ற கும்பல்கள்.

புத்தகத்தின் விலை - Rs 1000/-
ஆசிரியரை 9440241727 எண்ணில்
தொடர்பு கொள்ளலாம்.

**- அபூஹாசின்**

# சத்திய மார்க்கமும் மனிதனின் தோற்றமும்

சிலர் மனித சமூகம் எப்படி பரிணாமம் அடைந்ததோ அதே போன்றே மதங்களும் பரிணாம நிலையை கடந்து வந்தன என்று கூறுகின்றனர். ஆரம்ப காலத்தில் பலதெய்வ வழிபாட்டு கொள்கை இருந்தது எனவும் அதன் பின்னரே ஓரிறை கொள்கை உருவாகியது என்றும் விவாதிக்கின்றனர். ஆனால் அதற்கான சான்றுகளை அவர்களால் தர இயலவில்லை.

ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்ட காலத்தில் இருந்தே ஓரிறை கொள்கையின் அடிப்படையில சத்திய மார்க்கம் இருந்து வருகிறது.

**மதங்களின் பரிணாமங்கள் என்ற தேற்றப் பிழைகள் எவ்வாறு உருவானது?**

கிட்டத்தட்ட ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்பு, டார்வினுடைய உயிரிகளின் தோற்றம் என்ற புத்தகத்தின் முதல் பதிப்பு வெளிவந்த போதே, பரிணாம தத்துவம் பொருள்முதல் வாதிகளிடம் இருந்தும் கடவுள் மறுப்பு வாதி களிடம் இருந்தும் ஆதரவை பெற்றுவிட்டது. அந்த காலகட்டத்தில் இருந்த சில சிந்தனை யாளர்கள் மனித இன வரலாற்றின் ஒவ்வொரு நிகழ்வையும் பரிணாமத்தை கொண்டு விளக்கிட இயலும் என்று கருதினர்.

இந்தப் பிழை அநேக துறைகளில் உட் படுத்தப் பட்டுவிட்டது. உதாரணமாக பொரு ளாதாரத்துறையை எடுத்துக் கொண்டால் மார்க்சிசமும் வளர்ச்சியற்ற நிலையில் இருந்து வளர்ச்சியுற்ற நிலை என்ற முன்னேற்றத்தை தவிர்க்க முடியாது என்றும் ஒவ்வொருவரும் இறுதியாக பொதுவுடைமையை ஏற்றுக் கொள் வார்கள் எனக் கூறுகிறது.

ஆனால் அனுபவத்தில் பார்த்தால், மார்க் சிசதின் கூற்று மெய்மையை பிரதிபலிக்க வில்லை.

உளவியல் துறையை பொறுத்தவரையில், உயர்ந்த பரிணாமம் அடைந்த இனமே மனிதன் என சிக்மன்ட் ப்ராய்ட் கூறுகிறார்.

ஆனால் அவனுடைய செயல்கள் பழங்கால மனிதன் எதனால் உந்தப்பட்டானோ அதே சக்திகளாலேயே இன்றும் உந்தப்படுகின்றன.

ப்ராய்டியத்தின் அடிப்படையான கொள்கைகளுக்கு எந்தவித அறிவியல் ஆதாரமும் இல்லை என்று பல உளவியல் ஆராய்ச்சிகள் எடுத்துரைக்கின்றன.

இதைப் போன்றே சமூகவியல், மானுட வியல் மற்றும் வரலாறுகளும் பரிணாமத் தத்துவத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. ஆனால் கடைசி நூற்றாண்டுகளில் வெளிக் கொணரப் பட்ட கண்டுபிடிப்புகளில் இருந்து இந்தப் பரிணாம தாக்கத்திற்கு எதிரான கருத்துகள் கிடைத்துள்ளது.

பரிணாம தத்துவத்தின் பொதுவான பண்பு கடவுள் மறுப்பே. இந்த தவறான தத்துவத்தை முன்நின்று மொழிந்த ஹெர்பர்ட் ஸ்பென்சரின் கூற்றுப்படி பழங்கால மனிதனுக்கு மதம் இல்லை. முதல் மதம் என்பது இறந்தவர்களை வணங்குவதில் இருந்து ஆரம்பித்திருக்கலாம். சில மானுடவியலாளர்கள் வேறு கருத்து களையும் பதிவு செய்கின்றனர்.

சிலரின் கருத்துப்படி மதத்தின் மூலம் ஆன்மவாதமாகும் (Animism - இயற்கை வஸ்துகளுக்கு கடவுள், தெய்வீக பண்பு உண்டு என்று கற்பித்தல்). மற்றும் சிலர் அடையாள குறியீடுகளிலிருந்து மதம் ஆரம்பித்தது என்கின்றனர் (குறியீடுகளை கொண்ட மனிதன், கூட்டம் அல்லது பொருள்களை வணங்குவது.) E.B. டெய்லர் என்ற மானுடவியலாளரின் கூற்றுப்படி மதம் ஆன்மவாதத்திலிருந்து பின்னர் முன்னோர்களை கடவுளாக வணங்குதல் பின்னர் பல தெய்வ கொள்கை இறுதியாக ஓரிறைக் கொள்கையாக வளர்ச்சி அடைந்ததாகும்.

இந்த கருத்தாக்கங்கள் 19 ஆம் நூற்றாண்டில் மொழியப்பட்டு இன்றுவரை துடிப்புடனும் பல்வேறு வகைகளிலும் கொண்டு சேர்க்கப்படுகிறது. தொல் இயல் மற்றும் வரலாற்று ஆதாரங்கள் இதற்கு மாற்றமாக, அதாவது ஆரம்ப காலத்தில் இறைவனின் தூதர்கள் மூலம் ஓரிறைக் கொள்கை நடப்பில் இருந்ததாக ஆதாரங்களை தருகின்றன. அதே நேரத்தில் இதற்கு மாறான மூடபழக்க வழக்க நம்பிக்கைகளும் இருந்தன.

மக்களில் சிலர் மூட நம்பிக்கைகளையும் அதன் செயல்களையும் உண்மை மார்க்கத்தில் புகுத்த நினைத்தனர். அதனால் அவர்கள் தங்களுக்கு அருளப்பட்ட மார்க்கத்தை மாற்றி அழிக்கும் செயலை செய்தனர்.

எவர்கள் தங்கள் கையைக் கொண்டு (கற்பனையாக) எழுதிய புத்தகத்தை ஒரு சொற்ப கிரயத்தை அடைவதற்காக “ இது அல்லாஹ்விடமிருந்து வந்தது தான்” என்று கூறுகிறார்களோ அவர்களுக்கு கேடுதான். (அதை) அவர்களுடைய கைகள் எழுதியதனாலும் அவர்களுக்கு கேடுதான். அவர்கள் (அதைக் கொண்டு பொருள்) சம்பாதிப்பதாலும் அவர்களுக்கு கேடுதான். குர்ஆன் 2:79

சொற்ப கிரயத்திற்காகவே அவர்கள் ஓரிறைவனையும் அவனுடைய கட்டளைகளையும் கைவிட்டார்கள். இதன் வழியாகவே மூட நம்பிக்கைகளும், செயல்களும் வந்தன.

**உண்மை மார்க்கம் திரிபடைதல்:**

20 ஆம் நூற்றாண்டில் மதங்களின் தோற்றம் பற்றிய முக்கியமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மதத்தின் பரிணாமம் என்ற கூற்றிற்கான அறிவியல் ஆதாரங்கள் இதில் வெளிப்படவில்லை. ஆண்ட்ரு லங் மற்றும் வில்ஹெல்ம் ஸ்கிமிட் போன்ற மானுடவியலாளர்கள் மதம் பரிணாமம் அடையவில்லை என்று எடுத்துக் கூறியுள்ளனர். காலங்கள் செல்ல செல்ல, சில நேரங்களில் அவை திரிபு நிலையை அடைந்துள்ளன. ANTHROPS இன்ற இதழில் ஸ்கிமிட்-இன் ஆராய்ச்சிகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.



1900-1935 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் வெளிவந்த ஆராய்ச்சிகள் மதங்களின் பரிணாமம் என்ற கூற்றை தவறு என சுட்டி காட்டுகின்றன. இதன் காரணமாக பல மானுடவியலாளர்கள் இந்த பரிணாம தத்துவத்தில் இருந்து வெளியே வந்துள்ளனர். ஆனாலும் சில கடவுள் மறுப்பினர் தொடர்ந்து இந்த பொய்யான தொகுப்புகளுக்கு வலு சேர்க்க முனைகின்றனர்.

**எகிப்து மற்றும் மெசபடோமியாவில் இருந்து பெறப்பட்ட தொல்இயல் கண்டுபிடிப்புகள்:**

மெசபடோமிய சமவெளி - நாகரீகங்களின் தொட்டில் என்றழைக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் இருந்து தொல்லியல் கண்டுபிடிப்புகளின் மூலம் பெறப்பட்ட முக்கியமான தகவல் யாதெனில் இதில் வாழ்ந்த சமூகங்கள் மத நம்பிக்கை கொண்டிருந்தன என்பதே.

எண்ணற்ற போலிக்கடவுள்களும் இருந்த தாக கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. இந்த எண்ணற்ற போலி கடவுள்களுக்கு மத்தியிலும் அவர்கள் ஒரே இறைவனை நம்பிக்கை கொண்டதாக சில ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

ஆக்ஸ்போர்ட் பல்கலைகழகத்தை சார்ந்த ஸ்டீபன் லங்டன் என்பவரே பல தெய்வ வழிபாட்டு கொள்கையில் உண்மையில் ஒரு தெய்வ வழிபாடே அடங்கியுள்ளது என்பதை முதலில் கண்டுபிடித்தவர்.

*1931* ஆம் ஆண்டு அவர் தன்னுடைய கண்டுபிடிப்பை அறிவியல் உலகிற்கு வெளிப் படுத்தினார். அறிவியல் உலகம் இதை எதிர் பார்க்கவில்லை என்றும் முந்தைய மற்ற பரிணாமவியலாளர்களின் கருத்திலிருந்து முழுவதுமாக இது முரண்பட்டது என்றும் அவர் கூறுகிறார். மேலும்

“ஓரிறை வழிபாட்டில் இருந்து பலதெய்வ மற்றும் தீய நம்பிக்கைகளாக சரிவடைந்ததே மனித கலாச்சாரத்தின் வரலாறு என்றார்.

ஐந்து வருடங்களுக்கு பின், லங்டன் The Scotsman என்ற பத்திரிக்கையில் கூறியதாவது:

“ஓரிறை கொள்கையையே இந்த ஆதாரங்கள் தெளிவாக குறிப்பிடுகின்றன. செமிடிக் மக்களின் கல்வெட்டுகள் மற்றும் இலக்கிய குறிப்புகளும் ஓரிறை கொள்கையை உணர்த்துகின்றன. மேலும் ஹீப்ருக்களின் அடையாள-குறியீட்டு வழிபாடுகளும் சில செமிடிக் மதங்களும் தற்பொழுது செல்வாக்கு இழந்து காணப்படுகின்றன.”

டெல் அஸ்மார் என்றழைக்கப்படும் சுமேரியன்களின் நகரத்தில் இருந்து சுமார் *3000* BCE-ஐ சார்ந்த சில பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை லங்டன் கருத்திற்கு முழு வலு சேர்க்கின்றன. இந்த ஆராய்ச்சியின் இயக்குனர் ஹென்றி பிராங் போர்ட் இதனுடைய அலுவலக அறிக்கையை தருகிறார்.

எங்களுடைய அகழ்வாராய்ச்சி ஒரு புதிய உண்மையை வெளிகொண்டுவந்துள்ளது. பாபிலோனியன் மாணவர்கள் இனிமேல் இந்த கண்டுபிடிப்பின் உண்மைகளையும் கணக்கில் எடுத்து கொள்ள வேண்டும். முதல் முறையாக மதங்கள் பற்றிய முழுமையான குறிப்புகள் அதனுடைய சமூக கட்டமைப்புடன் எங்களுக்கு கிடைத்துள்ளன.

கோவில்களிலிருந்தும் அதில் வழிபாடு நடத்தியவர்கள் வாழ்ந்த வீடுகளிலிருந்தும் ஒத்த சம அளவிலான ஆதாரங்கள் கிடைத்



துள்ளன. அவர்கள் தனித்தனியாக கண்டு பிடித் தவற்றில் இருந்து எங்களால் ஒரு முடிவுக்கு வர முடிந்தது.

உதாரணமாக, உருளைவடிவ கல்லில் சில உருவக குறிப்புகள் இருந்தன. அது பல கடவுள்களின் மீதும் காணப்பட்டன. இதனடிப் படையில் அனைத்து கடவுள் சிலைகளையும் ஒருங்கே இணைத்தால் அது அக்கோவிலில் வழிப்பட்ட ஒரு தனித்த தெய்வத்தை குறிப்பிடுவதாக அமைந்தது. எனவே சுமேரிய-அக்காதிய தெய்வங்களில் காணப்பட்ட பல்வேறு சிலைகள் தனித்தனி கடவுள்களாக கருதப்படவில்லை என்பது புரிகிறது.

பிராங்போர்ட்டின் கண்டுபிடிப்புகள் மூட பழக்க வழக்கங்களும், பல தெய்வ வழிபாடு

முறைகளும் எவ்வாறு நடைமுறைக்கு வந்தன என்பன போன்ற முக்கிய உண்மைகளை வெளிப்படுத்துகின்றன.

மதங்களை பற்றிய பரிணாம கூற்றுப்படி , மனிதர்கள் இயற்கையின் பிரதிநிதிகளாக தீய சக்திகளை வழிபட தொடங்கிய போது தான் பலதெய்வ கொள்கை உருவானது என்கின்றனர். ஆனால் அப்படியல்ல.

காலங்கள் செல்ல செல்ல, ஒரே இறைவனின் பல்வேறு பண்புகளை மனிதர்கள் வித்தியாசமான முறையில் புரிந்து கொண்டனர். இதுவே இறுதியாக ஓரிறை நம்பிக்கையில் இருந்து பிறழ வழிவகுத்தது.

சுமேரியன்களின் எழுத்துகளை லங்டன் மொழியாக்கம் செய்வதற்கு முன்னரே பிரடெரிக் டெலிட்ச் என்ற ஆராய்ச்சியாளர் இதே மாதிரியான கண்டுபிடிப்புகளை வெளிக்கொணர்ந்துள்ளார்.

மார்டுக் என்ற பெயரை கொண்ட ஒரே தேவனையே பாபிலோனியர்கள் வணங்கினர். இத்தெய்வத்தின் பல்வேறு குணாதிசியங்களை அடிப்படையாக கொண்டே எண்ணற்ற தெய்வங்கள் பாபிலோனியர்களின் வழிபாட்டு தலத்தில் காணப்பட்டன என அவர் கண்டு பிடித்தார்.

மார்டுக் என்ற தெய்வத்திற்கு பல பெயர்கள் இருந்தன. நினிப் அல்லது ஆற்றல் மிக்கவன், நேர்கல் அல்லது போர்கடவுள், பெல் அல்லது ஆதிக்கம் மிக்கவன், நிபோ அல்லது இறைத்தூதர்களின் கடவுள், சின் அல்லது இரவின் ஒளி, சமஸ் அல்லது நீதியின் கடவுள், அத்து அல்லது மழைக் கடவுள் என அக்கடவுளை அழைத்துள்ளனர்.

காலப்போக்கில் இந்த குணாதிசியப் பெயர்களே தனி கடவுள்களாக மாறியிருக்கலாம். சூரிய கடவுள், சந்திர கடவுள் போன்றவையும் இதே பாணியில் மனிதனின் கற்பனையில் உருவாகியது. இதை வைத்து பார்க்கும் போது ஒரு தெய்வ வழிபாட்டில் இருந்தே பல தெய்வ வழிபாடு தோன்றியதை அறியலாம்.

பழங்கால எகிப்தியர்களிடத்திலும் இந்த நிலைமை இருந்ததற்கான தடயங்களை நாம் காணலாம். ஓரிறை கொள்கையில் இருந்து பிறழ்ந்து சூரிய வழிபாட்டை இவர்கள் மேற்கொண் டனர்.

M.de Rouge -இப்படி குறிப்பிடுகிறார் : இதில் மறுக்க முடியாத உண்மை என்னவென்றால் எகிப்திய மதங்களின் உன்னத நிலை என்பது படிப்படியாக அடைந்த முன்னேற்ற நிலை அல்ல. அது பழமையான நிலையை எடுத்து காட்டுகிறது. கிறிஸ்தவ அல்லது புற சமயத்தை சார்ந்த கிரேக்க மற்றும் இலத்தின் எழுத்தாளர்களின் படி, எகிப்திய மதங்களின் கடைசி நிலை மிகவும் சீர்குலைந்திருந்தது.

மானுடவியலாளரான சர் பிளிண்டர்சின் கூற்றுப்படி ஒரு தெய்வ கொள்கையில் இருந்து சிறிது சிறிதாக நெறி தவறி மூடபழக்க வழக்கங்களும் பல தெய்வ நம்பிக்கைகளும் தோன்றின. முன்னர் இருந்த சமூகத்தை போல் இன்றுள்ள சமூகங்களும் அந்த நெறியில் இருந்து தவறுவதை நாம் பார்க்கலாம்.

பழைய மதங்களில் காணப்படும் கடவுள்களிடத்திலும் வெவ்வேறு பிரிவுகள் உள்ளன. சில இனங்களில், இந்து மதங்களை போன்று கடவுள்கள் அதிகரித்து கொண்டே செல்கின்றன. சிலர் பெரிய கடவுள்களை வணங்க முயற்சி செய்வதில்லை. மாறாக இயற்கையையும், பிசாசுகளையும் வணங்கு கின்றனர்.

பரிணாமத்தின் படி, ஒரு தெய்வ வழிபாட்டு கொள்கைக்கு முன்னர் பல தெய்வ வழிபாடே இருந்தது என்று தான் நாம் கண்டுபிடித்திருக்க வேண்டும். ஆனால், இறையியல் குறித்த ஆராய்ச்சியில் நமக்கு கிடைத்தது என்னவோ ஒரு தெய்வ வழிபாடே முதல் நிலை. பல தெய்வ வழிபாட்டின் பாதையின் ஆரம்பத்தை நோக்கி நாம் செல்வோமானால் அது ஒரு தெய்வ வழிபாட்டில் தான் இட்டு செல்கிறது.

இன்ஷா அல்லாஹ் தொடரும்

**அபூ ஹாசின்**

## எது முதலில்?

# தடை செய்யப்பட்டவற்றை தவிர்ப்பதா, நன்மைகள் செய்வதா எதற்கு முதலிடம்?

இப்படி ஒரு விவாதமும் அறிஞர்களின் வட்டாரத்தில் உண்டு. மார்க்கம் ஏவியவற்றைச் செயல்படுத்துவதைவிட தடை செய்யப்பட்டவற்றைத் தவிர்ப்பதே முக்கியம் என்கின்றனர் சில அறிஞர்கள். பின்வரும் நபிமொழியை இதற்கு சான்றாகக் காட்டுகின்றனர்.

நபி (ஸல்) கூறினார்கள் :

“நான் தடை செய்தவற்றை விட்டு விலகுங்கள். நான் ஏவியவற்றை முடிந்த அளவுக்கு நிறைவேற்றுங்கள்” (நூல் : புகாரி, முஸ்லிம்)

இந்த நபிமொழியைப் பாருங்கள்தடைசெய்யப்பட்ட எதையும் செய்திட அனுமதிக்கவில்லை. கட்டளைகளை முடிந்தவரை செய்யுங்கள் என்று கூறுகிறது. “முடிந்தவரை” என்ற செயல் கவனிக்கப்படவேண்டும்.

இக்கருத்தை இமாம் அஹ்மது (ரஹ்) கூறியுள்ளார்கள். கிட்டத்தட்ட இதே போன்ற கருத்தை வேறுசிலர் இப்படிச் சொல்கின்றனர். நன்மையான செயல்களை நல்லவனும் செய்வான் கெட்டவனும் செய்வான். ஆனால் ஒரு வாய்மைவாய்ந்தவன்மட்டுமே பாவம் செய்யாமலிருப்பான்.



இமாம் யூசுப் அல்கர்லாவி

இக்கருத்தை ஸஹ்ல் துஸ்தரீ (ரஹ்) கூறுவதாக அபூ நயீம் தனது ‘ஹில்யா’வில் குறிப்பிடுகிறார்.

மேலும் நபி (ஸல்) கூறினார்கள் “தடை செய்யப்பட்டவற்றை விட்டு விலகிவிடு. இதனால் நீ மக்களில் சிறந்த வணக்கசாலியாவாய்.” (அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி) : நூல் : அஹ்மது, திர்மிதி, இப்னுமாஜா, பைஹகீ, ஹில்யா) மேலும் நபி (ஸல்) கூறினார்கள்

“வணக்க வழிபாட்டு தொடர்ச்சியாக ஈடுபடுவரை முந்திவிட வேண்டும் என்று விரும்பக் கூடியவர் பாவங்கள் செய்யாமல் தன்னைக் காத்துக் கொள்ளட்டும். (அறிவிப்பாளர்: ஆயிஷா (ரழி) நூல் : அபூயஅலா)

ஹசன் பசரீ (ரஹ்) கூறினார்கள் :

அல்லாஹ் தடை செய்தவற்றை விடுவதை விட சிறந்த எதையும் வணக்கசாலிகள் செய்து விடுவதில்லை.

எனவே ஏவல்களை செய்வதைவிட தடை செய்யப்பட்டவைகளை விடுவதே முதலிடம்பெறுகிறது. இப்படிச் சொல்லிவிட்டதால் கடமைகளை நிறை வேற்றுவதைவிட விலக்கப்பட்டவற்றைத் தவிர்ப்பதே போதுமானது என்று புரிந்துகொள்ளாதீர்கள்.

நஃபில் எனும் உபரியான வணக்கங்களைவிட பாவங்களைத் தவிர்ப்பதே சிறந்தது என்று பொருள். ஏனென்றால் கட்டாயக் கடமைகள் கண்டிப்பாக நிறைவேற்றப்பட வேண்டியவை. இவற்றைச் செய்யும்போது நிய்யத் (மன எண்ணம்) இருக்க வேண்டும். பாவங்களைச் செய்யாமலிருப்பதற்கு நிய்யத் (மன எண்ணம்) தேவையில்லை.

எனவே பாவங்களை விடும் செயலை விட கடமைகளைச் செய்யும் செயலே ஏற்றமானது. இன்னொன்றையும் கவனியுங்கள், தவ்ஹீத் ஏகத்துவத்தையோ இஸ்லாத்தின் கடமைகள்

அனைத்தையுமோ அல்லது அவற்றுள் சிலதையோ ஒருவன் விடுவதால் காஃபிராகி (இறை மறுப்பாளனாகி) விடுவான். ஆனால் பாவங்களைச் செய்வதால் காஃபிராவதில்லை.

எனவே மார்க்கத்தின் ஏவல்களைச் செய் வதைவிட தடை செய்யப்பட்ட பாவங்களைச் செய்யாமலிருப்பதே ஏற்றமானது என்பதன் பொருள். நஃபில் எனும் உபரியான வணக்கங் களைவிட பாவங்களை விடுவது ஏற்றமானது என்பதாகும்.

இதை இப்னு உமர் (ரழி)வின் பின்வரும் பொன்மொழி வலியுறுத்துகிறது. "தடை செய்யப்பட்ட வழியில் வரும் ஒரு சல்லிக்காசு வருமானத்தை வேண்டாம் என்று உதறுவது அல்லாஹ் பாதையில் ஒரு லட்சம் செலவிடுவதை விட ஏற்றமானது"

மூத்த முன்னோடி (ஸலஃப்) ஒருவர் கூறினார்:

சல்லிக் காசானலும் சரி, அது அல்லாஹ் வுக்குப் பிடிக்காத வழியில் வந்தால் அதை உதறுவதால் வரும் இன்பம் ஐநூறு ஹஜ் செய்வதால் வரும் இன்பத்தை விட எனக்கு பேரின்பம் தரும். அப்துல்லாஹ் பின் முபாரக் (ரஹ்) கூறினார்கள் : லட்சக் கணக்கில் தர்மம் கொடுப்பதைவிட எனக்கு அதிக விருப்பமானது சந்தேகத்துக்கிடமான வழியில் வரும் ஒரு வெள் ளிக்காசு கூட வருமானத்தை ஏற்க மறுப்பதுதான்.

உமர் பின் அப்துல் அஜீஸ் (ரஹ்) கூறினார்கள்

"இரவு வணக்கத்தில் திளைப்பதோ பகலில் நோன்பு வைப்பதோ இவ்விரண்டையும் செய் வதோ இறையச்சம் அல்ல. தக்வா என்பது அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்று வதும் அவன் தடை செய்தவற்றை விடுவதும்தான். இவற்றுடன் சேர்த்து நற்செயல்களும் செய்தால் அது நன்மைக்குமேல் நன்மையாகும்"

மேலும் அவர்கள் இப்படிச் சொன்னார் கள் "நான் ஐவேளைத் தொழுகையும் வித்ரு தொழுகையும் மட்டும் தொழ வேண்டும். கடமையான "ஸகாத்"ஐ மட்டும் வழங்க வேண்டும். உபரி தர்மங்கள் வழங்காமலிருக்க வேண்டும். ஒரு நாள் கூட உபரியான நோன்பு நோற்காமல் கடமையான ரமழான் நோன்பை மட்டுமே நோற்க வேண்டும். கடமையான ஒரு ஹஜ் மட்டும் செய்து விட்டு பிறகு ஹஜ் செய்யாமலிருக்க வேண்டும்.

எஞ்சியுள்ள என் வலிமை முழுவதையும் திரட்டி அல்லாஹ் எனக்குத் தடை செய்தவற்றை விட்டு நான் விலகியிருக்க அதைப் பயன்படுத்த வேண்டும் என்று விரும்புகிறேன்"

சான்றோர்களின் மேற்கண்ட பொன் மொழிகளின் சாராம்சம் என்னவென்றால் ; ஏராளமான (நஃபில்) உபரி வணக்கங்களை விட தடைசெய்யப்பட்டவற்றைத் தவிர்ப்பதுதான் (ஒப்பீட்டளவில் இது குறைவாக இருப்பினும் கூட) சிறந்தது. ஏனென்றால் பாவங்களைத் தவிர்ப்பது கடமை. ஆனால் அதுவோ உபரியான துதான்!

பிற்கால அறிஞர்களும் சிலர் இப்படிக் கூறுகின்றனர்

"நான் உங்களுக்குத் தடை செய்தவற்றை விட்டு விடுங்கள். நான் ஏவியவற்றை முடிந்த வரை செயல் படுத்துங்கள்" என்று நபி (ஸல்) கூறியிருப்பதற்குக் காரணம் ஒரு ஏவலுக்குக் கட்டுப்பட வேண்டுமென்றால் செயல்பட வேண்டும் அதாவது அது ஒரு செயல். எந்த ஒரு செயலும் சில காரணங்களையும் சில நிபந்தனை களையும் சார்ந்தேதான் இருக்கும். அந்தக் காரணங்களிலும் நிபந்தனைகளிலும் சில சிலரின் சக்திக்கு அப்பாற்பட்டதாக இருக்கும்.

எனவே எந்த ஏவலையும் சக்திக்கு உட்பட்டு செயல் படுத்துங்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இதோ அல்லாஹ் கூறுவதைப் பாருங்கள் "உங்களால் இயன்ற அளவுக்கு அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள்" (64:16) "(கஅபா எனும்) இறை இல்லத்துக்குச் சென்று வர சக்தியுள்ள மனிதர்கள் மீது அல்லாஹ்வுக்காக ஹஜ் செய்வது கடமையாகும்" (3:97)

ஆனால் தடை செய்யப்பட்டவற்றைச் செய்யாமலிருப்பது ஒரு செயல்அல்ல. அது செயலின்மை. எந்தக்காரியத்திலும் செயலின்மை என்பதுதான் பூர்வீகமானது. எனவே செய லின்மை என்ற பூர்வீகத்திலேயே தொடர்வது எல்லோருக்கும் சாத்தியமானதுதான். இதில் சக்திக்குட்பட்ட செயலின்மை மட்டுமே உண்டு. சக்திக்குட்படாத செயலின்மை என்று எதுவும்

இல்லை. இவ்வாறு அறிஞர்களுள் சிலர் கூறியுள்ளனர். எனினும் இதைக் கூட அப்படியே நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏனென்றால் சில சமயங்களில் மனிதன் சில வலிமையான காரணங்களால் பாவங்களை நோக்கி ஈர்க்கப்படுகிறான். அப்பொழுது அந்தப் பாவங்களைச் செய்திடும் வாய்ப்பு இருக்கும் சூழலில் அவற்றைச் செய்யாமலிருக்க அவனால் இயலாமல் போய்விடுகிறது. அந்த நேரத்தில் பாவம் செய்திடும் உணர்வை கட்டுக்குள் வைத்திட பெரும் சிரமமப்பட வேண்டியதிருக் கிறது. இது நன்மைகளைச் செயவதற்கு பட வேண்டிய சிரமங்களை விட கூடுதலாக ஆகி விடுவதும் உண்டு.

உமர் (ரழி)விடம் ஒருவர் "சிலர் பாவங் களைச் செய்ய ஆசைப்படுகின்றார்கள். ஆனால் அவற்றைச் செய்வதில்லை. இவர்களைப் பற்றி கருத்து என்ன" என்று கேட்டபொழுது "தக்வா வுக்குரிய சோதனையை இவர்களின் உள்ளங் களுக்கு அல்லாஹ் வைக்கிறான். இவர்களுக்கு மன்னிப்பும் மகத்தான கூலியும் உண்டு" என்று பதிலளித்தார்கள் உமர் (ரழி) (அறிவிப்பாளர் : முஜாஹித் (ரஹ்), நூல் : அஹ்மது)


பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

**கொடிய வட்டியில் இருந்து மீள!**

**தாங்கள் வங்கியில் அடகு வைத்திருக்கும் நகைகளை ஏலத்திற்கு செல்லாமல் மீட்டு நல்ல விலைக்கு விற்றுத் தரப்படும்.**

தொடர்புக்கு

**90955 40678**


தன் திரு வேதங்களில் ஒன்றில் அல்லாஹ் கூறியுள்ளதாக யசீத்பின் மைசரா (ரழி) கூறினார்கள்

"இளைஞனே! இச்சைகளை விட்டு விலகி தன் இளமையை எனக்காக செலவளித்தவனே! நீ என்னிடத்தில் என் வானவர்களில் ஒருவன் போலவேஇருக்கிறாய். (நூல்: ஹில்யா, அபூநயீம்)

மேலும் அவர்கள் கூறினார்கள் : எரி பொருளை நெருப்பு எரிப்பது போல அவ்வளவு கடுமையாக இச்சை உடலைத் தீண்டுகிறது. இச்சைக்குப் பணியாதவர்கள் பிறகெப்படி இதிலிருந்து தப்பிக்க முடியும் (நூல் : ஹில்யா)

ஆக, சுருங்கச் கூறின், தன் அடியார்கள் எவரையும் அல்லாஹ் சக்திக்கு மீறி வேலை வாங்கமாட்டான். சிரமமாக இருக்கும் என்பதற்காகவே சில செயல்களை செய்யாமல் இருக்க அனுமதித்துள்ளான். இது அடியார்களுக்கு அவன் செய்த அருள்.

ஆனால், பாவங்கள் அப்படியல்ல. ஆசை இருக்கிறது என்பதாலோ, செய்யத் தூண்டும் காரணிகள் வலிமையாக இருக்கிறது என்பதாலோ பாவத்தைச் செய்திட எவருக்கும் அனுமதி வழங்கவில்லை.

மாறாக, எந்தச் சூழ்நிலையிலும் பாவம் செய்துவிடக் கூடாது என்றே வலியுறுத்துகிறான். தடை செய்யப்பட்ட உணவுகளை நெருக்கடி யான நேரத்தில் உண்ணலாம் என்று அனுமதி கூட உயிர் வாழ்ந்திடப் போதுமான அளவுக்கே உண்ண அனுமதி உண்டு. ஆசைக்கேற்றபடியோ ருசிக்கவோ அல்ல.

"ஏவல்களைக் கடைப்பிடிப்பதை விட விலக்கப்பட்டவற்றைப் பேணி வாழ்வதே கடின மானது" என்று இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) கூறுவது எவ்வளவு சரியானது என்பது இப்போதுதான் புரிகிறது.

இதோ அண்ணல் நபி (ஸல்) கூறுகிறார்கள்...

"(மார்க்கத்தில்) நிலைத்திருங்கள் அதை முழுமையாக அடைந்து விடமாட்டீர்கள். (அறிவிப்பாளர் : சவ்பான் (ரழி) (நூல் : அஹ்மது, தாரிமீ, இப்னுமாஜா, ஹாகிம்)

அதாவது ; முழுமையாக உங்களால் நிலைத்திருக்க இயலாது என்று பொருள்.....

பாபரி மஸ்ஜித் தகவல்கள் என்றொரு நூல், வேர்கள் பதிப்பகத்தின் ஆவணங்களில் ஒன்று தொகுத்துத் தந்தவர் மு. குலாம் முஹம்மது ஆசிரியர் – வைகறை வெளிச்சம். இதனை மையமாகக் கொண்டு உயிர்மை ஜூலை 2017 இதழில் ஓர் கட்டுரை இடம் பெற்றது. அதனை இங்கே இடம்பெறச் செய்கின்றோம். அரிய ஆதாரங்களைக் கொண்ட ஒரு நூல் என அனைவரும் போற்றும் நூல்.

இதனை வாசகர்கள் வாங்கிப்படிக்க வேண்டும். சகோதர சமுதாயத்தவர்களுக்கு கொடுத்திட வேண்டும்.

ரமணா படத்தில் காவல்துறை மிகக் குழப்பமாக முழித்துக் கொண்டிருக்கும் ஒரு தருணத்தில், முடிச்சவிழ்ந்து சிக்கல்கள் தீர, ஒரு பொதுக் காரணத்தை துப்பறிந்து கண்டுபிடிக்கும்.

அது என்னவென்றால், படத்தின் நாயகன் பணிபுரியும் ஒரு கல்லூரியில், அவரிடம் படித்த மாணவர்கள் மட்டும், தமிழக அரசுப் பணிகளில், தமிழகம் முழுவதும் விரவிக் கிடப்பார்கள்.

ஒரு ரூபாய் கூட லஞ்சம் வாங்க மாட்டார்கள். அதேவேளையில் அவர்களுடன் பணிபுரியும் சக ஊழியர்களில் யார் யார் லஞ்சப் பேர்வழிகள், எவ்வளவு லஞ்சம் வாங்குகிறார்கள் என்பதை மட்டும் தங்களின் பேராசிரியர்க்கு (நாயகன்) அப்டேட்டாக அனுப்பி வைத்துக் கொண்டிருப்பார்கள்.

நாயகனின் அந்த முன்னாள் மாணவர்கள், பொதுப்பணித்துறை, காவல்துறை, தொழில், வணிகவரி என்று தமிழக அரசின் அனைத்துத் துறைகளிலும் இருப்பார்கள்.

சரி, இது நாயகனின் நல் நோக்கத்திற்காக, அதாவது ஊழலை அறவே ஒழிக்க, அவர் ஹிம்சை வழியை நாடுகிறார். அதாவது ஆயுதங்கள் மூலம் அவர்களில் தலையாய குற்றவாளியைக் கண்டறிந்து கொன்று நடு வீதியில் தொங்க விடுவார். இதனால் நம் மாநிலமே ஊழல் செய்ய அஞ்சும், ஒரு கட்டத்தில் ரஜினிகாந்தும், அவர் கடவுளும் மிக விரும்பும் அந்த சிஸ்டம் சீராகி, நாட்டில் தேனாறும், பாலாறும் சரி விடுங்க, அது இயக்குநரின் பேராசை.

ஆனால், அப்படியெல்லாம் ஓர் இயக்கத்தால் செய்ய முடியாது என்று நினைக்கிறீர்களா?

ஆம், ரமணாக்கள் எல்லாம் மோகன் பகவத்கள் முன் வெறும் தூசுகள். ராஷ்ட்ரீய ஸ்வயம்சேவக் சங் எனப்படும் ஆர்.எஸ்.எஸ். ஷாகாக்கள் இப்படியான ஒரு கூட்டத்தைப் பல வருடங்களாய் உருவாக்கிக் கொண்டே




# வெடிக்கப்போகும் பலூன்..!

**- ராஜ ராஜேந்திரன்**

வருகின்றன.

ஷாகாக்கள் = சீருடை அணிந்து உடற் பயிற்சி, தற்காப்புப் பயிற்சி, ஆயுதப் பயிற்சி, இந்துத்துவ உபதேசங்கள், கட்டளைகள், இலக்குகள், அதைக் கண்டடைதல், எதிரிகள் யார் என அறிந்து கொள்வது, அவர்களை அகற்றுவதற்கான அரசியல்?? இதையெல்லாம் செயல்படுத்த பயன்படும் ஒரு கூட்டம். வார விடுமுறை நாட்களில், பூங்காக்களில், பள்ளி அல்லது கல்லூரி விளையாட்டுத் திடல்களில் நிகழ்த்தப்படுபவை.

கிட்டத்தட்ட மூளைச்சலவை செய்யப் படும் மதப் பிரசங்கக் கூட்டத்தைப் போலவே இதிலும் வீராவேச உரைகள் நிகழும். அதில் மனம் மயங்கி உணர்ச்சிப் பெருக்கில் ஆழ்ந்து, தேசத்தின் பால், அதாவது இந்துஸ்தானத்தின் மீது எவர்களுக்கெல்லாம் ஆர்கஸம் வந்து, என் தாய்நாடு (மதம்) காக்க என்னுயிரையும் தருவேன் என குரல் கொடுக்கிறார்களோ, அவர்கள்தான் மோகன் பகவத்களின் ஸ்லீப்பர் செல்கள்.

மிகவும் நம்பகத் தன்மையான ஆள், யார் ஆட்சி புரிந்தாலும் தங்களுக்கே விசுவாசமாக இருப்பார் என ஆழமான ஒரு முத்திரை பதிந்து விட்டால், பிறகு அவருடைய வாழ்க்கை முழுக்க முழுக்க இந்த இயக்கத்தினராலேயே இயக்கப்படும். இவர்கள் எங்கு போனால் என்ன காரியம் தங்களுக்குச் சாதகமாக, தங்களின் இலக்கை நிறைவேற்றும் என்று அங்கு இந்த ஸ்லீப்பர் செல்களை அமர வைத்து, பல காரியங்களை சாதிப்பார்கள்.

என்னடா, இவனும் சமஸ் மாதிரி பூச்சாண்டி காட்டுறானே? அவ்வோள் பெரிய அப்பாடக்கர்களா அவர்கள் என மிரளத் தேவையில்லை. இந்தக் கட்டுரையின் நோக்கமும் அதுவல்ல. மதத்தை ஓர் ஆயுதமாகவும், கேடயமாகவும் உபயோகித்து, முட்டாள் அடிமைகளைத் தொடர்ந்து எப்படி உருவாக்கி வருகிறார்கள் என்பதைத் தோலுரித்துக் காட்டும் ஒரு முயற்சி மட்டுமே. ஆனால் அவர்கள் காத்திருக்கிறார்கள். தங்களின் காலம் கனியும் வரை பொறுமையாக, இரை தங்களின், அருகே வரும் வசை ஒற்றைக்காலில் கொக்கு போலக் காத்திருக்கிறார்கள்.

வாஜ்பாய் போன்ற தங்கள் ஆட்சிகளில் மைனாரிட்டி ஆட்சியின் போதெல்லாம் அவர்கள் தங்களின் சுயரூபத்தைப் பெரிதாக வெளிக்காட்ட விரும்புவதில்லை.

இதோ 2014-இல் நிகழ்ந்ததைப் போன்று ஒரு பிரமாண்ட பலத்துடன் தனிக்கட்சியாக ஆள வாய்ப்பு வரும்போது தங்களின் ஸ்லீப்பர் செல்களை எல்லாம் எழுப்பிவிட்டு, நாடே இந்த ஷாகாக்களின் ஏந்தர் செயல்களையும் ரசிக்கிறது, பாராட்டுகிறது. ஏற்கிறது என்றெல் லாம் மொத்த மக்களையும் நம்ப வைப்பதில் மும்முரமாகச் செயல்படுகிறார்கள்.

நீதித்துறை, அரசியல், ஊடகங்கள், நிதி திரட்ட வணிகர்களை, ஆட்சிப்பணி, கல்வி, அறநிலையங்கள், விளையாட்டு, சமூக வளைத் தளங்கள், சினிமா, காவல்துறை, அயலகப் பணி... இப்படி நாட்டின் மிக மிக முக்கியமாக இருக்கும் எல்லாத் துறைகளிலும் இந்த ஸ்லீப்பர் செல்கள் ஊடுருவி இருக்கிறார்கள்

அதிகாரம் அவர்களின் கைகளில் முழுக்க முழுக்க வரும்போது, தங்களின் ஸ்லீப்பர் செல்களை இவர்கள்தான் என கண்டறிகிறார் கள். அவர்களுக்கு நினைவூட்டுகிறார்கள். உங்களின் சேவை இப்போது எங்களுக்கு அவ சியம் தேவை என அவர்களுக்கு தேவையான வேலைகளைச் சாதித்துக் கொள்கிறார்கள்.

நமக்கு இங்கு ஏகப்பட்ட சேனல்கள் இருப்பதால் பொதுவாகவே இப்போது நாம் வடக்கின் பல செய்திச் சானல்களைப் பெரும் பாலும் தவிர்த்தே கிடக்கிறோம்.

ஒரே ஒரு நாள், முழுக்க முழுக்க நம் சேனல்களைத் தவிர்த்துவிட்டு, வடக்கின் செய்தி சேனல்களை மட்டுமே பார்த்தால் போதும், கிட்டத்தட்ட 99 விழுக்காடு ஊடகங் கள் முழு வலதுசாரிகளாக மாறி, எல்லா ஸ்லீப்பர் செல்களும் முழித்துக் கொண்டதைப் போன்ற ஒரு பிரமிப்பை / பலத்தைத் தந்து கொண்டிருப்பது புரியும்.

சர்ஜிகல் ஸ்ட்ரைக் என்று ஒரு வீடியோ, எங்கு தாக்கினார்கள்? யாரைத் தாக்கினார்கள்?

எத்தனை பேரைக் கொன்றார்கள்? அதற்கு ஆதாரம் என்ன? ம்ஹூம், இப்படி எந்த ஒரு கேள்வியையுமே கேட்காமல், ராணுவம் தந்த அல்லது பாதுகாப்பு அமைச்சகம் தந்த வீடியோ காட்சிகளை நாள்தோறும் ஒளி பரப்பு வார்கள். அவர்கள் சொன்னதை அல்லது சொல்லிக் கொடுத்ததை மட்டும் அந்தக் காட்சிகளை ஒளிபரப்பும்போது சொல்லிய வண்ணம் இருப்பார்கள்.

நாடு ஏதோ மாபெரும் சாதனையைச் சாதித்து, இந்திய எல்லையில் இருந்த மொத்த எதிரிகள் கூட்டமே சின்னாபின்னமானது போன்ற பெரும் வீரப்பிரதாபம் கட்டமைக்கப் படும்.

கொஞ்சம் உற்று நோக்கினால் லடாக் எல்லையிலோ, அருணாச்சலப் பிரதேச எல்லையிலோ, சீனாவுக்கெதிராக இப்படிப் பட்ட ஸ்ட்ரைக்குகள் ஒருபோதும் நிகழவே செய்யாது. பாகிஸ்தான் எல்லையில் மட்டுமே நிகழும், பாகிஸ்தான் மட்டும் நம் பிரமாண்ட எதிரி.

என்ன ஒரு வெட்கக்கேடு? நமது தென்னிந் திய அளவு கூட இல்லாத நாடு? தென்னிந்திய அளவு கூட மக்கள் தொகை இல்லாத நாடு? வளர்ச்சியில் நம்மை விட, எல்லாத் துறை களிலும் மிகவும் கீழாக இருக்கும் ஒரு நாடு? மக்களாட்சியில் அடிக்கடி தோல்வியைத் தழுவிப் போட்டி நாடு அல்லது எதிரி நாடாக இருக்க முடியும்? ஒரே ஒரு காரணம், அது இஸ்வாமிய நாடு. இஸ்லாமியர்கள் இந்துத்து வர்களின் மாபெரும் எதிரிகள். அவ்வளவுதான்.

எல்லா ஊடகங்களிலும் இணை ஆசிரியர் பதவிகளிலாவது தாங்கள் சொல்லும் ஆட் களை நியமிக்குமாறு, இந்த இந்துத்துவ இயக் கங்களின் பரிந்துரைகள் வடக்கு ஊடகங்கள் முழுக்க உண்டு என்கிற ஒரு சேதியை வாசித்தேன். என்.டி.டி.வி விஷயத்தில் அது பலிக்காதபோது, எதிர்விளைவு கொஞ்சம் மோசமாக இருந்ததையும் பார்த்திருப்போம்.

மதச்சார்பற்ற ஒரு நாட்டில் மதப் பைத் தியங்கள் பெருகும்போது இப்படிப்பட்ட விபத்துகள் நிகழத்தான் செய்யும். எல்லாம் தற்காலிகமானவை. மக்கள் முழித்துக் கொள்ளும்போது முற்றிலுமாக சில வருடங்கள் செல்களின் செயல்கள் முடங்கிப் போய்விடும்.

சரி, கட்டுரைத் தலைப்புக்கு வருவோமா?

பாபரி மஸ்ஜித் என்கிற ஒரு கட்டுரைத் தொகுப்பை வாசிக்க எடுத்தேன். ஆசிரியர் மு. குலாம் முஹம்மது, நான்காவது பதிப்பாக, பல ஆவணங்கள், தீர்ப்புகளின் சிறு குறிப்புகள் சேர்க்கப்பட்டு 2012-இல் வெளியான ஒரு தொகுப்பு, முழுக்க முழுக்க இஸ்லாமியப் பார்வையில் சொல்லும் ஒரு நூல்தான்.

பாபர் மசூதி ராம ஜென்மபூமி டிஸ்ப்யூட் வெகு தீவிரமாக, மாபெரும் அரசியல் திருப்பு முனை காரணியாக 1985களில் இருந்தபோது, நிகழ்ந்த ஓர் அதிமுக்கியமான சம்பவம், தகுந்த ஆதாரங்களுடன் விளக்கப்படுகிறது.

பல நூற்றாண்டுகளுக்கு முன், முகலாயர் களால் கட்டப்பட்ட இந்த மசூதி, முகலாய அரசன் ஜஹாங்கீர் காலத்தில்தான், பாபர் மசூதி எனப் பெயர் சூட்டப்பட்டு, இஸ்லாமி யர்களின் தொழுகைக்காகத் திறந்துவிடப் பட்டது.

அது ஷியா-சன்னி முஸ்லிம்கள் இருவரும் சேர்ந்து தொழ அனுமதிக்கப்பட்ட ஒரு பள்ளிவாசல்.

அது ராமர் பிறந்து அல்லது அவர் கோயில் இருந்த ஓர் இடம். அதைத் தகர்த்துவிட்டே அந்தப் பள்ளிவாசல் கட்டப்பட்டதாக இந்துக்களின் குற்றச்சாட்டு.

இந்து-முஸ்லிம் மதத்தினர்க்கிடையேயான இந்தப் பள்ளிவாசல் சர்ச்சையில், சன்னி-ஷியா முஸ்லிம்களுக்கிடைலேயே ஒரு சண்டை வருகிறது. மசூதி யாருக்குச் சொந்தம் என்று. 1940-இல் இந்த வழக்கு நீதிமன்றம் போன போது, வழக்கு சன்னி முஸ்லிம்களுக்குச் சாதக மாக தீர்ப்பு வருகிறது.

அதன்பின் அந்த மசூதிக்கு இன்னும் எதிரிகள் அதிகமாகி விடுகிறார்கள். மசூதிக்குள் குழந்தை ராமர் சிலைகள் இருப்பதாகவும், தங்களை மசூதியில் நுழைய அனுமதித்தால் அதை உலகுக்கு காட்டுவோம் என்று நாகா

சாதுக்கள் எனப்படும் இந்துக்கள் தொடர்ந்து அங்கு முகாமிடுகிறார்கள். அதிகாலை தொழுகைக்குச் செல்லும் முஸ்லிம்களை இருளைப் பயன்படுத்தி கல்லெறிந்து தாக்குகிறார்கள்.

இந்த நாகா சாதுக்கள், துறவிகளிலேயே போர் வீரர் என்றழைக்கப்படுபவர்களாம். கும்பமேளாக்கள் நிகழும் நேரங்களில் இவர்களின் அணிவகுப்பை ரசிக்க பல லட்சம் பேர் கூடுவார்கள். ஆயுதம் வீசி, புஜ பராக்கிரமங்களுடன் இருக்கும் சாதுக்கள் (1)

*23.12.1949* முன்னதிகாலை *4* மணி, தொழுகைக்காகச் சென்ற இஸ்லாமியர், அங்கு திடீரென முளைத்து நின்ற ராமர் சிலை களைக் கண்டு மிரண்டு, காவல் நிலையத்திற்கு ஓடி வருகிறார்கள்.

அப்போது அயோத்தி நகரம் இருந்த பைசாபாத் தலைமை நீதிபதி கே.கே. நய்யார் வசம் விவகாரம் போகிறது. அவர் சிம்பிளாக, மசூதியை மூடிவிடுவோம், அது மட்டுமே பிரச்சினையைக் குறைக்கும் என



உத்தரவிட்டு விடுகிறார். அத்துடன் அந்த மசூதியில் தொழுகை முற்றிலுமாக முடங்கிப் போகிறது.

என்ன கூத்து என்றால், இந்த நய்யார்தான் இந்திய அளவில் இந்தத்துவா இயக்கங்களின் முதல் ஸ்லீப்பர் செல்.

ஏனென்றால், இப்படி சிலைகளை நிறுவ சதியாலோசனைகளும், ஒத்திகைகளும் நடக் கின்ற என்று பைசாபாத் எஸ்.பி. கிர்பால் சிங், நய்யாருக்குத் தொடர்ந்து கடிதங்கள் அனுப்பி வைத்திருக்கிறார். ஒன்றல்ல, இரண்டல்ல, பல கடிதங்கள்.

இப்படி எஸ்.பி. எழுதிய ஒரு கடிதத்தை கூட அறுபது ஆண்டுகளுக்கும் மேலாய் நடைபெற்று வரும் ஒரு சர்ச்சை வழக்கில், நீதிமன்றத்தில் ஆதாரமாய் அரசு சமர்ப்பிக்க வில்லை.

செப்டம்பர் 30, 2010 ஆம் ஆண்டு இந்தக் கடிதங்கள் நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்படு கின்றன. அதுவரை அயோத்தியில் வெளி யுலக இஸ்லாமியர்களில் பலரே கூட, சிலைகள் ஆதி காலத்திலிருந்து உள்ளேயேதான் இருந் திருக்கின்றன போல் என்று நினைத்திருக்கலாம்.

கே.கே.நய்யார், சிலைகள் நிறுவப்பட்ட அந்த மசூதியை முழுக்கத் தன் அதிகாரத்தின் கீழ் கையகப்படுத்தி, மசூதியின் எல்லாக் கதவுகளையும் மூடி, ஒரே ஒரு கதவை மட்டும் திறந்துவிடச் சொல்லி, அங்கு நிறுவப்பட்ட ராமர் சிலைகளுக்குப் பூஜைகள் செய்ய அனுமதி தருகிறார்.

முஸ்லிம்கள், மசூதி திடுமென பாலராமர் கோயிலாகிப் போன அவலத்தைப் பாரீர் என பிரமர் நேருவுக்கு தொடர்ந்து புகார் கடிதங்களை அனுப்புகின்றனர்.

நேரு, அப்போதைய உத்திரப்பிரதேச முதல்வரான கே.சி.பந்த்திற்கு ஒரு தந்தியை அனுப்புகிறார்.

Dangerous example is being set there, which will have bad consequence

முதல்வர், பிரதமரின் தந்திக்கு மதிப் பளித்து, மாவட்ட தலைமை நீதிபதி கே.கே.

நய்யாருக்கு இரு கேள்விகளை அனுப்பி வைக்கிறார்.

**1) சிலைகள் நிறுவியதை ஏன் தடுக்கவில்லை?**

**2) சிலைகளை இன்னும் ஏன் அகற்றவில்லை?**

*27.12.1949* அன்று அக்கடிதம் கே.கே. நய்யாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. கடிதத்தில் கையெழுத்திட்டிருந்தவர் அரசின் முதன்மைச் செயலாளர்.

நய்யார் பதில் கடிதத்தை இப்படி எழுதுகிறார்.

பள்ளிவாசலில் சிலைகள் நிறுவப்பட்டு பூஜைகள் நடந்துவருவதால், இனி எங்களால் அங்கு தொழுகை செய்ய முடியாது என இஸ்லாமியர்கள் மறுத்துவிட்டனர். பள்ளி வாசலை முழுக்க இந்துக்களுக்கே கொடுத்து விடும்படி சொல்லியும் விட்டார்கள். அதற்கான ஆதாரங்கள் என்று 15 இஸ்லாமியர்களின் பெயரும் கையெழுத்துகளும் அந்தக் கடிதத்தில் இருந்தன.

ஆனால் இது நய்யாரின் சூது என்று இஸ்லாமியர்கள் மீண்டும் பிரதமருக்கும், அப்போதைய கவர்னர் ஜெனரல் ராஜாஜிக் கும் கடிதங்களை அனுப்ப, மீண்டும் நய்யா ருக்கு உடனடியாக அச்சிலைகளைப் பள்ளி வாசலிலிருந்து அகற்றுமாறு ஆணை இட்டு முதல்வர் கடிதம் எழுத, நய்யாரின் பதில் இப்படி இருந்திருக்கிறது.

Have them removed? Remove me, But I will not get them removed

நாடு விடுதலை அடைந்து, இணைப்புக்காக நடந்த போர்கள், கலவரங்கள், காந்தி படு கொலை என ஏகப்பட்ட குழப்பங்கள் இருந்த நேரம் போல? கே.கே. நய்யாரின் இந்தக் கூத்துக்கு எந்த மேலதிக நடிவடிக்கைகளுமே நிகழவில்லை.

இத்தனைக்கும் பாதுகாவலர் படை களையும் அத்துமீறி மசூதிக்குள் சிலைகளை நிர்மாணித்தார்கள் என்று எப்.ஐ.ஆர் ஒன்றையும் பதிந்திருக்கிறார்கள். சிலைகள் வைக்கப்பட்ட உடன் பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கை அது. FIR No. 1949, US, 147/295/448, DT-23/12/1949

குற்றத்தைச் செய்தவர்கள் என்று ராம்தாஸ், சுக்லாதாஸ், சுதர்சனதாஸ் உட்பட 60 பேர் வரை எப்.ஐ.ஆரில் குற்றம் சாற்றப்பட்டி ருந்தது. ஆனால் இன்றைய தேதிவரை கூட அந்த எப்.ஐ.ஆரின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.

சரி, இந்த கே.கே. நய்யார் எப்படி ஸ்லீப்பர் செல்? என்ன ஆதாரம்??

நான்காவது நாடாளுமன்றத் தேர்தலில், ஜன்சங் கட்சி சார்பாக பாக்ரைச் என்கிற உ.பி. மாநிலத் தொகுதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கே.கே. நய்யார், அவரது மனைவி சகுந்தலா வும், ஜன்சங்தான் பிற்பாடு பாரதீய ஜனதா பார்ட்டி என மாற்றிக் கொண்டது, ஏன்? உங்களுக்கே தெரியும்.

இன்னும் நம்ம தலைப்புக்குள்ளேயே போகல,,,

**கி.பி. 1986**

இந்தச் சிலைகளுக்கு நடக்கும் பூஜைக் கூத்துக்கள் பொதுமக்களுக்கானது அல்ல. நய்யார் நியமித்த பூசாரிகள் வழியே சென்று பூஜைகள் செய்துவிட்டு வருவார்கள். தொழுகை சமாச்சாரம் *1949* டிசம்பரோடு முடிவுக்கு வந்த ஒன்று. இந்த நிலை, *37* வருடங்களுக்கும் மேலாகத் தொடர்வது இந்துத்துவர்களுக்கு ஒவ்வவே இல்லை. எல்லாக் கதவுகளையும் திறந்துவிட்டு, மக்களைத் தரிசனம் செய்ய அனுமதிக்க வேண்டும் என தொடர்ந்து நீதிமன்றம் போனது இந்த அமைப்புகள்.

எல்லா மனுக்களும் தொடர்ந்து தள்ளுபடி செய்யப்படவே... ரமணா பட டெக்னிக் ஒன்றைச் செய்ய முயல்கிறார்கள்.

பைசாபாத் மாவட்ட நீதிமன்றத்துக்குத் தங்கள் ஆள் ஒருவரையே தலைமை நீதிபதி யாகக் கொண்டு வந்துவிட்டால்?

அவர்தான் நம் நய்யார் கே.எம். பாண்டே, இதற்கான ஆதாரங்கள் பாவம் அவர் எழுதிய சுயசரிசையான Voice of Conscience (மனசாட்சியின் குரல்) என்கிற நூலிலிருந்தே

கிட்டுகின்றன.

தன் நூலில் அவர் இவ்வாறு விவரிக்கிறார்...

"தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்ட பின் பைசாபாத் சென்று, ராமஜென்ம பூமியையும் சென்று பார்தேன், அப்போது கோயிலுக்குள் யாரும் செல்ல முடியாது. காரணம் வாசலில் பூட்டுக்கள் போடப்பட்டிருந்தன. சில பூஜாரிகள்தான் கோயிலுக்குள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். (பாண்டே கோயில் கோயில் என எழுத, கட்டுரை ஆசிரியர் ஒவ்வொரு கோயிலின் பக்கத்திலும் பள்ளிவாசல், பள்ளிவாசல் என அடைப்புக் குறிக்குள் எழுதுகிறார். அவர் பதட்டம் அவருக்கே, பாவம்)

அதில் ஒரு பூஜாரி என் வழிகாட்டியாகச் செயல்பட்டவர், மிகவும் புத்திசாலி, அவருக்குப் பழைய வரலாறு தெரியும். நான் அவரிடம், "பண்டிட்ஜி, எப்படிப் பார்த்தாலும், இது ஒரு வழிபாட்டுத் தலம், ஒன்று இது மசூதியாகச் செயல்பட வேண்டும் அல்லது கோயிலாகச் செயல்பட வேண்டும், அப்படித்தானே?" என்றேன்.

அந்த மொத்த இடம் வெறிச்சோடிப் போய்க் கிடந்தது.

கடந்த 35 ஆண்டுகளாக வழக்குகள் நடந்துகொண்டிருக்கின்றன. 1934-க்கு பிறகு இந்த இடம் மசூதியாகச் செயல்படவில்லை என்றார் அந்தப் பூஜாரி.

நான் ஏன் வழக்குகளில் தீர்ப்புகள் வழங்கப்படவில்லை என்று கேட்டேன்.

ஒருவேளை அந்த நீதிபதி பிறக்கவில்லை போலும் என்று அந்த பூஜாரி கூறினார்.

ஆதாரம் Voice of Conscience, By Justice K.M.Pandey Page No. 212-213

இந்த நிகழ்வுக்குப் பின், சில நாடகங்கள் நிகழ்கின்றன. நம் பாண்டே முன், ஒரு மனு சமர்ப்பிக்கப்படுகிறது.

மனுவில், எல்லாப் பூட்டுகளையும் கேட்டுகளையும் திறந்து விட வேண்டும். மக்கள் சிலைகளைத் தரிசிக்க அனுமதி வழங்க உத்தரவிட வேண்டும்.

தீர்ப்பில் இப்படி தாம் குறிப்பிட்டதாக பாண்டே தன் சுயசரிசையில் எழுதியிருக்கிறார்.

"எதிர்பாராத விதமாக ஒரு மேல்முறையீடு எனக்கு முன்னால் இந்தப் பூட்டுக்கள் தொடர்பாகவே சமர்ப்பிக்கப்பட்டது. நான் இந்த விவகாரத்தை இத்தோடு இறுதியாக முடித்துவிடுவதே பொருத்தமாக இருக்கும் என முடிவு செய்தேன். வழக்கை 01.02.1986 -க்குள் முடித்துவிடுவதாகவும் சொல்லி இருந்தேன். அதன்படியே எல்லாப் பூட்டுகளையும் திறந்துவிடும்படி தீர்ப்பளித்தேன்."

மாலை 4 : 40 மணிக்கு வழங்கப்பட்டது தீர்ப்பு. 20 நிமிடங்களுக்குள் அனைத்து பூட்டுகளும் திறக்கப்பட்டன. நீதிமன்றத் தீர்ப்பின் நகல்கள் கூட கைக்கு வராத நிலையில், இதெல்லாமே இந்துத்துவர்களின் சிறந்த முன்னேற்பாட்டுடன் செயல்பட்டதை உலகுக்கு நிரூபித்தது.

மன்னிக்கணும், இதோ வந்துட்டோம் அந்த தலைப்புக்கு நீதியரசர் பாண்டே தொடர்கிறார்...

"நான் அந்தப் பூட்டு திறக்கும் உத்தரவை பிறப்பித்த நாளில், ஒரு கறுப்புக் குரங்கு ; நீதிமன்றத்தின் கூரையின்மேல், நாள் முழுவதும் வீற்றிருந்தது.

அது அங்கிருந்த கொடிக் கம்பத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டே இருந்தது. நீதிமன்றத்தின் இறுதி உத்தரவை செவிமடுக்க, பைஸாபாத்திலிருந்தும், அயோத்தியாவிலிருந்தும் வந்த குழுமியிருந்த மக்கள் அந்தக் குரங்குக்கு நிலக்கடலை, பலவகைப் பழங்கள் இப்படி எத்தனையோ காணிக்கைகளைக் கொடுத்தார்கள்.

ஆனால், அந்தக் காணிக்கைகள் எதையுமே அந்தக் குரங்கு தொடவே இல்லை. மிக அரிதான நிகழ்வு அது. நாள் மாலை 4:40 -க்கு தீர்ப்பு தந்த மாத்திரத்தில் அது அந்த இடத்தை விட்டு அகன்றது.

பின், நான் என் மாளிகைக்குத் திரும்புகிறேன், மாவட்ட நீதிபதியும், தலைமைக் காவல் கண்காணிப்பாளரும் என்னுடன் வந்தார்கள். அங்கே, என் வீட்டு வராந்தாவில்

அதே குரங்கு இருந்தது. நான் அதை வணங்கினேன், அதை ஒரு தெய்வீக சக்தி என எடுத்துக் கொண்டேன்.

இதை வட்டாரப் பத்திரிகைகள் அனைத்தும் வெளியிட்டிருந்தன. நீதிமன்ற வளாகத்தில் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் இதற்கு சாட்சி. ஆதாரம் : Page 215

பிற்பாடு கல்யாண்சிங் (1991) முதல்வரான பின், 1992-இல் பாபர் மசூதி முழுக்கத் தகர்க்கப்பட்டன பின், 1993-இல் நம் கருங்குரங்கு பக்தர் பாண்டேவுக்கு உயர்நீதி மன்ற நீதிபதி பதவி கிட்டுகிறது. இதுவே காலந்தாழ்ந்த, கொடுத்த வாக்குக்கு மீறி, தாமதமாகக் கிட்டிய பரிசு என்று சலிப்புடன் சொல்கிறார் பாண்டே"

சமீபத்தில், மாடுகளைக் கொல்பவர்களுக்கு ஆயுள் தண்டனை கொடுக்க வேண்டும் என ஆலோசனைகள் வழங்கிவிட்டு ஓய்வு பெற்ற ராஜஸ்தான் உயர்நீதிமன்ற நீதிபதி சர்மா வழங்கிய தீர்ப்புக் குறிப்புகளை வாசித்திருப்பீர்கள்.

அவர் பசு பால், பசு கோமியம், பசு கொம்புகளின் வீரியம் பற்றி மட்டும் ஆச்சர்யப் படவில்லை. ஆண் மயிலின் பிரம்மச்சரியம் பற்றிப் பெருமிதப்பட்டதும், அதன் கண்ணீரை அருந்தியே பெண் மயில்கள் கர்ப்பமாவதாகவும், சிலாகித்ததைக் கண்டு, அதிராத வாசகர்களே இருந்திருக்க முடியாது. நன்கு நினைவில் வையுங்கள், அவருக்கு நெடு நாட்களாக காலியாக இருக்கும் கிண்டி, ராஜ்பவன் அரியணையை அலங்கரிக்க கூட வாய்ப்புகள் வரலாம். இன்னொரு கிரண்பேடியாக அவர் தமிழக ஆட்சியாளர்களைக் கலக்கலாம்.

நீங்கள், பாண்டே, சர்மா, கோஸசாமி, ஜோஷி, முகர்ஜி, இவர்களுக்கெல்லாம் என்ன ஒற்றுமை என கூகுள் செய்யுங்கள். "ரமணா" படத்தில் வரவது போலவே சிவப்பு பட்டையில் யாவும் ஒருவரே என ஓர் உண்மை உங்களுக்கும் புலப்படும்.

இறுதியாக ஒன்று, போன வருடம் ஜூன் மாதம் ஜெயலலிதா மீண்டும் முதல்வராக பதவியேற்ற பத்தாம் நாள், "உயிர்மை"யின் தலையங்கத்தில் மனுஷ்ய புத்திரன் தன் இறுதி பத்தியை இப்படியாக முடித்திருந்தார்.

"இது கடப்பதற்கு கடினமான ஒரு காலம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், இது சீக்கிரமே கடந்துவிடும் என்கிற இனம் புரியாத நம்பிக்கை எதனாலோ ஏற்படுகிறது."

இது மனதின் ஆழப்புதைந்து மிகவும் பிடித்தமான ஆறுதல் ததும்பிய ஒரு பகுதி.

இன்றைய நிலைக்கும் இப்படி ஏதேனும் ஆருடம் சொல்லி எங்களைத் தேற்றுங்களே சார் எனக் கோரினேன்.

"எந்த ஒரு மோசமான விஷயமும், அதன் உச்சத்திற்குப்போக வேண்டும். அப்போதுதான் அது அழியும். நாம் தீமைகளை உச்சத்திற்குப் போக விடுவோம்."

அது சரி, நீட், ஜிடிபி, மாட்டு வணிகம், பண மதிப்பு நீக்கம், பொருளாதார சீர்குலைவு, இந்தி திணிப்பு, கீழடி ஹைட்ரோ கார்பன், வறட்சி, காவிரி, ஜல்லிக்கட்டு... தீமை பலூன் அளவுக்கு மிறி உப்பிவிட்டது. வெகு விவைில் வெடிக்கத்தான் போகிறது.

**- நன்றி உயிர்மை, ஜூலை 2017**






# அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கு ஆபத்து?

அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கு ஆபத்து எப்படி வருகின்றது என்றால், அதற்கு பதிலாக வேறொரு சட்டம் வருகின்றது.

ஆமாம் என்கிறன, அண்மையில் வெளிவந்த செய்திகள்...

அது, மனுஸ்மிருதியின் திருத்தப்பட்டப் பகுதியாக வருகின்றது. இந்திய அரசியல், நிர்ணயச் சட்டத்தை, இப்போது இந்தியாவை சீரழித்துக் கொண்டிருக்கும் பாசிஸ்ட்டுகள் ஒத்துக்கொண்டதில்லை.

ஆனால், வெட்கங்கெட்ட இவர்கள் அதனை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எது தங்களது கொலை வெறி பாசிசத்தை வளர்க்கப் பயன்படுமோ அதைத் தவறாமல் பயன்படுத்திக் கொள்வார்கள்.

இந்த அடிப்படையில்தான், இப்போது ஜனநாயக வாதிகளாக வேஷம் போடுகின்றார்கள். இவர்களைப் பொறுத்தவரை நமது அரசியல் நிர்ணயச் சட்டம் ஆங்கிலேயர்களுக்கும், காங்கிரசுக்கும் இடையே நடந்த ஒரு ஒப்பந்தம்.

அதனை ஏற்றுக்கொள்ளக் கூடாது. மாறாக, இந்தியாவில் மனுஸ்மிருதி எனும் மனுவின் சட்டங்களை அடிப்படையாகக் கொண்ட சட்டங்களே செயலில் வந்திட வேண்டும், எனப்பேசியும் பல ஆண்டுகளாக இளைஞர்களிடம் பிரச்சாரம் செய்தும் வந்தார்கள்.

ஆனால் ஆர்.எஸ்.எஸ். காரரர்கள் மனுஸ் மிருதியின் சிலபல மாற்றங்களைச் செய்து இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தை "Dustbin" குப்பைத் தொட்டியில் தூக்கிப் போட்டுவிட்டு அந்த இடத்தில் மனுஸ் மிருதியைக் கொண்டு வந்திட வேண்டும் என எழுதிக் கொண்டும், பேசிக் கொண்டு வந்தார்கள்.

ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பை உருவாக்கியவர்களுள் ஒருவரான கோல்வால்கர் மனுஸ்மிருதியின் அடிப்படையில் இந்திய சமூகம் கட்டமைக்கப்பட வேண்டும், அதில் பழைய பெருமையை இந்தியத் திருநாட்டு பெற்றிட வேண்டும். அதில் தலித் ஒரு பிரமாணன் மீது வீழ்ந்தால், அந்தத் தலீத்தை கடுமையாகத் தண்டிக்கும் பொற்காலம் மீண்டும் வர வேண்டும். ஒரு மிலேச்சன் ஆரியர்களின் பார்வையிலிருந்து தூரமாகவே இருக்க வேண்டும். பெண்கள் நிறைய குழந்தைகளைப் பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். என எழுதியுள்ளார். தன்னுடைய "We Our Nationhood Defined" என்ற நூலில் (As Quoted by Front Line : August-4, 2017)

இந்தக் காலம், அதாவது தலீத்கள் கடுமையாக, தங்கள் நிழலுக்காகத் தண்டிக்கப்படும்

காலம், பெண்கள், இழிவாக நடத்தப்படும் காலம், சமுதாயத்தை நான்காகப் பிளந்திடும் காலம், பெண்கள் குழந்தைகளைக் கணக்கின்றி பெற்றுக்கொண்டே இருக்கும் காலம். இவையெல்லாம் இந்தியாவில் வந்தே ஆக வேண்டுமாம். அதுதான் பொற்காலமாம். அதற்காகத்தான் சங்கப் பரிவாரம் உழைத்துக்கொண்டே இருக்குமாம்.

மனித சகோதரத்துவமம் மனுஸ்மிருதியும்

மனுஸ்மிருதி அல்லது மனுவின் சட்டங்கள் மனித சகோதரத்துவத்திற்கு எதிரானது. மனுவுக்கு அறவே ஒவ்வாத ஒன்று உண்டு என்றால் அது மனித சகோதரத்துவம்தான்.

இன்னும் சொன்னால் மனிதர்களை சமமாக நடத்தும் தத்துவங்கள்தாம். அரசியல் நிர்ணயச் சட்டம் அனைவரும் சமம் என அறிவிப்பதால்தான், இவர்களுக்கு அந்த அரசியல் நிர்ணயச் சட்டம் அறவே பிடிப்பதில்லை. இந்த காரணத்திற்காகத்தான் அவர்கள் இஸ்லாத்தையும் வெறுக்கிறார்கள். இஸ்லாம் மனிதர்கள் அனைவரும் சமம், ஒரு தாய்-தந்தையிலிருந்து பிறந்து உலகெங்கும் பரவியவர்கள் எனப் பிரகடனப்படுத்துகின்றது. (அல்குர்ஆன் 4:1)

இஸ்லாம் தாக்கப்படுவதேன், அதன் பிரதிநிதிகளாக வாழும் முஸ்லிம்களைப் பூண்டோடு ஒழிக்க திட்டம் போடுகின்றார்கள், என்பவற்றை விரிவாக விவாதித்த V.T. இராஜசேகர் அவர்கள், இஸ்லாம் இன்னும் மனித சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும் பிரகடனப்படுத்திடும் ஒரு மார்க்கமாக இருப்பதால்தான், அது தாக்கப்படுகின்றது என்கிறார்.

- ஆதாரம் Who Made Indian Muslims Communal. VTR

**மனுஸ்மிருதி அல்லது மனுவின் சட்டங்கள் - தலீத்கள், பெண்கள் இவர்களைப் பற்றி கூறுவதென்ன?**

இந்த உலகில் பெண்கள் ஆண்களை மோகத்தில் விழவைத்து அழித்து விடுவார்கள். இதனால் பெண்ணினத்திலிருந்து ஆண்களுக்குப் பாதுகாப்பே இல்லை. (மனுஸ்மிருதி 2/213)

சூத்திரப் பெண்மணி ஒருவரை திருமணம் செய்து கொள்ளும் ஒரு பிராமணன் தன்னைத் தானே தாழ்த்திக் கொள்கின்றான். அத்தோடு அவன் தன் குடும்பத்தையும், தாழ்த்திக் கொள்கிறான். அவன் ஒழுக்கத்தில் தரம் தாழ்ந்தவன். அவனும் அவனுடைய குடும்பத்தினரும் சூத்திரர்களாக ஆகிவிடுகின்றனர். (3/17- மனுஸ்மிருதி)

நிலை நிறுத்தப்பட்ட ஐதீகங்களின்போது, இத்தகைய பிராமணன் செய்யும் அனைத்து காணிக்கைகளும் கடவுளும் ஏற்றுக்கொள்வதில்லை. (அவனிடமிருந்து) விடைபெற்ற ஆத்மாவும் ஏற்றுக்கொள்வதில்லை. விருந்தினர் அவரிடம் உணவு அருந்த மறுத்துவிடுவார்கள். அவன் மரணத்திற்குப் பின் நரகத்திற்கே செல்வான். (13/18 மனுஸ்மிருதி)

ஷரத் என்ற ஐதீகத்தை நிறைவேற்றியபின் ஒரு பிரமாணனனுக்கு பரிமாறப்படும் உணவை பன்றி, காக்கை, நாய், மாதவிடாயிலிருக்கும் பெண்கள், இவை பார்த்துவிடக்கூடாது. (3/240 மனஸ்மிருதி)

(As Translated and Published in Front Line August-4, 2017)

இப்படிப் பெண்களையும் தலீத்களையும் - பிற்படுத்தப்பட்ட மக்களையும் அர்ச்சனை செய்யும் மனுஸ்மிருதியை சட்டமாக ஆக்கிவிட்டு இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தை குப்பைத் தொட்டிக்குள் வீசி விட்டெறிந்து விட வேண்டுமாம்.

தங்களுடைய வேதங்கள் வழியாகவும், சட்டங்கள் வழியாகவும், சாஸ்திர, சம்பிரதாயங்கள் வழியாகவும் தங்களை இழிவுபடுத்திடவும், அழித்திடவும் நாள் தவறாமல் உழைத்துக் கொண்டிருக்கும், இந்த வருணாஷ்ரமாவாதிகளுடன் தலீத்களும், இன்னபிற பிற்படுத்தப்பட்ட மக்களும் கைகோர்த்து நிற்பது வெட்கங்கெட்ட செயல்.

அவர்கள் தங்கள் தவறுகளை உணர்வார்கள். உண்மையான சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் போதிக்கும் மார்க்கங்களின் பக்கம் திரும்பட்டும், சிந்திப்பவர்களாக இருந்தால்.

**மனுஸ்மிருதியில் மாற்றம்**

மனுவின் விதிகளை சட்டமாகச் சாற்றுவதே மனுஸ்மிருதி!

ஆனால், இன்று ஊரை அடித்து உலையில் போட்டுக் கொண்டிருக்கும் சனாதன வாதிகள் தலீத்களையும், ஏனைய பிற்படுத்தப் பட்டவர்களையும் தங்கள் அணியில், இணைப் பதற்குக் கோடிக் கணக்கில் பணத்தைத் தாரைவார்த்துத் தந்து கொண்டிருக்கிறார்கள்.

பெண்களைப் பற்றி அவர்கள் அதிகமாகப் பீற்றுவதில்லை. ஏனெனில் இன்று சாதனத்தை பிரதமர், மனைவியை கைவிட்டவர். ஒரு பெண்ணுக்குப் பின்னால் போனதால், விசாரணைக்கு உள்ளானவர்.

ஆனால், தலீத்களைப் பற்றி அதிக அக்கறை எடுத்துக்கொள்கின்றார்கள். அவர்களை தங்கள் அணியில் இணைத்துக்கொள்ள.

இதற்கு மனுவின் சட்டங்கள் எதிராக இருப்பதால், மனுவின் சட்டங்களைத் திருத்து கின்ற முயற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக நீண்ட நெடும்காலமாக, ஓர் அமைப்பு உழைத்துக் கொண்டிருக்கின்றது. அதன்பெயர் SANKAR BHRTI சன்கார் பார்த்தி. இது இந்தியாவைக் கபளீகரப்படுத்திக் கொண்டிருக்கும் சங்கப் பரிவாரத்தின் கலாச்சார பிரிவு எனப்பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த சன்ஸ்கார் பார்த்தி கொண்டு வரும் மாற்றங்களை ஏற்க முடியாது. இந்த மாற்றங் களுக்குப் பிறகு மனுஸ்மிருதி, மனுஸ் மிருதி யாக இருக்காது. அது மோடிஸ் மிருதியா கத்தான் இருக்கும் என்கின்றார்கள் மனுஸ் மிருதியைக் காட்டி மக்களை அடிமைகளாக வைத்திட விரும்பும், உயர் ஜாதியினர்.

உண்மை என்னவெனில், இந்த மனுஸ் மிருதியைப் பிராமணர்கள் பலமுறை மாற்றி இருக்கின்றார்கள். தங்கள் வசதிக்கு ஏற்ற வகையிலும், தங்கள் ஆதிக்கம், நோகாத வாழ்வு, போகாத சுகம் இவை நிலைக்கவும்.

ஆக எதிர்வர இருப்பது இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கு ஒருபெரும் ஆபத்து. இதனால்தான் என்னவோ தேசப்பிதா டாக்டர் அம்பேத்கர் அவர்கள் டிசம்பர், 1927-இல் இதை - மனுஸ்மிருதியை நெருப்பிட்டுக் கொளுத்தினார். (Front Line : August-4, 2017)

இப்போது நம் நாட்டுக்கு பேராபத்தை உணர்வோம், தடுப்போம், எழுவோம் ஓரணியில் நின்று! **- எம்.ஜி.எம்.**

# தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்




கடந்த 37 ஆண்டுகளாக, வாடகை வாகனங்களில் பயணம் செய்து, கிராமத்து மக்களிடம் இஸ்லாத்தை கொண்டு சேர்த்தோம். 38 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்தபோதுதான் சொந்த ஊர்தி ஒன்றை வாங்கினோம். அல்ஹம்துலில்லாஹ்.

இதில் முதல் தாஃவா பயணம் 6.8.2017 அன்று தொடங்கியது. இறைவன் துணை நிற்க, துஆ செய்வோம்.

# கவிக்கோ! நினைவுகள் நிலாவட்டம்








நிலாவட்டம் நடத்திய மைசூர் மஹாலில் நடத்திய நெஞ்சில் நிறைந்த கவிக்கோ நிகழ்வில் இசையரங்கம் கவியரங்கம் நூல் வெளியீடு ஆவணப்படம் திரையிடல் நினைவு உரைகள் பேராசிரியர் காதிர் மொகிதீன் கவிவேந்தர் மு மேத்தா கோவை பைஸ் காதிரி கவிஞர் ஜலாலுதீன் கவிஞர் துருவன் கவிஞர் சடையன் அமானுல்லா கவிக்கோ அளித்த நேர் காணல் முனைவர் பஞ்சாங்கம் நூல் வெளியீடு பேராசிரியர் காதர் மொகிதீன் வெளியிட கவி வேந்தர் மு மேத்தா பெற்றுக்கொண்டார் விழா ஏற்படு கவிஞர் ஜலாலுதீன் நிலவட்ட அமைப்பாளர்



# சிரியாவில் நடப்பது உள் நாட்டு யுத்தமா?

21-வது நூற்றாண்டு சந்தித்த போர்களில் பல மனித உயிர்களை குடித்தது சிரியாவின் உள்நாட்டு போர். 7 வது வருடமாக தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் இப்போரில் இதுவரை 465,000 -க்கும் அதிகமான சிரியா மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் காயங்களால் பாதிக்கப் பட்டுள்ளனர். 12 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் அதாவது போருக்கு முந்தைய சிரியாவின் மொத்த மக்கள் தொகையில் பாதி பேர் தங்களுடைய வீடுகளை இழந்து புலம் பெயர்ந்துள்ளன்னர்.

**எப்படி தொடங்கியது யுத்தம்?**

2011-இல் ஏற்பட்ட அரபுலக புரட்சி இரண்டு தலைவர்களை அவர்களின் பதவியில் இருந்து தூக்கி எறிந்தது. துநீசியாவின் தலைவர் சைன் எல் அபிதைன் பென் அலியும் எகிப்தின் தலைவர் ஹோஸ்னி முபாரக்கும் அரபுலகம் சந்தித்த எழுச்சியில் தங்கள் பதவியை இழந்தனர்.

அரபுலக எழுச்சிக்கு ஆதரவாக சுவர்களின் வாசகங்களை எழுதியதற்காக 15 சிறுவர்கள் கைது செய்யப்பட்டு சித்ரவதை செய்யப்பட்டதை தொடர்ந்து சிரியாவிலும் புரட்சி அமைதியான முறையில் ஆரம்பித்தது. இதில் கொடுமையான சித்திரவதைகளுக்கு ஆளான 13 வயது சிறுவன் ஹம்சா அல் கத்தீப் இறந்தான்.

நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்களை கொன்றும் பல பேரை சிறையில் தள்ளியும் போராட்டத்திற்கு எதிர்வினை ஆற்றியது சிரியாவை ஆண்டு கொண்டிருந்த பசர் அல் அசத் அரசு. அரசின் நடவடிக்கை பிடிக்காத சிலரால் Free Syrian Army என்றொன்று 2011 ஜூலையில் உருவாக்கப்பட்டது. சிரியா அரசாங் கத்தை தூக்கி ஏறிய வேண்டும் என்ற நோக்கத் துடன் இப்படை செயல்பட்டதை தொடர்ந்து சிரியாவில் உள்நாடு யுத்தம் மெல்ல ஆரம்பித்தது.

**எழுச்சிக்கான காரணம்:**

மக்களின் சுதந்திரத்தின் மீது தொடுக்கப் பட்ட கெடுபிடிகள், பொருளாதார நெருக் கடிகள் ஆரம்பத்தில் சிரியா அரசாங்கத்திற்கு எதிராக மக்களை சினங்கொண்டு எழ தூண்டி யது. போராட்டக்காரர்களை கண்மூடித் தனமாக ஒடுக்கியத்தை தொடர்ந்து பொதுமக் களின் ஒட்டு மொத்த கோபத்திற்கும் ஆளானது சிரியா அரசாங்கம். துநீசியாவில் வெற்றிகரமாக நடந்த எழுச்சியும், எகிப்தில் ஏற்பட்ட புரட்சியும் சிரியா மக்களுக்கு நம்பிக்கையை தந்தது. பல இஸ்லாமிய அமைப்புகள் அசத்தின் ஆட்சியை கடுமையாக எதிர்த்தன.

30 ஆண்டுகளுக்கு முன் அதாவது 1982-இல் பசர் அல் அசத்தின் தந்தையான ஹாபெஷ் அல் அசத் ஹமா என்ற இடத்தில் முஸ்லிம் சகோத ரத்துவ இயக்கத்தின் மீது இராணுவ தாக்கு தலை நடத்தினார். இதில் 10,000-40,000 பேர் கொல்லப்பட்டனர். பல நகரங்கள் தரைமட்ட மாக்கபட்டது.

2007 முதல் 2010 வரை சிரியாவில் நிலவி வந்த வறட்சியின் காரணமாக 1.5 மில்லியன் மக்கள் சிரியாவை விட்டு மற்ற நகரங்களுக்கு இடம் பெயர்ந்தனர். இதனால் வறுமையின் பிடி கோரமாகியது, சமூகத்தில் குழப்பமும் அதிகரித்தது.

**மற்ற நாடுகளின் தலையீடு:**

2011 இல் ஆரம்பித்த போராட்டம் முதலில் எந்த ஒரு குழுக்களையும் சாராமல் ஆரம்பித் தாலும், பின்னர் அது குழுக்கள் குழுக்களாக பிரிந்து சண்டையிட ஆரம்பித்தது. வெளிநாடு களின் ஆதரவும், அவைகளின் வெளிப்படையான தலையீடும் சிரியாவில் உள்நாட்டு யுத்தம் தொடர்ந்து நடைபெற மிகப்பெரும் பங்காற்றி யது. ISIL (ISIS) என்கிற இயக்கத்தை குறிவைத்து 2014-ல் இருந்து அமெரிக்காவின் தலைமையில் இயங்கி வந்த பல நாடுகளின் கூட்டணி குண்டு களை பொழிய ஆரம்பித்தது.

2013-ல் ரசாயன வெடிபொருட்களை அசத் அரசாங்கம் போரில் பயன்படுத்தியது என்ற குற்றசாட்டை தொடர்ந்து அமெரிக்காவின் அப்போதைய அதிபர் பாரக் ஒபாமா இதனை எச்சரிக்கை கோட்டை (Red Line) சிரியா தொட்டுவிட்டதாகவும், இதனால் தங்களின் தலையீடு இருக்கும் என்று அறிவித்தார்.

2017 ஏப்ரல் 7 அன்று அசத் அரசாங்கத்திற்கு எதிராக முதல் நேரடி தாக்குதலை நடத்தியது அமெரிக்கா. ரசாயன தாக்குதலை எந்த விமான தளத்தில் இருந்து சிரியா ஏவியதாக அமெரிக்கா நம்பியதோ அதே விமான தளத்தை குறிவைத்து 59 Tomahawk Cruise ஏவுகணைகளை ஏவியது அமெரிக்கா.

500 மில்லியன் டாலர் (31837550000 இந்தியா ரூபாய்) பணத்தை செலவிட்டும் 60 போராளிகளை தான் உருவாக்க முடிந்தது என்ற உண்மை வெளியே வந்த தெரிந்த பின், சிரியாவின் கலக குழுக்களை பயிற்சி அளிக்கும் நடவடிக்கையை அக்டோபர் 2015-ல் நிறுத்தி யது அமெரிக்கா.

2017 பிப்ரவரியில் சிமிகி என்கிற அமெரிக் காவின் மத்திய புலனாய்வு முகமை சிரியாவின் வடக்கு பகுதியில் சண்டையிடும் கலகக்காரர் களுக்கு நிதி உதவி செய்வதையும் போர் ஆயுதங் களை அனுப்புவதையும் நிறுத்தியது.

ஆனால் Free Sriyan Army தந்த தகவலின்படி மார்ச் மாதத்தில் மீண்டும் இந்த நடவடிக்கை அதாவது நிதியுதவி குறிப்பிடத்தக்க அளவில் வந்தது என்கிறது.

தீவிரவாத குழுக்களை தாக்குகின்றோம் என்ற பெயரில் செப்டம்பர் 2015-ல் ரஷ்யாவும் சிரியாவில் குண்டுகளை பொழிந்தது. இவர்கள் தீவிரவாத குழுக்கள் என்று குறிப்பிட்டதில் ISIL-வும், மேலை நாடுகளின் உதவியுடன் இயங்கும் கலகக்காரர்களும் அடங்கும். மேலும் அசத்-இன் அரசாங்கத்திற்கு இராணுவ ஆலோச கர்களையும் வழங்கி ஆதரவு தந்தது ரஷ்யா.

லெபனானை மையமாக வைத்து இயங்கும் ஹிஸ்புல்லா அமைப்பு, ஈரான், ஈராக் அரசாங் கங்கள் அசத்-இற்கு ஆதரவு தந்தன. சவூதி அரேபியா, துருக்கி, கத்தார் போன்ற நாடுகள் கலகக்காரர்களுக்கு (அசதிற்கு எதிராக போராடு பவர்களுக்கு) ஆதரவு அளித்தது.

துருக்கிக்கு அருகாமையில் இருக்கும் ஜரப்லஸ்-ஐ ISIL-இடமிருந்து விடுவிக்கவும், குர்திஸ் படைகள் முன்னேறுவதை தடுத்து நிறுத்தவும்

Free Syrian Army-உடன் இணைந்து Euphrates Shield யூப்ரடீஸ் ஷீல்ட் என்ற தாக்குதலை நடத்தியது துருக்கி. ஏனென்றால் சிரியாவின் வடக்கு பகுதி

குர்திஷ் உடைய கட்டுப்பாட்டிற்குள் சென்று விட்டால் துருக்கியில் அதிகமாக வசித்து வரும் குர்து மக்கள் அவர்களுடன் இணைந்து சுயாட் சியை கோரிடுவார்கள் என்று பயந்தது துருக்கி. மார்ச் 2017 இல் துருக்கியின் யூப்ரடீஸ் ஷீல்ட் நடவடிக்கை முடிவுக்கு வந்தது.

சிரியாவில் சண்டையிடும் குர்து போராளி களுக்கு ஆயுதம் வழங்கிட வேண்டும் என்று அமெரிக்கா எடுத்த முடிவை துருக்கிய அதிகாரிகள் எதிர்த்தனர்.

இஸ்ரேலும் தனது பங்கிற்கு சிரியாவின் மீது விமான தாக்குதலை நடத்தியது. 1948- இல் இருந்தே சிரியாவும் இஸ்ரேலும் போர் நடவடிக் கைகளில் ஈடுபட்டு வருகின்றன. எனினும் 1973 -ற்கு பின்னர் இருநாடுகளின் எல்லை பகுதிகள் பெரும்பாலும் அமைதியாகவே இருந்து வருகிறது.



**தற்போதைய நிலவரம்:**

மே 23 முதல் ஜூன் 23 வரை அமெரிக்கா கூட்டுப்படைகள் நடத்திய தாக்குதலில் 472 பொதுமக்கள் இறந்துள்ளனர். இதில் 137 பேர் குழந்தைகள். 2014-க்கு பின் நடத்தப்பட்ட தாக்குதல்களில் இந்த தாக்குதலே பல மனித உயிர்களை குடித்துள்ளது என்கிறது சிரியாவை கண்காணித்து வரும் அமைப்பு. ராக்கா என்ற பகுதியை மையப்படுத்தி இத்தாக்குதல் நடைபெற்றது. யுத்தத்தின் காரணமாக அகதிகளான மக்களை பெருமளவில் துருக்கி, லெபனான் மற்றும் ஜோர்டன் ஆகிய நாடுகள் அரவணைத்துள்ளது. Aljazeera, 18 July 2017

சிரியாவின் கலகக்காரர்களுக்கு ஆயுதங்கள் வழங்கும் நடவடிக்கையை அமெரிக்காவின் அதிபர் ட்ரம்ப் நிறுத்தியுள்ளதாக அமெரிக்கா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ரஷ்யாவுடனான உறவை மேம்படுத்தவே இந்த முயற்சி என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். BBC 20 July 2017

**உள்நாடு யுத்தமா ? ஆயுத வணிகமா?**

2016 ஆம் ஆண்டு நடந்த விசாரணையின் படி, கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து ஒரு பில்லியன் யூரோ மதிப்பிலான ஆயுதங்கள் கடந்த நான்கு வருடங்களில் மட்டும் சிரியாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. பால்கனிலிருந்து அரேபியன் பெனிசுலா மற்றும் சிரியாவை சுற்றியிருக்கும் நாடுகளின் வழி ஆயுதங்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

சிரியாவில் ஐந்து வருடமாக நடந்த உள்நாட்டு யுத்தத்தை மேலும் கொழுந்து விட்டெரிய செய்வதற்கென்று மிக அதிகமான ஆயுதங்கள் சிரியாவிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன என சந்தேகம் கொள்வதாக

Balkans Investigative Reporting Network (BIRN) மற்றும் Organized Crime and Corruption Reporting Project (OCCRP) என்ற அமைப்புகளின் நிருபர்கள் தந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமூக வலைதளங்களில் பதியப்பட்ட வீடியோ மற்றும் புகைப்படங்களை கவனித்ததில் இருந்து கிழக்கு மற்றும் மத்திய ஐரோப்பியா நாடுகளின் ஆயுதங்களும் வெடிபொருட்களும் மேற்கத்திய நாடுகளின் உதவியுடன் சண்டையிடும் Free Syrian Army மட்டும் பயன்படுத்திடவில்லை. ஆயுதங்கள் அன்சர் அல் ஷாம், ஜபத் அல் நுஸ்ரா, மிஷி, அசதிற்கு எதிராக போராடும் குழுக்கள் மற்றும் எமன் போராளிகளின் கைகளுக்கும் அவை சென்றுள்ளன.

கிழக்கு ஐரோப்பா, சர்வதேச மற்றும் உள்நாட்டு விதிகளை மீறி ஆயுதங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்று குற்றம் சாட்டுகின்றனர் அம்னெஸ்டி இன்டர்நேஷனலின் ஆயுத கட்டுபாடு ஆராய்ச்சியாளர் Patrick Wilcken மற்றும் ஐரோப்பிய நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட விசாரணை அதிகாரி Bodil Valero. Theguardian.com 27, July 2016

சிரியாவில் நடந்ததை இனிமேலும் உள்நாட்டு யுத்தம் என்று தான் அழைக்க வேண்டுமா?

சிரியாவின் உள்நாட்டு குழுக்களின் போராட்டம் பல முனைகளில் இருந்தும் தூண்டிவிடப்பட்டுள்ளது. போராட்டகாரர்களுக்கு ஆயுதம் வழங்குதல், பயிற்சி அளித்தல், விமான தாக்குதல் என சர்வாதிகார அமெரிக்கா தனது பங்களிப்பை சிரியாவில் செலுத்தியுள்ளது. அசத்-இற்கு ஆதரவாக கலகக்காரர்களை தாக்குகின்றோம் என்று ரஷ்யாவும் சிரியாவில் தாக்குதலை நடத்திவிட்டது. ஐரோப்பிய நாடுகள் ஆயுதங்களை விற்று ஆயுத வணிகத்தை திறம்பட செய்து விட்டது. மற்ற நாடுகளே சிரியாவின் தலை எழுத்தை தீர்மானித்திட்ட போதிலும் இனிமேலும் சிரியாவில் நடந்ததை உள்நாட்டு யுத்தம் என்று தான் அழைக்க வேண்டுமா?

**- அபூஹாசின்**




# பொய்மையே வெல்லும் ?

தீன தயாள் உபாத்யாயவின் நூறாவது பிறந்த நாளை கொண்டாடும் விதமாக 72 பக்கங்கள் கொண்ட புத்தகத்தை பா.ஜ.க வெளியிட்டுள்ளது.

இதில் இந்தியாவின் மஹாபுருஷ் என்ற அத்தியாயத்தில் இந்தியாவின் முதல் பிரதமர் நேருவின் பெயரையும், கொடியவன் கோட்சேவால் சுட்டுக் கொல்லப்பட்ட அஹிம்சையாளர் காந்தியின் பெயரையும் குறிப்பிடாமல் தவிர்த்துள்ளனர்.

உத்திரபிரதேசத்தில் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான ஒரு தேர்வில் படிப்பதற்காக இப்புத்தகத்தை தயாரித்துள்ளனர். இதில் தேர்ச்சி பெற்று தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் பரிசுகளை யும் பாராட்டுகளையும் பெற உள்ளனர். மாணவர்கள் மனதில் பாசிச நஞ்சை விதைப் பதற்கான ஒரு முயற்சியில் ஆளும் பாரதீய ஜனதா கட்சி இப்படி ஒரு செயல் திட்டத்தில் இறங்கியுள்ளது.

இந்தியாவின் வழிகாட்டிகள் என்ற அத்தியாயத்தில் விவேகானந்தர், பீம் ராவ் அம்பேத்கர், சியாம் பிரசாத் முகர்ஜி, குரு கோவிந்த் சிங், பிஸ்ரா முண்டா, மதன் மோகன் மாளவியா, ஹெட்கேவர், நானாஜி தேஷ்முக், வல்லபாய் படேல், சாவர்கர், ராணி லட்சுமி பாய் ஆகியோரின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன.

“எங்களுடைய கட்சியை சேர்ந்தவர்கள் இப்புத்தகத்தை உத்திர பிரதேசத்தில் உள்ள அனைத்து பள்ளிக்கூடங்களிலும் வழங்கி வருகின்றனர். தலைவர்களின் பெயர்களை தேர்ந்தெடுத்ததில் எந்த வித அரசியலும் இல்லை. இவர்களை போன்ற சிறந்த ஆளுமை களையும் மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்” என்று கூறியுள்ளார் பா.ஜ.க -வின் மாநில செய்தி தொடர்பாளர். ஆகஸ்டு 26 ஆம் தேதி இந்த தேர்வு நடைபெறவுள்ளது. தீன தயாள் உபாத்யாய ஜன்ம சதாப்தி சமரோ சமிதி என்ற அமைப்பு இப்புத்தகத்தை வெளி யிட்டுள்ளது.

ஆசிரியர்களை தேர்ந்தெடுப்பதில் இருந்து மாணவர்கள் எதை படிக்க வேண்டும் என்று தீர்மானிப்பது வரை இந்துத்துவ வாதிகளின் செயல் திட்டம் நடைமுறை படுத்தப்படுகிறது.

மேலும் தகவல்களுக்கு வைகறை வெளிச்சம் ஜனவரி 2017

வந்த “தேசத்தின் பெயரால் கல்வி காவி மயம்” என்ற கட்டுரையை படிக்கவும்.

Times of India July 31, 2017

- அபூஹாசின்



## சமூக நலனில் பெண்கள் பாகம்-4

# இன்றைய பெண்களின் மேலை நாட்டு மோகம்

எல்லாம்வல்ல இறைவன் தன் திருமறை யிலே பெண்களுக்கு உபதேசம் செய்கிறான் 24:31 ஆவது வசனத்தில்...

"தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளு மாறும் தமது கற்புகளைப் பேணிக்கொள்ளு மாறும் நம்பிக்கை கொண்ட பெண்களுக்குக் கூறுவீராக!"

தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுங்கள் என்ற ஒரு அழகான உபதேசத்தை பெண்களுக்கு இறைவன் கூறுகிறான். இதைபோல் ஒரு உபதேசத்தை உலகில் வேறு யாராலும் கூற முடியுமா?

இந்த பார்வை தாழ்த்திக் கொள்ளாமல் நடக்கும் பெண்களாலும், ஆண்களாலும் சமூகத்தில் நிகழும் அநியாயங்களை, தீங்குகளை சொல்லி மாளாது. பலவிதமான சீர்கேட்டிற்கும் முதல் ஆணி வேராக இருப்பது இந்த பார்வை தான். அதனால்தான் இறைவன் முதலில் பார்வையை தாழ்த்திக் கொண்டு நடக்குமாறு உபதேசித்தான்.

வெளியே போகும்போது இந்த பார்வையை மட்டும் நாம் தாழ்த்திக் கொண்டு நடப்போ மேயானால், பலவிதமான தீங்குகள் நடக்காமல் காக்கலாம். முன்பெல்லாம் பெண்கள் தெருவில் போக்குவரத்துகள் குறைவு. அப்படியே தேவைக்கு வந்தாலும், துணைக்கு கூட பெற்றோர்கள் செல்வார்கள்.

ஆனால், இன்று பெண்கள் நடக்கும்போது அவர்களுக்கு குனிந்து நடக்க கற்றுக் கொடுக்கும் சூழ்நிலை இருக்கிறது. முன்னோர்கள் சொல்லி தந்த பாடங்களை அன்று பெண்கள் கேட்டு நடந்தார்கள். இன்றைய பெண்கள் பெற்றோர்கள் சொல்லும் விஷயங்களை கூட கேட்கும் சகிப்புத் தன்மை இல்லாத பெண்களாக இருக்கிறார்கள்.

பெண்களை "பூ"விற்கு ஒப்பாக சொல்வார்கள். இனிப்பான திண் பண்டங்களை பத்திரமாக மூடி வைக்காமல் இருந்தால் "ஈ" "எறும்பு" அரித்து விடும் என்பார்கள்.

சந்தையில் திறந்து இருந்து "ஈ" மொய்க்கும் பண்டங்களை விட மூடி வைத்திருக்கும் பண்டங்களுக்கே மதிப்பு அதிகம். நோய்கள் அண்டாது.

அதேபோல்தான் பெண்களும், அலங்காரங் களை அதிகமாக அள்ளிப்பூசிக் கொண்டு, தன் அங்கங்களை வெளியே காட்டிக் கொணடு அடக்கம் இல்லாமல் திரியும் பெண்களை விட, அடக்கமாக வெட்கம் பேணி எந்த அலங்காரமும் செய்யாமல், இருக்கும் அழகையும் மறைத்துக் கொண்டு அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக்கும் கட்டுப்பட்டு நடக்கும் பெண்களுக்கு சமூகத்தில் கண்ணியமும் நற்பெயரும் அதிகமாகவே கிடைக்கும்.

**நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்**

"முதல் பார்வை உன்னுடையது, 2-வது

பார்வை ஷைத்தான் உடையது என்று" நபிகளாரின் மனைவி அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள் துஆ செய்தார்கள்.

"என் இறைவா! என்னை என் கணவருக்கு மட்டும் 18 வயது குமரியாக காட்டு, மற்ற ஏனைய ஆண்களுக்கும் 80 வயது கிழவியாக காட்டு" என்று.

பாருங்கள் இவரது பெண் உணர்வை ஈமானிய ருசி-யை.

இன்றைய பெண்களின் நிலையை எடுத்துக் கொண்டால், இந்த துஆவை விரும்பாதவர் களாகவே 75% பெண்களும் இருக்கிறார்கள்.

நம் நாட்டில் நமக்கு முந்தைய காலத்துப் பெண்கள் ஃபர்தா அணியாமல் இருந்த போதிலும் கூட, வீட்டிலும் சரி, வெளியிலும் சரி அந்நிய முகத்தை எட்டிப் பார்க்காத பெண்களாக இருந்தார்கள். முக்காடுகள் இல்லாமல் வெளியே வர மாட்டார்கள். ஆனால், இன்று பல்லாயிரம் விதங்களில் ஃபர்தாக்கள் வந்தபோதும், ஃபர்தா அணிந்த நோக்கம் மாண்டு போய்விட்டது. இதனால்தான் ஹிந்தியிலே ஒரு பொன்மொழி சொல்வார்கள்.

**"பாஹர்கே ஃபர்தா ஹே, அந்தர் கே நஹி ஃபர்தா"**

அதாவது, "வெளியே இருக்கிறது ஃபர்தா. ஆனால், ஃபர்தா உள்ளே ஃபர்தா இல்லை" என்று.

இன்றைய பெண்கள் எதற்காக "ஃபர்தா" அணிகிறோம் என்பதை மறந்துவிட்டு, எப்படி எப்படி எல்லாம் ஃபர்தா அணியலாம் என்றே கவனித்து வருகிறார்கள். சிலருக்கு கருப்பு நிற ஆடை அணிந்தால் உடலுக்கு ஒத்துக் கொள்வதில்லை. அதனால் சில வண்ண ஆடைகளை அலங்காரம் கவரும் வகையில் இல்லாமல் அணிகிறார்கள். இதில் ஃபர்தாவும் அடங்குகிறது.

இறைவன் தன் திருமறையில் கூறுகின்றான் (24:31)

"தமது முக்காடுகளை தமது மார்பகங்கள் மீது போட்டு கொள்ளட்டும்" என்று தெள்ளத் தெளிவாக, பொட்டில் அறைந்தால்போல் கூறிய பிறகும், பல ஆயிரம் செலவும் செய்து ஃபர்தாவும் (இங்கே எளிமை சிதைக்கப்படுகிறது. எதற்காக ஃபர்தா அணிகிறோமோ அந்த நோக்கம் உடைத் தெறியப்படுகிறது) வாங்கி, உள்ளே அணிந்திருக்கும் ஆடைகளை விட ஃபர்தாவில் அலங்காரமும் அதிகமாகவே செய்து அணிகிறார்கள். இவ்வளவு செலவு செய்து ஆடை வாங்கியவர்களுக்கு முக்காடையும் பெரிதாக வாங்க தெரியவில்லை. வாங்கினாலும் அது, ஒழுங்காக மேலே கிடப்பதில்லை. அதை தலையிலே ஆயிரம் சுற்றுகள் சுற்றுகையில் அதன் நீளம் தீர்ந்து விடுகிறது. இங்கிருந்தே ஆரம்ப ஆகிறது இவர்களின் மேலை நாட்டு மோகம்.

மேலை நாடுகளில் வயிற்றுப் பிழைப்பிற்காக முன்பெல்லாம் ஆண்கள் மட்டுமே சென்றுக் கொண்டு இருந்தார்கள். இன்று பெண்களும் செல்ல ஆரம்பித்த பிறகு, விரல் விட்டு எண்ணும் ஒரு சிலரைத் தவிர அதிகம் பேர் மேலை நாட்டு மோகத்திலேயே விழுந்து விட்டார்கள். அங்குள்ள பெண்கள் போடும் முக்காடுகளை சில நேரங்களில் தொலைக்காட்சியில் பார்த்து இருப்போம். ஒட்டக தீமில்போல் பின் தலை கட்டி இருப்பார்கள். அவர்கள் போட்டிருக்கும் முக்காடுகளை, இறைவன் மறைக்க கூறியதை மறைக்காத முக்காடுகளாகவே இருக்கும்.

இவை இறைவனுக்கும், இறைத் தூதருக்கும் மாற்றமாக இருந்தாலும் கூட பரவாயில்லை. மேலை நாட்டு மோகமோ எங்களை பற்றிக் கொண்டது என்று நடத்தினார்கள்.

இறைவன் கூறுகிறான்

"தங்கள் அலங்காரங்களை மற்றவர்களிடம் அவர்கள், வெளிப்படுத்த வேண்டாம்" (24:31)

ஆனால் இன்று அதிகமான பெண்கள் தங்கள் உதடுகளில் உதட்டு சாயங்களை பூசிக் கொண்டும், கண்களிலும், இடைகளிலும் வெளியே தெரியும் படி விதவிதமான "கரு மை" களை பூசிக்கொண்டும், மேலும் வாசனை திரவியங்களைபூசிக்கொண்டும்மேலேஃபர்தாவையும் மாட்டிக் கொண்டு நடக்கிறார்கள். ஒரு வேளை இறைவனின் பார்வையில் அலங்காரமாக தெரிபவை, (இந்த) இறைவனுக்கே பாடம் கற்பிக்கும் இந்த பெண்களுக்கு அலங்காரமாக தெரியவில்லையோ என்னவோ?! (நவூதுபில்லாஹ்)

இதுவும் கூட மேலை நாட்டு இறக்குமதி தான்.

இன்னும் பார்த்தோமேயானால், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்

பிறந்த நாள் கொண்டாட இஸ்லாத்திலே எள் நுனி அளவிற்கு கூட இடம் இல்லை. ஆனால், இவர்களோ வளர்ந்துவிட்ட நாகரீ கத்தின் பெயரால் வந்த Whatsapp, Facebook-யிலும் கணவன் மனைவிக்கும், மனைவி கணவ னுக்கும் யூத கலாச்சார அடிப்படையில் "பிறந்த நாள் வாழ்த்துகளை பலர் பார்வைக்கும் படும் படியாகவும் கூட பரிமாறிக் கொள்கிறார்கள். இதனை பார்க்கும் மற்ற மக்கள் என்ன செய் கிறார்கள் எல்லா சட்டமும் தெரிந்த இவர்களே இதெல்லாம் செய்யும்போது நாமும் செய்தால் என்ன தப்பு ? என்று தவறுக்கு அவர்கள் வித்திட இவர்கள் நீரூற்றி வளர்க்கிறார்கள். மேலை நாட்டு மோகத்தில்

அதுமட்டுமின்றி அங்குள்ள பள்ளிகளிலே தன் குழந்தைகளை சேர்த்து Birthday என்று கூறி கேக் வாங்கி கொடுத்து மாறி மாறி யூத வாழ்த்துகளையே பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுத்து, குழந்தைகளை இந்த வழிமுறை யிலேயே வார்த்தெடுக்கிறார்கள். அதை இங்கே வந்து பெருமையாக சொல்லி பீற்றியும் கொள்கிறார்கள் மேலை நாட்டு மோகத்தில்.

இதைதான் இறைவன் கூறுகிறான்

"வசதி வாய்ப்புகளை கொடுத்து சிலரை சோதிப்பேன்" என்று **(6:165)**

இதே வசனத்தில் இறுதியில், அவன் தண்டிப்பதையும், மன்னிப்பதையும் பற்றி கூறுகிறான்

எனவே நாம் மேலே நாட்டில் இருந்தாலும் சரி, கீழே நாட்டில் இருந்தாலும் சரி, நமது சட்டங்களை மற்றவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டுமே தவிர, மாற்றார் கொள்கையில் வீழ்ந்து இறைவன் நம்மை படைத்த நோக்கத்தை பாழடிக்கும் வகையில் வாழ்ந்து விடக்கூடாது.

அது மட்டுமின்றி "அந்நியரோடு தனிமையில் இருப்பதோ, பயணிப்பதோ" இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆனால் அன்றைய பெண்கள் கணவன் மார்கள் வெளிநாட்டில் இருந்தால், ஒரு கடிதம் எழுதினாலும் கூட அது வந்து கிடைக்க சில மாதங்கள் ஆகுமாம். அந்த நிலையிலும் பெண்கள் கணவர் வீட்டோடும், உறவினறோடும் சந்தோஷ மாக கூட்டு கூடும்பத்தோடும் உறவை பேணி வாழ்ந்தார்கள்.

இன்றைய கல்வி அதிகம் கற்ற பெண்களும் கூட திருமணம் முடிந்த கையோடு கணவனுக்கு நம்மை அங்கே கூட்டி செல்ல முடியுமா? அங்கு



சென்றால் சமாளிக்கும் அளவிற்கு வருமானம் இருக்கிறதா எதையும் பற்றி யோசிக்காமல் பொறுமையை இழந்து கணவனை போட்டுப் படுத்தும் பாட்டில் அவனது கண் பிதுங்குகிறது.

உடனே அங்கே அழைக்கிறான். யாரோடு செல்கிறார்கள் (சிலர்) கணவனின் நண்பரோடு, அல்லது அங்கு செல்லும்போது வேறு ஏதோ ஒருவரோடு என்ன அவசியம் வந்தது, இவர் களுக்கு வெளிநாட்டு மோகம். இங்கு குடும்பத் தோடு ஒத்துப்போகும், விட்டுக் கொடுக்கும் மனம் இல்லாமை.

அங்கு போய் கணவனை பல கஷ்டங் களுக்கும் ஆளாக்குகிறார்கள். அதன்பிறகு பிரசவம் என்று வந்து விட்டால் தன் தாயையும் அங்கே வரவழைத்து அப்படியே தன் குடும்பத் தையும் சுருக்கி கொள்கிறார்கள். சில பெண்கள் மேலே நாட்டு மோகத்தில்.

முன்பெல்லாம் மகளை கட்டிக் கொடுத்த மருமகன் முகத்தை கூட பார்க்க மாட்டார்கள்.

அருகில் நின்று பேசவும் மாட்டார்கள். அன்றெல்லாம் அதைப் பார்க்கவே நன்றாகத்தான் இருந்தது.

இன்று இப்படியே அங்கு செல்பவர்கள், மருமகன் மகன் போலத்தான் என்று கூறி ஒரே வாகனத்தில் சுற்றிப் பார்க்க செல்வதெல்லாம் சகஜமாகிவிட்டது.

இன்றைய மேலே நாட்டு மோகத்தில், இதற்கெல்லாம் இஸ்லாத்தில் இடம் உண்டா? இல்லையா? என்று யோசிக்கக் கூட நேரம் இல்லாமல் ஆகிவிட்டது. இன்றைய அவசர உலகில்.

இன்னும் உலக செல்வங்களை பெருக்கும் அடிப்படையில் தங்கள் கணவன் மார்கள் லோன் (வட்டியுடன் சேர்த்து) எடுக்கிறார்கள். கிரெடிட் கார்டு மூலம். இதை இந்த பெண்களே கண்டுக் கொள்வதே இல்லை. ஆனால், ஆசியா அம்மையாரைப் பாருங்கள்.

"என்னுடைய இறைவனே! எனக்கு சொர்க் கத்தில் ஒரு வீட்டைக் கட்டுவாயாக! இன்னும் என்னை ஃபிர்அவ்னின் கொடுமையிலிருந்து காப்பாற்றுவாயாக" என்று பிரார்த்தித்தார்கள். (66:11)

இவ்வாறு ஃபிர்அவ்னின் மனைவி ஆஸியா கூறியதால் அவரை நம்பிக்கை கொள்வோருக்கு அல்லாஹ் முன்னுதாரமாகக் கூறுகிறான் (66:11)

இந்த பெண்மணி எவ்வளவோ வசதி வாய்ப்பு கள் இருந்தும், கணவனின் தவறை விட்டும் இறைவனிடம் பாதுகாவல் தேடினார்கள். ஆனால் இன்று வெளிநாட்டு மோகத்தால் அங்குள்ள வசதிகளை விட்டுக் கொடுக்க மனமில்லாமல் கணவன் செய்வது தவறு என்று தெரிந்தும் உலக ஆசை, ஆடம்பரத்திற்காக கற்ற பெண்களும் துணை போகிறார்கள்.

இன்னும் சில பெண்கள் வெளிநாடுகளுக்கு சென்று வந்து விட்டால், நாம் முன்னால் எப்படி, எங்கு இருந்தோம் என்ற நினைப்பையே மறந்து, பெருமையின் உச்சத்தில் ஏறி நின்றுவிட்டு தன் ஊரையும், உறவையும், நட்பையும் எட்டிப் பார்த்துவிட்டு செல்கிறார்கள். கணவர் அங்கே பிழைக்க சென்று இருக்கிறார். இறைவன் தமக்கும் ஒரு வாய்ப்பை தந்து இருக்கிறான் என்ற கனிவான எண்ணம் இல்லாமல்.

இறைவன் கூறுகிறான்

"வீண் பெருமைக் காரர்களை இறைவன் நேசிப்பதில்லை" (16:23)

என்று தங்கள் குழந்தைகளுக்கு உறவுகளை சொல்லிக் கொடுக்க தவறுகிறார்கள். மேலே நாட்டின் தன்னோடு இருப்பவர்களையே உறவினர்கள் போல் கற்றுக் கொடுக்கிறார்கள். மேலே நாட்டு மோகத்தால் சில ஆண்களும், பெண்களும்.

எது எப்படியோ எங்கு இருந்தாலும் ஒருநாள் நாம் பிறந்த இடத்திற்கு வந்தாக வேண்டும். நம்மைப் படைத்தவனிடம் சென்றாக வேண் டும் என்ற எண்ணத்தில் இந்த பெருமை, உலக மோகம், எல்லாம் களைந்து, நாம் படைக்கப் பட்டதன் நோக்கம் உணர்ந்து, அல்லாஹ்வை அஞ்சி, பணிந்து, நபி (ஸல்) வழி நடந்து நல்லவர் களாய் வாழ்ந்து இரு உலக வெற்றியையும் பெற இறைவன் உதவுவானாக! ஆமீன்.

– நாதிரா அஸ்ரஃபியா

## சிறுமியை கற்பழித்த ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரகர்

அருணாச்சலபிரதேசத்தில் சிறுமியைகடத்தி சென்றுகற்பழித்த குற்றத்திற்காக ஆர்.எஸ். எஸ்அமைப்பை சேர்ந்த பிரச்சாரக் ஒருவனைஆகஸ்ட் 22ம் தேதிகாவல்துறையினர் கைது செய்துள்ளனர். 43 வயதாகும் நரேந்திரகுமார் சிங்என்பவன் ஆர்.எஸ்.எஸ்அமைப்பில் பிரச்சாரக் ஆகஇருந்து வருகிறான். இவன் 9ம் வகுப்பு படிக்கும் ஒருசிறுமியைகடத்தி சென்றுகற்பழித்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டுள்ளான்.

ஆகஸ்ட் 18ம் தேதிதனது காரில் கடத்தி சென்றுகாரில் வைத்தேகற்பழித்தஇந்தகயவன் மீண்டும் அந்தசிறுமியைமிரட்டி ஆகஸ்ட் 20ம் தேதிவரச்சொல்லி மிரட்டியிருக்கிறான். இதை வெளியில் யாருக்கும் சொல்லக்கூடாது என்றும் மிரட்டியுள்ளான். https://www.northeasttoday.in/rss-pracharak-arrested-for-raping-a-minor-girl-in-arunachal/

# அன்பகத்தின்

## அன்பான வேண்டுகோள்!

**அன்பார்ந்த வாசகர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)**

**எமது இஸ்லாமியப் பிரச்சாரப் பணிகள் 37 ஆண்டுகளைக் கடந்து, 38 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றன. அல்ஹம்துலில்லாஹ்.**

ஒரு நீண்ட நெடும்காலம் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும், எங்கள் பிரச்சாரங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. அல்லாஹ், எங்கள் வழி பல பிரபல்யங்களுக்கு, நேர்வழியைக் காட்டினான் அல்ஹம்துலில்லாஹ்.

அப்படி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு இஸ்லாத்தின் செயல்முறைகளையும் இஸ்லாத்தின் அனைத்துப் பகுதிகளையும் கற்றுத் தருவதற்கென மூன்று கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளோம். அல்ஹம்துலில்லாஹ்.

இந்த மூன்று நிறுவனங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் மார்க்க கல்வியை கற்று சென்றுள்ளார்கள். அவ்வாறு நிறுவப்பட்ட மூன்றாவது கல்விக்கூடமே அன்பகம். அதுவும் தன் 10 ஆம் ஆண்டை நிறைவு செய்கின்றது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கல்வி கற்றுச் சென்றிருக்கின்றார்கள். அன்பகம் கடந்த 10 ஆண்டுகளாக ஒரு வாடகைக் கட்டடத்தில் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதையும் அடிக்கடி மாற்றிட வேண்டிய நிலை.

**இன்ஷா அல்லாஹ்** அதனை ஒரு சொந்தக் கட்டடத்திற்கு மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதற்கு உங்கள் நிதி உதவிகளை தாராளமாக வழங்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

**அல்லாஹ் உங்களுக்கு அளப்பரிய கூலிகளை வழங்கிடப் போதுமானவன்.**

இவண்,

**மு. குலாம் முஹம்மது,** பேராசிரியர் **இல்யாஸ் ரியாஜி**

ஹாஜி. **அப்துல் ரவூஃப்**

**செக், டி.டி. அனுப்புவோர்**

**DARUL ISLAM FOUNDATION TRUST**

என்ற பெயருக்கு எடுத்து பின்வரும் முகவரிக்க அனுப்பவும்

51/1, மண்ணடி தெரு, 4-வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை - 600 001.

website : www.darulislam.in, Email : darultrust@yahoo.com,

Please draw your cheques / **DD in Favour of DARUL ISLAM FOUNDATION TRUST**

**Canara Bank A/c. 1287101017301** Branch St.Mary's Road, R.A.Puram, Chennai.

and send to : 52/1, Mannadi Street, 4th Floor, Room No.7, Mannadi, Chennai - 600 001.

**Mobile : 81481 29887,** Email : darultrust@yahoo.com, website : www.darulislam.in

**2014** நாடாளுமன்ற தேர்தலின்போது, பீகாரில் ஒரு குண்டு வெடிப்பை நடத்தினார்கள், சங்கப் பரிவார தீவிரவாதிகள். இதனை விரிவாக வைகறை வெளிச்சம் இதழில் வெளியிட்டிருந்தோம் அதன்மூலம் அதன் நாடாளுமன்ற தேர்தலில் அமோகமாக வெற்றி பெற்றார்கள்.

*2014*-இல் குண்டு வெடிப்பையும் பாரதீய ஜனதா கட்சியின் வெற்றியையும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பதை தவிர வேறொன்றும் செய்திட இயலவில்லை நிட்டீஸ் குமாரால்.

ஆனால், அப்போதுதான் அவர், பாரதீய ஜனதா கட்சியின் கூட்டணியிலிருந்து வெளியே வந்திருந்தார். *2013* வரை அவர் பாரதீய ஜனதா கூட்டணியின் சேர்ந்து தான் முதல்வர் பதவியைத் தக்க வைத்தக் கொண்டிருந்தார்.

*2013*-இல் நரேந்திரமோடியை பிரதம அமைச்சருக்கான வேட்பாளராக அறிவித்தவுடன், தான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை எனக்கூறி வெளியே வந்தார். தொடர்ந்து நாடாளுமன்ற தேர்தல் வந்தது. நாம் மேலே குறிப்பிட்டதைப் போல் குண்டு வெடிப்புகளை நடத்தி அதன்மூலம் ஆட்சியை மத்தியில் ஆட்சியைப் பிடித்தார்கள், பாரதீய ஜனதா கட்சியினர்.

குண்டு வெடிப்புகளையோ, ஒரு கட்டடத்தில் தான் கூட்டணி சேர்ந்ததைப் பயன்படுத்திக்கொண்டு நாடாளுமன்ற தேர்தலில் அதிகமான சீட்டுகளைப் பிடித்ததையோ நிட்டிஸ் குமாரால் தடுத்திட இயலவில்லை. ஆனால் தன்னையொரு மதச் சார்பற்ற மனிதரைப்போல் காட்டிக் கொண்டார்.

பாரதீய ஜனதா சங்கப் பரிவாரத்தினர், இவர்களை காலமெல்லாம் - இடைவெளியில்லாமல் எதிர்த்து வருபவர் லாலு பிரசாத் யாதவ் அவர்கள். இவர் பீகாரில் இரண்டுமுறை முதலமைச்சராக இருந்து ஆட்சி செய்தவர். இந்த லாலு பிரசாத் யாதவ்வுடன் கூட்டுச் சேர்ந்தான் நிட்டிஷ்குமார். *2015* ஆம் ஆண்டில் ஐந்தாவது முறையாக முதல்வர் பதவியை பிடித்தார்.

**2015 பீகார் தேர்தல்**

லாலு பிரசாத் யாதவ் அவர்கள் நிட்டிஷ் குமார் காங்கிரஸ் கட்சி ஆகியவற்றை அணி சேர்த்துக் கொண்டு, ஒரு பெரும் கூட்டணியை உருவாக்கினார்கள். இந்தக் கூட்டணியை பெரிய அளவில், எதிர்த்தது பாசிச, பாரதீய ஜனதா கட்சி.

*2015* தேர்தலின்போது பிரதமர் மோடி பலமுறை பீகார் மாநிலம் வந்தார். தேர்தல் பிரச்சாரத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தினார்.



எந்த அளவுக்கு நரேந்திர மோடி பீகார் தேர்தலில் கவனம் செலுத்தினார், என்றால் மோடியா? - லாலுபிரசாத்தா? என்ற அளவில் தேர்தல் தனிப்பட்ட சண்டைபோல் காட்சித் தந்தது.

முடிவில், மோடியும், பாரதீய ஜனதா கட்சியும் மண்ணைக் கவ்வியது. "BJP Eats Duat" - என்றுதான் அப்போது இந்து நாளிதழ் தேர்தல் முடிவுகளைச் சொன்னது.

இந்நிலையில் 243 சட்ட மன்ற உறுப்பினர் களைக் கொண்ட பீகார் மாநிலத்தில் லாலு பிரசாத் 80 இடங்களை வென்றார். நிட்டிஷ் குமார் 71 இடங்களைப் பெற்றார். காங்கிரஸ் 27 இடங்களைப் பெற்றது. நித்திஷ் 5ஆவது முறையாக பீகார் முதலமைச்சராக ஆனார்.



லாலு பிரசாத் அதிகமான இடங்களைப் பெற்றிருந்தாலும் முதலமைச்சர் பதவியை நிட்டிஷ் குமாருக்கு விட்டுக் கொடுத்தார்.

லாலு பிரசாத் மீது சில தடைகள் இருந்ததால் அவர், பதவி ஏற்க இயலவில்லை. அவருடைய மகன் தேஜேஷ்வி யாதவ் துணை முதல்வர் ஆனார்.

பீகாரில் அமைந்த பெரிய வெற்றியில் உற்சாகம் பெற்ற நிட்டிஷ்குமார். இனி இந்தியா முழுவதும் இதுபோன்ற கூட்டணிகள் அமைக் கப்படும் என்றும், மோடியையும் பாரதீய ஜனதா கட்சியையும் இதுபோல் நாடெங்கும் வீழ்த்திக் காட்டுவோம் என்றும் சண்டமாருதம் அடித்தார்கள்.

**துரோகத்தின் தொடக்கம்**

மோடி அரசு, நிட்டிஷ்குமாரை ஒரு பக்கம் பேரத்தின் மூலம் கையகப்படுத்திட முயற்சி செய்தது. இன்னொரு பக்கம் மிரட்டிக் கொண்டே இருந்தது. அதற்கு 2014 ஆம் ஆண்டு நடந்த ஒரு கொலையில் நிட்டிஷ்குமாருக்கு இருந்த தொடர்பை பயன்படுத்திக் கொண்டது.

இந்தக் கொலை வழக்கின் விசாரணை விரைவில் தொடங்க இருக்கின்றது. நித்திஷ் குமாரின் தலைமேல் தொங்கும் கத்திபோல் இருந்து கொண்டிருந்தது. ஆதாரம் பிரண்ட் லைன் ஆகஸ்ட் 18, 2017

இதுவல்லாமல் நிட்டிஷ் குமார் தான் செய்த துரோகத்திற்கு, நித்திஷ்குமார் தன்னை நம்பி முதலமைச்சர் பதவியை ஒப்படைத்த லாலுவைப் பற்றிச் சொல்லும் எந்தச் செய்தியும் உண்மையாகத் தெரியவில்லை.

**நித்திஷ் - லாலுபிரசாத்-ஐ பிரிந்ததற்குக் கூறும் காரணங்கள்**

லாலு பிரசாத் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன என்பது ஒன்று. ஆனால், நித்தீஷ் 2015 தேர்தலுக்காகக் கூட்டணி வைத்திடும்போது லாலு பிரசாத் மீது ஊழல் குற்றச்சாட்டு இருந் தது. தண்டனையும் பெற்றிருந்தார். இப்போது மேல் முறையீடு செய்திருப்பதால்தான் வெளியே இருக்கின்றார். இல்லையேல் சிறையில் இருந் திருப்பார்.

ஆக, அன்று 2015-இல் தெரியாத ஊழல் இப்போது திடுதிப்பென எப்படித் தெரிந்தது. லாலுபிரசாத் மேல் ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்து கொண்டிருக்கும்போது, இன்னும் சொன்னால் அவர் தண்டனையின் கீழ் இருக்கும்போதுதான் அவர் தேர்தலில் நித்திஷ்

குமாரைவிட அதிகமாக இடங்களை வென்றார். ஆனாலும் முதலமைச்சர் பதவியை விட்டுத் தந்தார். லாலு நினைத்திருந்தால் மகனை முதலமைச்சர் ஆக்கி இருக்கலாம்.

ஆனால் துரோகியாகிவிட்டார் நித்திஷ். அடுத்து நிட்டிஷ்குமார் சொல்லும் குற்றச்சாட்டு. லாலுபிரசாத்-இன் மகன் ஊழலில் ஈடுபட்டார். அவருக்கெதிராக மத்திய புலனாய்வுத் துறை வழக்குப் பதிவு செய்திருக்கின்றது. அதற்கு லாலு பிரசாத்-இன் மகன் தேஜேஷ்வி யாதவ் குற்றாசட்டிலுள்ள ஒவ்வொரு வரிக்கும் காரணம் சொல்லிட வேண்டும். இதுவும் ஏற்றுக்கொள்ள முடியாத காரணம்.

ஏனெனில் இந்த மத்தியப் புலனாய்வுத் துறையின் - குற்றப் பத்திரிகையே நித்திஷ் - மோடி இவர்களின் ஏற்பாடுதான். இந்தக் குற்றப் பத்திரிகையைக் காட்டி வெளியே வந்த விடு என பரிந்துரைத்ததே பாசிச பா.ஜ.க. தான்.

மத்திய புலனாய்வுத் துறையின் குற்றப் பத்திரிகை, லாலு பிரசாத்-இன் மகன் தேஜேஷ்வி யாதவின் மீது எந்தக் குறிப்பிட்ட குற்றச் சாட்டையும் சொல்லிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதனால்தான் அதில் நான் எதுவும் சொல்வதற்கில்லை என லாலுவின் மகன் தேஜேஷ்வி யாதவ் பதில் சொல்லி இருக்கின்றார்.

இப்படிப் பொத்தாம் பொதுவாக ஒரு குற்றச் சாட்டை சொல்கின்றது?. மத்திய புலனாய் வுத்துறை. அதனால் மத்திய புலனாய்வுத் துறையில் எந்தக் குறிப்பிட்ட குற்றச்சாட்டையும் கண்டுபிடிக்க இயலவில்லை என்பதே உண்மை.

இந்த உண்மையை வைத்துப் பார்த்திடும் போது, மத்திய புலனாய்வுத் துறையே (CBI) மோடி அரசு தவறாகப் பயன்படுத்திக் கொண்டி ருக்கின்றது என்ற உண்மைப் புலப்படும்.

இன்னொரு பக்கம் நித்திஷ்குமாருக்கும், மோடிக்கும், லாலுபிரசாத் யாதவ் - இன் மகன் தேஜேஷ்வி யாதவ் ஒரு பெரும் வெறுப்பு, பகை. காரணம், தேஜேஷ்வி யாதவ் ஒரு சிறந்த அரசியல்வாதியாகத்தலையெடுத்து வருகின்றார். மக்கள் செல்வாக்கு அவருக்குப் பெருகி வருகின்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக பாசிச எதிர்ப்பில் தந்தை லாலு பிரசாத் யாதவைபோல் முன்னணியில் உறுதியாக நிற்கின்றார். (ஆதாரம் பிரண்ட்லைன் ஆகஸ்ட் 18, 2017)

## ஜனநாயகக் கேலிக்கூத்து

2015 பீகார் சட்ட மன்ற தேர்தலில், நித்திஷ் குமாரும், லாலுபிரசாத் யாதவும் வைத்தக் கூட்டணி பாசிச பரிவாரங்களுக்கு எதிரானது என்பதால்தான் மக்கள் அமோகமாக வாக்களித்தார்கள்.

முஸ்லிம்கள், தங்கள் வாக்குகளை ஒன்றிணைத்து ஒருமுகமாக மகா கூட்டணிக்கு தந்தார்கள். தேர்தலில் நின்ற முஸ்லிம் வேட்பாளர்கள், அமோகமாக வெற்றி பெற்றார்கள். இவர்கள் இன்று விரக்தியின் விளிம்பில்.

அதேபோல்தான் யாதவ் சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் இதர முஸ்லிம்களுக்கும் சமுதாயத்தவர்களுக்கும், 30 சதவிகிதத் திற்குமேல் வாக்குகள் இருக்கின்றன.

இந்த வாக்காளர்களின் முதுகில் ஒட்டு மொத்தமாக குத்தி இருக்கின்றார் நித்திஷ் குமார் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள.

ஜனநாயகம் ஒரு கேலிக்கூத்து என்பதற்கு பீகாரில் நடந்த நிகழ்வுகள் ஓர் எடுத்துக்காட்டு. ஒரு தனி மனிதன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, பாசிசபரிவாரத்திற்கு எதிராகப் போடப்பட்ட வாக்குகளை அதற்கு பதவியையும், பலத்தையும் தரும் வாக்கு களாக மாற்றியுள்ளார். பீகார் மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் பதவியில் இருக் கின்றார்கள்.

நித்திஷ்குமார் தனக்கு தைரியமிருந்தால் சட்டசபையைக் கலைத்துவிட்டு மக்களைச் சந்தித்திருக்க வேண்டும். இதனை அனை வரும் வலியுறுத்துகின்றார்கள். ஆனால் ஜன நாயகமே என்ற கேலிக் கூத்தில் இதெல்லாம் நடக்காது. சூழ்ச்சியும், துரோகமுமமே வெல்லம்.

– எம்.ஜி.எம்.




# மோடி இந்தியாவின் பிரதமரா அல்லது பிஜேபிக்கு பிரதமரா நீதிமன்றம் கேள்வி

**நீங்கள்கலவரக்காரர்களிடம் சரணடைந்து விட்டீர்கள், இப்படி தான் நீதிமன்றம் ஹரியானா அரசை நோக்கி கடுமையாக சாடியது.**

தேரா சச்சா சௌதா அமைப்பின் தலைவர் ராம் ரஹீம் சிங்தன்னுடைய பெண் சீடர்களை பாலியல் பலாத்காரம் செய்த வழக்கில் குற்ற வாளி எனஅறிவிக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து பெரியகலவரம் மூண்டது. இதில் 30 பேர் கொல்லப்பட்டனர். 200க்கும் மேற்பட் டோர் காயமடைந்தனர்.

இப்படி கலவரம் நடக்கக்கூடும் என தெரிந்தும் ஹரியானஅரசுகலவரக்காரர்களை ஒடுக்க எந்த நடவடிக்கையையும் மேற் கொள்ளவில்லை. கலவரக்காரர்கள் பல்வேறு விதமானஆயுதங்களை தீர்ப்புக்கு முதல் நாள் அன்றே சேர்க்க தொடங்கிவிட்டனர்.

மேலும் அவர்களிடம் சட்ட விரோதமான பயங்கரவாத ஆயுதங்கள் பலவும் இருந்தன. ஏ.கே.47 போன்ற தானியங்கி துப்பாக்கி வகை களும் இருந்தன. மேலும் பயங்கரமான வெடி குண்டுகளும் தேரா சச்சா ஆசிரமங்களில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த வகையான ஆயுதங்கள் மதரஸாக்களில் இருந்து கைப் பற்றப் பட்டிருந்தால் ஊடகங்கள் இந்நேரம் அதை கையாண்டிருக்கும் விதமே தனிதான். ஆனால் இந்து சாமியார்கள்ஊடகங்களுக்கு ஒரு விதி விலக்கு. http://www.bhindibazaar.asia/madrasas-called-terrorist-dens-machine-guns-seized-ashrams-irony/

**நீதிமன்றம்**

நீதிமன்றம் இந்த விஷயத்தில் ஹரியானாவின் மனோகர் கத்தார் அரசை கடுமையாக சாடி இருந்தது. இவர் முஸ்லிம்களுக்கு எதிராக அடிக் கடி ஏதாவது ஒருஅறிக்கையை வெளிவிடுவதை வாடிக்கையாக கொண்டிருந்தவர்.

மத்திய அரசின் வழக்கறிஞர் இந்தவழக்கில் இது மாநிலப்பிரச்னை என்று கூறிய போது "அப்படி என்றால் ஹரியானா இந்தியாவின் ஒரு பகுதி இல்லையா என கடுப்பாகி கேட்ட நீதிபதி மோடி பிஜேபியின் பிரதமர் அல்ல இந்தியாவின் பிரதமர் என்றும் கூறினார்.

"பஞ்ச்குலா" போன்ற நகரத்தை உங்கள் அரசியல் விளையாட்டுகளுக்காக எரிய விட்டு விட்டீர்கள் என்றும் நீதிபதி விளாசினார்.

இதற்கிடையேஇதற்கு பொறுப்பாக்கி ஒரு



துணை ஆணையர் ஒருவரை தற்காலிக வேலைநீக்கம் செய்திருப்பதாக கூறியதை ஏற்க மறுத்த நீதிபதி ஒரு துணை ஆணையர் ஒருவரை சிலுவையில் அறைந்து தப்பித்து கொள்ளலாம் என்று நினைக்கிறீர்கள், ஆனால் இதற்கெல்லாம் தப்பானவழி காட்டிய அரசியல் தலைவர்களை பற்றி என்ன சொல்கிறீர்கள் என்றும் கேட்டார்.

இதற்கிடையே முதலமைச்சர் தேரா சச்சா அமைப்பினருடன் சமூக விரோதிகள் கலந்தது இந்த கலவரத்துக்கு காரணம் என அறிக்கை விட்டதையும் நீதிமன்றம் கண்டு கொள்ள தயங்கவில்லை.

"உங்கள் முதலமைச்சர் இந்த அறிக்கையின் மூலம் தேரா சச்சா அமைப்பினர் எதையும் செய்ய வில்லை என்ற பிம்பத்தை ஏற்படுத்த முயல்கிறார், நீங்கள் இன்னமும் அவர்களுக்கு ஆதரவளிக்கிறீர்கள், நீங்கள் தான் இவ்வள விற்கும் காரணம்" என்றும் நீதிபதிகூறியுள்ளார்.

செய்தி ஆதாரம்: http://caravandaily.com/portal/he-is-pm-of-india-not-bjp-says-furious-high-court-after-haryana-riots/

**உமர் அப்துல்லா**

இதற்கிடையே கஷ்மீர் முன்னாள் முதல மைச்சர் உமர் அப்துல்லா பெல்லட் குண்டுகளும் பெப்பர் குண்டுகளும் கஷ்மீரிகளுக்கு மட்டும் தானா இது போன்ற கலவரக்காரர்களுக்கு கிடையாதா என்றும் நக்கல் அடித்துள்ளார்.

http://en.southlive.in/india/2017/08/25/pellet-guns-chilli-bombs-only-for-protesting-kashmiris-omar-abdullah-asks-while-agitated-ram-rahim-fans-go-on-rampage

இந்த வழக்கை வெளிக் கொணர்ந்தவர் ஒரு பத்திரிகையாளர் தான் இந்தபாலியல் பலாத்கார விவகாரத்தை வெளிக் கொணர்ந்தார். "பூரா சச்" என்ற தினசரியை நடத்திக் கொண்டிருந்த ராம் சந்தர் சத்ரபதி என்பவர் தான் 15 ஆண்டுகளுக்கு முன்பு இந்தவழக்கை அனைவருக்கும் தெரிய வைத்தவர். அவரை 24 அக்டோம் 2002 அன்று அவருடைய வீட்டிற்கு வெளியே வைத்து குர்மீத் ராம் ரஹீமின் ஆட்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர். இவ்வழக்கும் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

http://indiatoday.intoday.in/story/gurmeet-ram-rahim-rape-case-journalist/1/1033626.html



**கொலைகாரர்களிடம் பேரம் பேசிய பிஜேபி**

இதற்கிடையே ராம் ரஹீம் தேர்தலில் தங்களுக்கு ஆதரவாக செயல்பட்டால் அவருக்கு வழக்கில் இருந்து விடுபட உதவுவதாக கூறியதாக ராம் ரஹீமின் மகன் பிஜேபியின் மீது குற்றம் சாட்டியுள்ளார்.

**சாக்ஷிமகராஜ்**

இதற்கிடையே சாக்ஷி மகராஜ் என்ற பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் இதுபோன்று உச்ச நீதிமன்றமோ அல்லது உயர்நீதி மன்றமோ டெல்லி ஜூம்மா மஸ்ஜித் இமாம் மீது நட வடிக்கை எடுக்க முடியுமா என மடத்தனமாக கேட்டுள்ளார்.

**கோடிக்கணக்கான மக்கள் அவருக்கு ஆதரவளிக்கின்றனர். ஒரே ஒருவர் மட்டுமே அவருக்கு எதிராக புகார் அளித்திருக்கின்றார். கோடிக்கணக்கானவர்கள் கூற்று சரியா அல்லது ஒருவர் கூறுவது சரியா எனதனது பெரும்பான்மை வாதத்தை எடுத்து வைத்திருக்கின்றார்.**

http://www.siasat.com/news/bjp-mp-sakshi-maharaj-supports-dera-chief-says-can-sc-high-court-call-shahi-imam-jama-masjid-1227028/

**இதன் மூலம் தெளிவாக அவர் நீதிமன்ற அவமதிப்பை ஏற்படுத்தியுள்ளார். நீதிமன்றம் தானே முன்வந்து வழக்கு தொடருமா?**

http://www.siasat.com/news/bjp-mp-sakshi-maharaj-supports-dera-chief-says-can-sc-high-court-call-shahi-imam-jama-masjid-1227028/

**- அபூஅப்ரஹ்**

# கத்தார் முஸ்லிம்கள் இந்தவருடம் ஹஜ் செய்ய முடியாது...



பொதுவாக சசவூதி அரசாங்கம் கத்தார் அரசுடன் ஹஜ் ஏற்பாடுகள் குறித்து பேசுவது வழக்கம். இந்த வருடம் அது போன்ற பேச்சுகள் ஏதும் சவூதி அரசு செய்யவில்லை. எனவே இந்த வருடம் கத்தார் முஸ்லிம்களுக்கு ஹஜ் செய்யும் கடமையை சவூதி அரசாங்கம் தடுத்துள்ளது.

கத்தார் அரசுக்கு சவூதி அரசாங்கம் முன்னர் விதித்திருந்த தடையை தொடர்ந்து ஹஜ் செய்யும் கடமையையும் சவூதி மறுத்துள்ளது. சுதந்திரம் மற்றும் மரியாதைக்கான புருஸ்ஸெல் அடிப்படையிலான கூட்டமைப்பின் மத்திய கிழக்கு மற்றும் வடக்கு ஆப்பிரிக்காவின் தலைவர் (head of the Middle East <http://www.aljazeera.com/topics/regions/middleeast.html> and North Africa division at the Brussels-based Alliance for Freedom and Dignity) இதனை கடுமையாக கண்டித்திருந்தார்.

மெக்கா எந்த அரசுக்கும் சொந்தமானது கிடையாது. அது அனைத்து முஸ்லிம்களுக்கும் சொந்தமானது. சவூதிஅரசின் இந்த நடவடிக்கை இஸ்லாமிய விழுமியங்களுக்கு எதிரானது. மேலும் இது பன்னாட்டு மனித உரிமை ஒப்பந்தங்களுக்கும் எதிரானது என்று கூறியுள்ளார். http://www.aljazeera.com/news/2017/08/hajj-qataris-year-saudi-row-170825192148831.html




Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.